
www.padippakam.com

# பதியகடம்



கண்ணன்/காளிங்கராயன்

சி. சிவசேகரம்

சுகுணா திவாகர்

என்.டி. ராஜ்குமார்

மாரிமகேந்திரா

தய்.கந்தசாமி

ப்ரதீபா ஜெயசந்திரன்

ப. கல்பனா

வீ. ஏழுமலை

மு. கல்யாணிகுமார்

பெருமாள் முருகன்

இதழ் - 10 ★ ஆக - அக் 2001 ★ ரூ. 10/-

படிப்பகம்

www.padippakam.com

# கவிதை சொல்லிகள்



கவிதை எழுத இங்கு ஒருவரும் இல்லை.
கவிதையும் இல்லை.
இல்லாத ஒன்றை எப்படி எழுத முடியும்?
உணராத ஒன்றை எப்படிச் சொல்லமுடியும்.

ஆயுதங்களின்றித் தெருக்களில் நடமாட முடிகிறது
வேலைக்குச் செல்பவன் வீடு வந்து சேர்கிறான் மாலையில்
இனிப்புகளோடு பிள்ளைகளுக்கு
காதல் கவிதைகள் படித்துக்
காகித மலர்களால் கண்ணீர் அஞ்சலி செய்து
தன் காதலியின் படத்தை அலங்கரிக்க முடிகிறது
—ஒரு ஞாபகச் சின்னமாய்!
தூரத்தில் அவள் யாரோ ஒருவனோடு
அவன் யாரோ ஒருத்தியோடு
அரசின் முத்திரைத்தாள் கொண்டு
கொள்ளவும் கொடுக்கவும் முடியும்
அரசையே கூட!
ஜீரண மாத்திரைகளை உண்டு அலுவலகங்கள்
மந்தமாயிருக்கின்றன வழக்கம் போல்
நமக்கிருக்கும் ஒரே தொல்லை
இரவில் கொசுக்கடி மட்டுமே!
மற்றதெல்லாம் மரத்துப்போய்
நிம்மதியாய் இயங்குகிறது உலகம்
அஜீரண அவஸ்த்தைகளைக் கவிதை என
பட்டியலிட்டு பண்டிதர்கள் அடுக்குகிறார்கள்
புத்தக டப்பாக்களில்

இவர்களிடம் கேட்டால் சொல்வார்கள் —
சாவின் நிழலை ருசித்தவன் எவனோ
இருத்தலைக் கேள்விக்குள்ளாக்குபவன் எவனோ
மனைவி பிள்ளைகளைப் பறிகொடுத்தவன் எவனோ
வயிற்றுக்காய் மானமிழந்தவன் எவனோ
சாதியின் பெயரால் கேவலப்படுத்தப்பட்டவன் எவனோ
ஒவ்வொருவரும் சொல்வார்கள்
ஓர் அழகான கவிதையை!

பிரதீபா ஜெயச்சந்திரன்



படிப்பகம்

www.padippakam.com

# புதிய தடம்

puthiyathadam@yahoo.com

44, லெட்சுமண தீர்த்தம் தெரு,
ராமேஸ்வரம் - 623 526.
தொலைபேசி : 22456
வீடு 22482
STD CODE - 04573

அன்பிற்கினிய பத்திரிக்கை விற்பனையாளருக்கு ...

வணக்கம்.

புதிய தடம் என்ற இலக்கிய இதழை கடந்த இரண்டாண்டுகளாக நடத்தி வருகிறோம். இத்துடன் இணைத்திருப்பது 10வது இதழ். இனிவரும் இதழ்களை இதைவிட கூடுதல் கவனத்துடன் நன்கமைந்த கட்டமைப்பில் வெளியிட உத்தேசித்துள்ளோம்.

தமிழகமெங்கிருந்தும் நவீன கலை இலக்கிய படைப்பு முயற்சிகளை தொடர்ந்து பதிவுசெய்து வருகிறோம். சந்தா சேர்ப்பது, பரவலாக விற்பனைக்குட்படுத்துவது இவற்றின் வாயிலாகத்தான் மேற்கானும் இலக்குகளுடன் நமது முயற்சியினை சாத்தியப்படுத்த முடியும் என்று நம்புகிறோம்.

தாங்கள் நல்ல சிறுபத்திரிக்கைகளின் விற்பனைக்கும், வாசகர்களிடம் பரவலாக சென்றடைவதற்கும் தொடர்ந்து உதவி வருவதாக நண்பர்களின் வாயிலாக அறிந்தோம்.

இத்துடன் தங்களின் பார்வைக்கென புதிய தடம் 10வது இதழின் ஒரு பிரதியை இணைத்துள்ளோம், படித்தவுடன் தங்கள் விற்பனை இதழ்களில் ஒன்றாக புதிய தடம் இடம்பெறும்படி பரிசீலனை செய்யுங்கள்.

எத்தனை பிரதி தேவைப்படுகின்றன என எழுதுங்கள். அனுப்பிவைக்கிறோம்.

விற்றபின்னர் அல்லது தங்களின் நிபந்தனைகளின்படி பணம் பெற்றுக்கொள்கிறோம். விற்ற பிரதிகளுக்கான தொகை எப்படி பெற்றுக்கொள்ளலாம் என்பதை குறிப்பிடுங்கள்.

விற்பனையாளர் கழிவு 25%.

விற்பனை தொடர்பான தங்களின் பதிலையும், இதழின் படைப்புகள் குறித்து தங்களின் விரிவானபார்வையையும் எதிர்நோக்கியுள்ளோம்.

நன்றி.

அன்பும் தோழமையும்

மேகவண்ணன்

மேகவண்ணன்
புதிய தடம் இதழுக்காக.,

படிப்பகம்

www.padippakam.com

# கலகக்காரர்களும் கலாசார பீடங்களும்

**க ண் ண ன் / கா ளி ங் க ரா ய ன்**

*ஒரு நீர்க்கயிறாய் வலியின்றிப் பிணைத்திருக்கும்*
*உன் வார்த்தைகளி லிருந்து மீள*
*வேறென்ன வழி மீந்திருக்கிறது சொல்!*
*கனிவு ததும்பும் உன் விழிகள் ஒளிர*
*பரிவு சுமந்து வரும் அவ்வார்த்தைகள் புரட்டும்*
*உனதந்தக் குரல்வளையைக் குதறுவதைத் தவிர.*
*–ம. மதிவண்ணன்.*

கடந்த நான்கு இதழ்களாக காசு கண்ணன் தன் கள்ள மவுனத்தின் சிறகடிப்பில் உதிர்த்துவிட்டுப்போன பொய்–புனைச்சுருட்டுகளை எமக்குத் தெரிந்த அளவில் அடையாளங்காட்டவே கீழ்க்கண்ட சில செய்திகளை எழுத வேண்டிய தேவை எமக்கு உள்ளது. காசு கண்ணன் ஆசிரியர் என்ற ஐம்பத்தில் பக்கம் பக்கமாகத் தன் பொல்லாச் சிறகு விரித்துக் காலவெளியில் நீந்திக் கொண்டிருக்க–ஸ்பார்ட்டகஸ்தாசன், அ.மார்க்சை நோக்கி கல்லடிபட்ட நாயாய் ரெண்டு பக்கத்துக்கு ஊளையிட . . . நாம் மட்டும் 750 சொற்களுக்குள் இழுத்துப்புடிச்சு வைக்கவேணும். அதிலும் காலச்சுவடின் பார்ப்பனீயத்தை அம்பலப்படுத்தும் பகுதிகளை நம்ம குழலூதும் கண்ணன் தமது தருமச் சக்கரத்தால் Emasculate பண்ணிவிட்டு (காயடித்து விட்டு)த் தான் வெளியிடுவார். அந்த வெட்டி – ஒட்டி (Editon) வேலையின் மூலம் நாம் எழுதியதை தனக்கு ஆதரவான ஒன்றாகக்கூட மாற்றிவிடும் கூர்மதியும், குறுமதியும் கொண்ட நாகரீகக் கனவான் தான் நம்ம அண்ணன் காசு கண்ணன்.

சென்ற ஆண்டு இறுதியில் சென்னையில் நடைபெற்ற மரணதண்டனைக்கெதிரான எழுத்தாளர் மாநாட்டில் சுரா கனபாடிகளும், மந்நுஷ்யபுத்ர இஷ்டமித்ர பந்துக்களும் ப்ரசன்னமாயிருந்தார்களேயொழிய காசு கண்ணன் அரங்கில் காணப்படவில்லை. ரெண்டு நாள் தள்ளி நடைபெற்ற இடதுசாரி / தமிழ்தேசிய அமைப்புகள் நடத்திய–வெகுமக்கள்கலந்துகொண்ட–பேரணி பொதுக்கூட்டத்தில் (பா.செ,எஸ்.வி.ஆர் போன்ற சிலரைத் தவிர) மேற்கண்ட எழுத்தாளப் புடுங்கிகள் எவரும் கலந்து கொள்ளவில்லை என்பது இங்கே கூடுதல் செய்தி. மக்கள் வேறு எழுத்தாளர்கள் வேறு அல்லவா?

சரி. . . விடயத்திற்கு வருவோம்.

மாநாட்டில் தினமணிக்காக எழுதப்பட்ட கட்டுரையை அட்சரம் பிசகாமல் ரெண்டு ரெண்டு தடவை ஒலியலைகளாக உமிழ்ந்தபின் பிதாமகர் தோரணையில் கீழிறங்கி வந்த சுரா கனபாடிகளை சோதாப்பயல் வளர்மதி வழிமறித்து. . .“உங்களுக்கு இலக்கிய உலகின் எஸ்.வி. ரங்காராவ் என்று பேரிட்டிருக்கிறோம்'' என்பதாகச் சொன்னார். கனபாடிகள் உள்ளுக்குள் வியர்த்துப் போனாரோ என்னவோ வெளியே பெருந்தன்மையாய்ப் புன்னகைத்துத் தலையசைத்தார்.

கூட்டமுடிவில் SVR–ஐ எதிர்கொண்டு கேள்வியெழுப்பியபோதுகூட (ஹெய்டெக்கரைப் படிச்சிருக்கியா. . . ?) அவரின் எழுத்துக்களுக்கும் தத்துவப் புரிதல்களுக்கும் மாறான பார்வைகளே தன்னால் வைக்கமுடியும் என்ற கிளர்வினால், வளர்மதி சொற்களைச் சுழட்டி எறிந்தாரே தவிர. . . நாகரிகக் கனவான்களைப் போல – தனி மனிதக் காழ்ப்பில் “ஞானபாரதி'' வகையான உள்முகத்தீவிர இலக்கிய ஆய்வுக் கெல்லாம் ‘குடிகாரன்' வளர்மதி போகவில்லை. மேலும் பொழிலனுடன் வளர்மதி எவ்வித போதையாடல்களையும் தொடங்கவில்லை. கண் முன்னே சிகப்பாய்ச் சுழலும் தமிழ்ப்புரட்சியை தனது தள்ளாட்டத்தால் வளர்மதி தள்ளிப்போடுகிறானென்ற “அறச்சீற்றத்தில்'' வன்முறைக்கெதிரான–மரணதண்டனைக்கெதிரான–மாநாட்டு அரங்கின் “வெளியில்'' தன் புரச்சிக் கரங்களால் (அந்த நேரத்தில் அவரிடம் வேறு ஆயுதம் எதுவும் இருந்திருக்கவில்லை) போட்டு புரட்டி எடுத்துவிட்டார். “டேய் குடிகாரப்பயலே. . . நீயெல்லாம் மக்களுக்காகப் புரச்சி பண்ணப் போறயா? “குடிகாரா. . . குடிகாரா. . . என்று புரச்சிகர முழக்கமிட்டதை (மணியரசன் மகனும் அருகில் இருந்ததாய் நினைவு) நாங்கள் நேரில் கண்ணுற்றுக் களித்தோம் என்க!.

இன்றைய தமிழ் இலக்கியச் சூழலில் ‘விஞ்ஞானரீதியாக' பார்ப்பனீய ஆளுகைகளை கட்டியெழுப்பும் காலச்சுவடும் அதைத் தகர்ப்பதைத் தவிர வேறு வழியேதுமில்லையென்றியங்கிவரும் மாற்றுச் சிந்தனையாளர்களின் எழுத்துகளுக்குமிடையே தமிழ் இலக்கியம் தத்தளித்தபடிதான் மேலெழும்பி வரவேண்டியுள்ளது. ஆய்வுகளின் நுண்ணரசியலையும் அவை எழுப்பும் நியாயமான கேள்விகளையும் எதிர்கொள்ளத் திராணியற்றுப்போய் குடிவெறி யன், போதைக்காரன், பெண்பித்தன். . . போன்ற பிம்பங்களை


படிப்பகம்

www.padippakam.com

உருப்பெருக்கிக் காட்டுவதென்பது வக்கிரம் நிறைந்த உள்மன அரிப்பன்றி வேறென்ன?.

குடிகாரனோ போதையிலிருப்பவனோ ஒரு உரையாடலை தொடங்கமுடியாதென்பதும், அப்படியே அது சாத்தியப்பட்டாலும் அவ்வுரையாடல் தீவிர இலக்கியமற்றதாய்த்தான் இருக்குமென்பதும் கண்ணனின் இடுகுறிப்பெயரான காலச்சுவடின் மனுநீதிப் பிரதி சொல்லும் அடிப்படை விதி போலும்.

அரசு அரங்குகளில், உலகத்தமிழ் மாநாட்டில், RSS கூட்டத்தில் நமது கலகக் கண்மணிகள் இம்மாதிரி சிலுமிசம் எல்லாம் செய்வார்களா? என்று காசு கண்ணன் கேட்கிறார். அவர்களெல்லாம் தீவிர இலக்கியம் படைப்பதற்கோ–தீவிர மாற்றுக்கலாச்சாரத்தை நிறுவுவதற்கோ. . . தம்மை மட்டுமே நேர்ந்து விட்டிருப்பதாகவோ, கடுமையான தத்துவ விசாரம் செய்பவர்களாகவோ தம்மைப் பிரகடனம் செய்து கொள்ளாதவர்கள். மேலும் மாற்றரசியல்,உன்னதம்/புனிதம் . . . காலத்தை விஞ்சி நிற்கும் படைப்பு (ஒன்றுக்கொன்று முரணான) என்று ஜல்லியடித்து இலக்கிய தாயத்துகள் விற்பவர்களுமல்ல. அவர்கள் தங்களது கடைகளை வெகு வெளிப்படையாகத் (open market) திறந்து வைத்திருக்கிறார்கள். காசு கண்ணன் மொழியில் சொன்னால் அவர்கள் வெகுசனக் கலாச்சாரத்தை உண்டுவாழும் கோணங்கிகள். அங்கெல்லாம் அச்சத்தினால் அல்ல இயல்பாகவே போகவேண்டிய அவசியம் மாற்றுக்களைத் தேடுவோர்க்கு இல்லை. ஆனால் Micro முதல் Mega வரையில் பல்வேறு கூட்டங்களை 'ஒருங்கிணைத்து' 'ஒழுங்கு' செய்துவரும் காசு கண்ணன் வேண்டுமானால் RSS முகாம்களுக்குச்சென்று எப்படி அவர்களால் சின்ன முணுமுணுப்புகள் கூட எழாதவாறு, குடிகாரர்களின் கலாட்டாக்கள் இல்லாதவாறு ஒழுங்காகக் கூட்டங்களை நடத்த முடிந்தது என்று கண்டும் கேட்டும் வரட்டும். அங்கிருந்து பெறும் அனுபவத்தில் கலாச்சாரக் காவல்துறை ஒன்றை நிர்மானிக்கட்டும். காலச்சுவடு காவல்துறை உருவாவதில் எங்களுக்கெல்லாம் மிக்க சந்தோஷமே. உலகத்தரம் வாய்ந்த லத்திகளை ஸ்ரீராம் சிட்டுக்கம்பெனி ஸ்பான்சர் செய்ய–மாற்றுகளைத் தேடுபவர்களின் கொட்டையை/யோனியை நோக்கிச் சவட்டுவதற்கான வலுமிக்க காலணிகளை பொள்ளாச்சி மகாலிங்கத்தின் தொழிற்சாலை வழங்கக்கூடும். குப்பாயம் வழங்கத்தான் இருக்கவே இருக்கிறது தரணி புகழ் சுரா பட்டு சென்டர். தொடரட்டும் காலச்சுவடின் கலாச்சாரக் காவல்பணி.

'' புபி, ஜி.நா, தகழி. . . என்று செத்துப்போன–சுரா, சேரன். . . போன்ற வாழும் பிம்பங்களை விற்றுத்தானே பிழைப்பு நடத்திக் கொண்டிருக்கிறீர்கள். அதை விட அனாதைப் பிணத்தைப் பிளாட்பாரத்தில் கிடத்திக் காசு கெண்டி வயிறு வளர்ப்பவன் எவ்வளவோ உசத்தியல்லவா. . .? ''

இந்த நூற்றாண்டு தமிழ்க்கலாச்சாரச் செயல்பாடுகளின் உன்னத நிகழ்வெனப் பீற்றித்திரியும் தமிழினி 2000 குறித்து கண்ணன் & Co விற்கு சொல்லிச் சொல்லி மாளவில்லை. அ.மார்க்ஸ்,வளர்மதி, ஆர்.ஆர்.சீனிவாசன், அப்பனசாமி, சாரு. . . . போன்றவர்களைப் பக்கம் பக்கமாய்த் தூற்றியும், மிரட்டியும் எழுதி வரும் காசு கண்ணன் தமிழினி 2000 குறித்து நியாயமான விமர்சனங்களை முன்வைத்து–நிறப் பிரிகை, காலக்குறி, சமவெளி, தாமரை, எக்ஸில். . . . போன்றவற்றில் வந்த விமர்சனங்களுக்கு இதுகாறும் கள்ளமௌனமே சாதித்துக் கொண்டிருக்கிறார். உலகலாவிய தமிழ்படைப்பாளிகள்/வாசகர்களைத் திரட்டி தூக்கி வந்தும், பில்கேட்ஸின் மூளையில் உள்ள பாதிமடிப்புகளை இரவல் பெற்று தொழில் நுட்பமாக்கிச் செயல்பட்டும், ரூ 1,60,000 க்கு புத்தகங்களை விற்றும் லாபமடைந்த காசு கண்ணன், பொறாமை பிடித்தலையும் கலாட்டாக்காரர்களைப் பார்த்து எனக்குக் கூச்சம் ஏதுமில்லையென்றும், கண்டதை விற்றுப் பிழைக்கவில்லை நாங்கள் '' மதிக்கும்'' எழுத்துக்களையே விற்று இலக்கியச்சேவை,இடியாப்பம், ரோஸ்ட். . . . எல்லாம் செய்து லாபமும் ஈட்டுகிறோம் என்கிறார். ('மதிப்பு' என்பதற்குப் பின்னே எவ்வித அரசியலும் இல்லை என்ற பாவனையில்). எங்களுக்குத் தெரிந்து 'கண்டது' என்று எதுவும் கிடையாது. நரிப்பல்லிலிருந்து kalachuvadu.com வரைக்கும் எல்லோரும் அவரவர் சரக்குகளை உரிய முறையில் விற்று வயிறு வளர்க்கிறார்கள். காசு கண்ணன் இலக்கியப் போர்வையில் காசு பண்ணுவதைக்கூட சரி தொலையட்டும் 'பிழைப்பு' என்று கருதலாம். ஆனால் அதனூடாகத் திட்டமிட்டுக் கட்டியெழுப்புகிற பிம்பங்களும், மதிப்பிற்குரிய படைப்பாளிகளும். . . . தமிழ் இலக்கியத்தின் அத்தாரிட்டிகளும், உன்னத இலக்கியத்தின் உயிராகவும் மயிராகவும் தம்மையே பாவித்துச் செயல்படுவதுதான் அருவருப்பூட்டுகிறது. மேலும் இப்படி . . . எழுத்தாளரின் வறுமை, சுரண்டல், ராயல்டி. . . . என்றெல்லாம் பேசித்திரிவது தான் எரிச்சலை ஏற்றுகிறது. அடங்கொக்காமக்கா! காலச்சுவடு இதுவரை வறுமையில் வாடும் தீவிர 'இலக்கியப் படைப்பாளிகளுக்கு–இளம்படைப்பாளிகளுக்கு–எழுத்தை மட்டுமே உண்டு வாழும் எளிய படைப்பாளிகளுக்கு . . . அவர்தம் செம்பதிப்புகளை வெளியிட்டு ஊக்கப் படுத்தி–அவர்களுக்கு லட்சலட்சமாய் உரிமைத் தொகையை அள்ளி வழங்கி இலக்கிய ஜீவனிற்கு உயிர்வார்த்துக் கொண்டிருக்கிறது.

எப்படிக் கண்ணன் உங்களால் கூச்சப் படாமல் இருக்க முடிகிறது?

தமிழின் மிகச் சிறந்த படைப்பாளிகள் என்று ஒரு சிலரை ஊதிப்பெருக்கி விடுவது, பின் சில மாதங்கள் கழித்து அவர்களின் தொகுப்புகளை செம்பதிப்பாகக் கொணர்ந்து காசு பண்ணுவது எந்த அளவிற்கு தீவிர இலக்கியம் வளர்க்கப் பயன்படும்?

புபி, ஜி.நா, தகழி. . . . என்று செத்துப் போன– சுரா, சேரன். . . போன்ற வாழும் பிம்பங்களை விற்றுத்தானே பிழைப்பு நடத்திக் கொண்டிருக்கிறீர்கள். அதை விட அனாதைப் பிணத்தைப் பிளாட்பாரத்தில் கிடத்திக் காசு கெண்டி வயிறு வளர்ப்பவன் எவ்வளவோ உசத்தியல்லவா. . .? ஜெயமோகனால் எடுக்கப்பட்ட யதியின் நேர்காணலில் வந்திருக்க வேண்டிய அவரின் பார்ப்பன! பார்ப்பனீய எதிர்ப்புக் கூறுகளை வெட்டியெறிந்து விட்டு யதியை ஆகமங்களுக்குள் மட்டும் நிறுத்திக் காட்டியது – காலச்சுவடு கூட்டங்களில் புத்தகம் விற்க உதவும் கவிதை முயற்சியாளர்களின் ரெண்டு வரி, மூனு வரி கவிதைகளைக் கட்டங்கட்டி வெளியிட்டு அவர்களைக் கவிஞனாக்கி விட்ட போதையின் பிடியில் வைத்துக் கொண்டு களவேலை வாங்குவது. . . . போன்ற இவை எல்லாம் எழுத்தாளச்சுரண்டல் அல்லாமல் வேறென்ன. . .?

தீவிர மாற்று இலக்கிய நடவு, கலாச்சாரப் பயிர்வளர்ப்பு, அற விளைச்சல். . . என்று அண்டப்புளுகுகள் எல்லாம் புளுகிவரும் காலச்சுவடு &Co வினர் தமிழில் தீவிரமான மாற்று சிந்தனைகள் எவற்றையேனும் தொடங்கி வைத்ததுண்டா? அவைகள் குறித்த உரையாடல்களை–தம்மை மட்டுமே முன்னிறுத்தாமல்–நேர்மையாக நடத்தியதுண்டா? மாறாக கடந்த பத்து ஆண்டுகளுக்கும் மேலாக பல்வேறு எதிர்ப்புகளுக்கிடையேயும் மாற்று சிந்தனைகளை உருவாக்கி



படிப்பகம்

www.padippakam.com

வளர்த்தவர்கள் பலர் இருக்க அதற்கான அறுவடைகளைக் கைக்கொள்ளும் வேலையைத்தானே காலச்சுவடு செய்து கொண்டிருக்கிறது. இன்றைக்கு தலித் இலக்கியம்/அரசியல், மரணதண்டனை எதிர்ப்பு, மனித உரிமைகள், மாற்றுக்கல்வி, தமிழ்மொழி வளர்ச்சி. . . போன்ற கருத்தாடல்களை முன்னிறுத்திப் பேசுவதும் – எல்லாவற்றுக்கும் தான்தான் அத்தாரிட்டி என்று பாவனை கொள்வதும் எவ்வகையில் நியாயமாகும்?

மட்டியும் நானே – மாற்றும் நானே. . . என்று தொடர்ந்து பிதற்றிவரும் கண்ணனின் காலச்சுவடு தமிழின் நவீன இலக்கியத்துக்கு கணிசமான பங்களித்துள்ள தலித் கவிஞர்கள், சிறுகதையாளர்களின் எத்துனை படைப்புகளை வெளியிட்டு ஊக்கப்படுத்தியுள்ளது? மாறாக தலித் படைப்புகள் மீதான விமர்சனங்களை மட்டுமே வெளியிட்டு இவர்கள் விமர்சிக்கப்பட வேண்டியவர்கள்/அங்கீகரிக்கப்பட வேண்டியவர்கள் அல்ல. . . என்ற நவீன தீண்டாமைக் கோட்பாட்டைக் கடைபிடித்து வருவது எவ்வளவு அருவருப்பான பார்ப்பனீய உத்தி ?

தமிழில் கலாச்சார மாற்றங்களுக்காகப் போராடியவர்கள் எவரும் இப்படி Side Business ஆக இலக்கிய வியாபாரமெல்லாம் செய்ததில்லை.

*தலித் இலக்கியமா!*

*இதோ சுரா! இந்தாப்புடி தோட்டியின் மகன் (லாபம் :1)*

*கல்விப் பிரச்சனையா!*

*இதோ சுரா! இந்தாப் புடி வசந்திதேவியுடன் உரையாடல் (லாபம்:2)*

*புலம்பெயர் இலக்கியமா!*

*இதோ சுரா! இந்தாப்புடி சேரன் கவிதைகள் (லாபம் :3)*

*உன்னத இலக்கியமா!*

*இதோ சுரா! பிம்பங்கள் இந்தாப்புடி சுரா, புபி, ஜிநா– தொகுப்புகள் (லாபம். . .)*

*பெண்ணிய இலக்கியமா!*

*இதோ சுரா! இந்தாப் புடி அம்பை, சல்மா நூல்கள் (லாபம். . .)*

இப்படி all in all அழகுராசாவாக சுரா – கண்ணன் – காலச்சுவடு. . . என்று வந்து வாய்த்தது தமிழுக்குப் பெரும்பேறுதான்.

காசு கண்ணன் உருவாக்கிவரும் சைலண்ட் பார்ப்பனியக் கூடம் கலாச்சார மாற்றுத்தளம் அல்ல. மாறாக ஒழிக்கப்பட வேண்டுமென ஏற்கனவே பேனா தூக்கிய ஒரு நூறு ஆண்டுகளின் எதிர்மரபுக் கலாச்சார விளம்பிகளின் ஆளுமைகளைக் காயடிக்கும் மடமே. எவ்விதக் குற்றவுணர்வும் கூச்சமுமின்றி கலாச்சார வன்முறையை செலுத்துபவர்கள் மாற்றுக்களைப் பற்றியும் விடுதலை குறித்தும் பேசுவதற்கு என்ன யோக்கியதை இருக்கிறது?

எழுப்பப்படும் எல்லாக் கேள்விகளுக்கும் எழுப்பியவரே விடை வைத்திருக்க வேண்டும் என்றும் – எல்லாக்கேள்விகளும் கேட்கப் பட்டுவிட்டன – எல்லா பதில்களும் சொல்லப்பட்டுவிட்டன என்றும் – கேள்வியும் பதிலும் கலாட்டாக்களின் புறத்தோலே என்றும். . . . வரையறைகளை உருவாக்கும் இந்தக் கலாச்சார மீட்பர்கள் பின்னாளில் மிகப்பெரிய பாசிஸ்டுகளாக உருவாகி வளர்வதற்கான இலக்கணங்களைக் கொண்டிருக்கிறார்கள். ■

## தலித் படைப்பாளிகள் மாநாடு
## செப்டம்பர் 2001

*கடந்த பத்து ஆண்டுகளாக முனைப்பு பெற்று வரும் தலித் கலை இலக்கியச் செயல்பாடுகள் தற்போது எவரும் புறக்கணிக்க முடியாத அளவுக்கு வளர்ச்சியடைந்துள்ளன. தலித் படைப்பாளிகள் தேசிய அளவில் பல விருதுகளைப் பெற்றுள்ளனர். ஆங்கிலம் உள்ளிட்ட பிற மொழிகளில் தமிழ் தலித் படைப்புகள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.*

*ஆனாலும்கூட இப்போதும் தலித் படைப்புகளை வெளியிட பத்திரிக்கைகள் ஆர்வம் காட்டுவதில்லை, பதிப்பாளர்கள் முன் வருவதில்லை. பெரும்பான்மையான தலித் படைப்புகள் சுய முதலீட்டின் அடிப்படையிலேயே நூலாக்கம் பெறுகின்றன. சமூக அரசியல் தளங்களில் தொடரும் புறக்கணிப்பே இங்கும் நிலவி வருகிறது.*

*கடந்த பத்தாண்டுகளில் தமிழில் தலித் இலக்கியச் செயல்பாடுகள் பற்றி மதிப்பீடு செய்யும்போது தலித் அல்லாதவர்கள் இதில் ஆற்றிய பங்களிப்பைக் குறிப்பிட்டாக வேண்டும். தலித் இலக்கியத்தை முன்வைத்து அவர்கள் செய்த சர்ச்சைகளால் அதற்கு பரவலான கவனிப்பு கிடைத்தது உண்மைதான். ஆனால் தலித்துகளின் தனித்துவமான பிரச்சனைகளை அவர்கள் புரிந்துகொள்ள முடியாமல் போனதால் தமது பிரச்சனைகளையே தலித்துகளின் பிரச்சனைகளாக முன்வைக்கின்ற நிலை ஏற்பட்டது. அது தலித் பிரச்சனையின் ஆழத்தையும் தீவிரத்தையும் புறக்கணிப்பதில் சென்று முடிந்தது. இன்று அந்த நிலை மாறிவிட்டது. காற்று கிளப்பிய புழுதி மழை வந்ததும் அடங்குவது போல நல்ல படைப்புகளால் வெற்று சர்ச்சைகள் அடங்கிப் போய்விட்டன. படைப்பு மனநிலை என்பது போராட்டத்தோடு தொடர்பு கொண்டிருக்கும் என்பதற்கு உலகில் பல உதாரணங்களைச் சொல்ல முடியும். தமிழ் தலித் படைப்பாளிகளும் இதில் விதிவிலக்குகள் அல்ல என்பதை அவர்கள் நிரூபித்து வருகின்றனர்.*

*அயோத்திதாசப் பண்டிதருக்கு முன்னும் பின்னும் விரிகிற அறிவுப்பாரம்பரியத்தில் வரும் தலித் படைப்பாளிகளுக்கு வழிகாட்டிகளைத் தேடி அலையவேண்டிய தேவை இல்லை. ஒருமைக் குணம் கொண்ட தம் பிரச்சனைகளைத் தாமே முன்வைக்க அவர்கள் எடுக்கும் முயற்சிதான் இந்த மாநாடு. இந்த மாநாட்டில் கலந்து கொள்ளும்படி இலங்கை உள்ளிட்ட ஏனைய நாடுகளில்வாழும் தமிழ் தலித் படைப்பாளிகளை அழைப்பதென முடிவு செய்யப்பட்டது.*

*மாநாட்டில் தலித் படைப்புகள் அடங்கிய தொகுப்பொன்று மாநாட்டுக் குழு சார்பில் வெளியிடப்படும். விருது பெற்றுள்ள தலித் படைப்பாளிகள் கௌரவிக்கப்படுவார்கள்.*

*மாநாட்டுக்குழு:* கிருத்துதாஸ்காந்தி, சிவகாமி, குன்றம் ராமரெத்தினம், உஞ்சை ராசன், புனிதப்பாண்டியன், இந்திரன், கே.ஏ.குணசேகரன், அழகியபெரியவன், அமைதிஅரசு, அன்பாதவன், அபிமானி, துரைக்கண்ணு *மற்றும்* ரவிக்குமார் *ஆகியோர்.*

*தன்னை ஒரு படைப்பாளியாக உணர்கிற எந்த ஒரு தலித்தும் மாநாட்டில் கலந்து கொள்ளலாம்.*

விபரங்களுக்கு :

ரவிக்குமார்
28,வீரபத்திரசாமி கோயில் தெரு, லால்பேட்டை,
பாண்டிச்சேரி-605 008.
தொ.பே. 0413-253666

தலித் படைப்பாளிகள், படைப்புகள் குறித்த தொகுப்பிற்கான தகவல்களை கீழ்காணும் முகவரிக்கு அனுப்பலாம்.

விழி.பா.இதயவேந்தன்,
18 ஆமிதா தோட்டம், சாலாமேடு,
கண்டமானடி அஞ்சல், விழுப்புரம் வட்டம் -605 401
தொ.பே. 04146-70512


படிப்பகம்

www.padippakam.com

நூல் மதிப்புரை

# மைலாஞ்சி

சி.சிவசேகரம்

கவிதைகள்
ஹெச்.ஜி.ரசூல்
சரம் வெளியீடு,
24/77 ஞானியார்வீதி,
தக்கலை. 629175.
தமிழ்நாடு.
பக்கம் 115+7
விலை ரூ 50/ -

கவிஞர் ரசூலின் தொகுதியின் பின் அட்டையில் இஸ்லாமியர்களின் ஒரங்கட்டப்பட்ட வட்டார மொழிக்கூறுகளும், பேச்சு வழக்கும், தமிழ் அரபு, தமிழ் மலையாளச் சொற்குறியீடுகளாகி இன்னொரு அடையாளமாகப் பிறப்பெடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கவிதைத் தொகுதியை வாசித்து முடித்த பின்பு ரசூல் பயன்படுத்தியுள்ள மொழி மேற்குறிப்பிட்ட வட்டார மொழிக்கூறுகளும் பேச்சுவழக்கும் என்ற கோட்பாட்டுக்கும் அப்பால் சில திசைகளில் நகருகிறது என்று தென்பட்டது. அவர் பயன்படுத்தியுள்ள அரபுச் சொற்கள் யாவும் தமிழக முஸ்லிம்களது அன்றாட வாழ்வில் புழங்குவனவா என்று கூறுவது எனக்கு இயலாத காரியம். எனினும் இந்தியப் புராண இதிகாச மரபிலிருந்து படிமங்களையும், உவமைகளையும் பெறுவதற்கு ஒருவருக்கு உள்ள உரிமை, கிறிஸ்தவ, இஸ்லாமிய மரபிலிருந்து கவிதைக்கான சரக்கைப் பெறுவதற்கு இன்னொருவருக்கு உண்டு.

இவ்வாறு பெறப்படும் படிமங்கள் எவ்வளவு தூரம் அதற்கு வலுவூட்டுகின்றன என்பதுதான் கவிதைக்கு முக்கியமானது. அவை வாசகனை எவ்வளவு எளிதாகவும், இயல்பாகவும் சென்றடைகின்றன என்பதும் முக்கியமானது. ஒன்றுமில்லாத விடயம் ஒன்றைச் சொல்லப் புதிர் போடுகிற கவிதைகட்குள் புகுந்து, ஆய்ந்து புரிந்து கொள்ளும்படி வலியுறுத்தும் எவருக்கும் ரசூலின் தெரிவுகள் பற்றி மறுக்க உரிமை இருக்க முடியுமா?

ரசூல் தந்துள்ள விளக்கக் குறிப்புகளின் உதவி யில்லாமலேயே என்னால் விளங்கிக் கொள்ளக்கூடிய சொற்கள் பல உள்ளன. மறுபுறம் சில விளக்கங்கள் குழப்பத்துக்கே இடமளிக்கின்றன. உதாரணமாக– 'புராக்' என்பது, அதிவேகமாகச் செல்லும் கழுதை இன மிருகம் என்பதற்கும் மேலாக, மின்னல் வேக வாகனம் என்றும் சொல்லும்போது (பக்.38) விளக்கம் வலு இழக்கிறது. இவ்வாறே '*மைக்கொட்டி*'க்கு '*மயிர்க்கொட்டி*'– என்ற விளக்கத்தை விலக்கி அதை ஒரு அட்டைப்புழு வகையாக்கியிருப்பது அவசியமில்லை.(பக்.79).

ஸுன்னிகள் நபிகள் நாயகத்தின் வழிமுறைகளைப் பின்பற்றுவோர் என்றும், ஷியாக்கள் நபிகள் நாயகத்தின் மருமகனார் இமாம் அலியின் சிந்தனை முறைகட்கும் முக்கியத்துவம் கொடுப்பவர்கள் என்று (பக்.99)விளக்கும்போது ஷியாக்கள் நபிகள் நாயகத்தை ஏற்பதில் குறைபாடுடையோர் என்ற எண்ணம் ஏற்படுகிறது. வரலாற்றில் ஷியா–ஸுன்னி வேறுபாட்டுக்குச் சில சமூக அரசியற் காரணிகள் இருந்தன. அவற்றைக் கூறாதவிடத்து, மேற்படி கவனயீனமான சொற்பிரயோகம் ஷியாக்கள் பற்றி இருக்கக்கூடிய தவறான எண்ணங்களை வலுப்படுத்துகின்றன.

ரசூலின் மொழிப்பிரயோகத்தில் அரபுச் சொற்களின் பிரயோகத்தை விடப் பிரச்சனைகுரியன தமிழ்ச் சொற்களின் ஒழுங்கும், தெரிவும் என்றே சொல்வேன்.

''*விருட்ச மரத்தின் கனியை*'' (பக்.1)

''*வயிற்றில் கர்ப்பம் தரித்த பிள்ளை /வாப்பாவின் அடையாளத்தை*'' (பக்.7)

''*கனவுகள் குதூகலிக்க/புத்தகக் கட்டுகளை இடுப்பில் சுமந்து*'' (பக்.24)

''*சல்மாவின் திருமணத்துக்குக்கூட பிரம்மாண்ட ஏற்பாடு/பிரியாணி சாப்பாட்டோடு/ குட்டியாப்பாவின் குடும்பம் மட்டும் வரவில்லை/*(பக்.35)

மேற்கூறியவற்றில் உள்ள சொற்பிரயோகக் குறைபாடுகளை நான் விவரிக்க அவசியமில்லை என நினைக்கிறேன். இவைபோகப் பல வாக்கியங்களைத் தலைகீழாக எழுதுவதற்கான தேவை இல்லை என்றே நினைக்கிறேன்.

ரசூலால் தமிழகத்துப் புதுக்கவிதையின் பண்டித மொழி நடையிலிருந்து விடுபட இயலவில்லை என்றே பல இடங்களில் தென்படுகிறது. இருண்மையான மொழிநடை கவித்துவத்தின் அளவுகோல் என்று நான் எண்ணவில்லை. சில சமயங்களில் அடுத்தடுத்து வரும் படிமங்களுக்கு இடையிலான உறவு தெளிவாக இல்லாததுபோக சில வாக்கியங்கட்கு அர்த்தமில்லாமல் அமைந்துள்ளமை ஒரு பெரிய பலவீனமாக உள்ளது.

''*கடல்களும் மேகங்களும்/பூமத்திய ரேகைகளும்/அவ்வப்போது வழிமறிக்கும்/* (பக்.85)

உள்ளது ஒரே ஒரு பூமத்திய ரேகை. அது எப்படி வழிமறிக்கும்?–என்ற கேள்வி எழும்போது–கவிதையை உள்வாங்குவதில் சிரமம் அதிகமாகிறது.

பெண்களின் நிலை பற்றிய அவரது கவலை போராட்டக்குரலாக எழவில்லை. இன்று பெண்ணுரிமைக் குரல் மிகவும் அழுத்தமாக எழுகிறது. ரசூல் அந்த விளிம்பைத் தாண்டவில்லை. முஸ்லிம் சமூகத்தினுள்ளும் முஸ்லிம்கட்கு எதிரான இந்துத்துவப் போக்குகளின் விளைவாகவும் தோன்றி வளர்ந்துள்ள பாரிய சமூக முரண்பாடுகள் பற்றி நிறையப் பேசவேண்டும். ரசூல் இவற்றை சற்று விலக்கியே கடக்கிறார் என்றுதான் கூறவேண்டும்.

ரசூலின் கவிதைகளின் முக்கியத்துவம் தமிழக முஸ்லிம்களின் வாழ்க்கை பற்றிய பயனுள்ள பதிவுகளாக அவை அமைந்துள்ளமையிலேயே உள்ளது. சில கவிதைகள் 'பழமலய்' ஆக்கிய சில கவிதைகள் மனதிற்கு வருவதற்குக் காரணம், உற்றார் உறவினருடன் ரசூலின் உறவும், அது தொடர்பான உணர்வுகளும் நேர்மையுடன் வெளிவருவதுதான். அதேவேளை, இவற்றைக் கவிதைகளாகக் கொள்வது பற்றிய சில ஐயங்கள் பழமலய் விடயத்திற்குப்போல, மனதில் எழாமலும் இல்லை.

ரசூலிடம் சொல்வதற்கு நிறைய உள்ளது. சொல்லும் ஆற்றல் உள்ளது. ஆனால் ஒரு வாசகனின் கோணத்திலிருந்து தன் கவிதைகளை மீள வாசிப்பதும், கவிதையில் மேலும் தெளிவும் இறுக்கமுமான நடையை விருத்தி செய்வதும் அவரது ஆளுமைக்குப் பெரிதும் நன்மை தரும்.■



படிப்பகம்

www.padippakam.com

# ஒரு பஞ்சமனின் பயணக்குறிப்பு

கா.இளம்பரிதி

*முன் குறிப்பு-*

இலக்கிய வடிவம் சார்ந்து பயண அனுபவங்கள் அல்லது குறிப்புகள் என்பன அவற்றை எழுதுகிற எவரொருவரின் சமூக, வர்க்க, அரசியல் மற்றும் பண்பாட்டு அடையாளங்களையும், விழுமியங்களையும் தாங்கி நிற்பனவாகவே இதுகாறும் இருந்து வருவதை பல்வேறு வெகுசன மற்றும் சிற்றிதழ்களையும் வாசித்து வரும் எவரும் புரிந்து கொள்ள முடியும். ஆனால் இத்தகைய அனுபவங்கள் அல்லது குறிப்புகள் பெரும்பாலும் இரு பொதுத்தன்மைகளை உள்ளடக்கியதாக இருக்க நேரும். ஒன்று எழுதுபவர் அவரது தளத்தில் மிகவும் அறியப்பட்டவராக அதாவது சமூக மதிப்பு அல்லது அடையாளம் தாங்கியவராக இருக்க வேண்டுமென்பது மற்றொன்று அனுபவங்கள் பெரும்பான்மையாக வெளிநாட்டுப் பயணங்கள் குறித்ததாக இருக்க வேண்டுமென்பது. ஆயின் சமூக அடிமையாக வர்க்கச் சங்கிலியில் பிணைக்கப்பட்டிருந்த தலைமுறையில் பிறந்த நமக்கு(எனக்கு) அதை உடைத்தெறியும் வழி தேடி ஊர் சுற்றும் ஒவ்வொரு பயணமும் (உள்நாட்டுப் பயணமே) ஒவ்வொரு அனுபவமாகவே இருந்துவிட, கண்டதை, கேட்டதை, உணர்ந்ததைப் பதிவு செய்யும் கால அவசியம் நேர்ந்து விட்டதை தவிர்க்க இயலாமல். . . . இதோ அறிவுஜீவிகளின் மத்தியில் அறியப்படாத ஒரு சாமானியனின் பயண - அனுபவக் குறிப்பு.

*ஆம்! அறிவுலக மேதைகளும், அஞ்ஞானப் பேர்வழிகளும், உல்லாச மாந்தர்களும், சுரண்டல் அரசியல்வாதிகளும், எழுத்து வியாபாரிகளும், எட்டுத்திக்கும் சென்று கலைச் சேவை பல செய்பவர்களும் அதிகார வர்க்க மேல்தட்டு எடுபிடிகளும் மட்டுமல்ல, அன்றாடங்காய்ச்சிகளும் தம் அனுபவங்களைப் பேசுவதாகவும் இருப்பன சில அசாதாரணப் பயணங்களே!*

*பெங்களூரிலிருந்து மாரிக் குப்பம் செல்லும் பயணிகள் வண்டி(Passenger Train) அய்ந்தாவது பிளாட்பாரத்திலிருந்து சரியாக மணி 6.10க்குப் புறப்படும்' கன்னடம், ஆங்கிலம், இந்தி மொழியில் மாறி மாறி ஒரு பெண்ணின் குரலில் அறிவிப்பு வந்து கொண்டிருக்க. . . . பெங்களூர் சந்திப்பு ரயில் நிலைய பிளாட்பாரங்களை நண்பரோடு கடந்து சென்று வண்டியில் ஏறிய பொழுது, அநேகமாக அனைத்து இருக்கைகளும் கைப்பை, கைத்துண்டு, புத்தகம் இன்னபிற பொருட்களால் 'ரிசர்வ்' செய்யப்பட்டிருந்தன.' நண்பருக்கு அறிமுகமான ரயில்வே ஊழியர் தான் 'ரிசர்வ்' செய்துள்ள இன்னொரு இருக்கையை எமக்குத் தந்துதவினார். வண்டி புறப்பட்ட பொழுது ஏறத்தாழ எல்லா இருக்கைகளும் நிரம்பியிருந்தன. அனைத்துப் பெட்டிகளிலும் இதுதான் நிலைமை என்று நண்பர் கூறினார். மாரிக்குப்பத்திலிருந்து மட்டுமல்ல, பங்காருபேட்டை. காடுகுடி இன்னும் பெங்களூர் புறநகர்ப் பகுதிகள் பலவற்றிலிருந்தும் பெங்களூர் வந்து வேலை செய்துவிட்டுத் திரும்புகிறவர்களே அந்த மாலை நேர வண்டியில் நிரம்பியிருந்தார்கள். மிதமான வேகத்திலேயே சென்று கொண்டிருந்த ரயிலின் இரைச்சலையும் மீறி தமிழும், கன்னடமும் கலந்து பிரவாகித்த பேச்சொலிகள் பெட்டிக்குள் முட்டிமோதி சன்னலின் வழியே வெளியேறித் தப்பித்தன. மாலை மயங்கி இருள் கவியத் துவங்க, இரயில் வண்டியின் ஓசையும், பேச்சொலிகளும் மட்டும் செவிக்குள் மாறி மாறி வந்து போயின. ரயில் நிலையங்கள் ஒவ்வொன்றிலும் பயணிகள் ஏறுவதும் இறங்குவதுமாக பெட்டி நிறைந்து - வழிந்து - நிறைந்து கொண்டிருந்தது தொடர்ந்து.*

*சன்னலோரம் கண்மூடிச் சாய்ந்தால் தங்க வயல் பற்றியும், சுரங்கம் பற்றியும் கற்பனைக்கெட்டிய காட்சிகள் விரிந்து கொண்டேயிருந்தன. நவதானியங்கள் போலோ, வேரிலே மண்ணுக்கடியில் காய்த்துச் செழிக்கும் கிழங்குப் பயிர்களைப் போலவோ அந்த வயல் வெளிகளில் தங்கம் பூத்துக் குலுங்குமோ அல்லது மண்ணுக்குள் பூரித்துக் கிடக்குமோ என்றெல்லாம் தங்க வயலைப் பற்றிய பிரமைகள் ரயில்வண்டியாய் நினைவுகளில் ஓடத் தொடங்கின. சுரங்கம் என்பது நம் தமிழ் சினிமாக்களில் பார்த்ததைப் போலவா? "ஒரு தீப்பந்தத்தைக் கையிலேந்தி அடிமேல் அடிவைத்து சுரங்கத்துள் நடைபயில, தீப்பந்தத்தின் வெளிச்சம் தெரித்து தங்கச் சுரங்கம் ஒளிவீச, கண்கள் கூசி வாய் பிளந்து நின்றபோது நண்பர் தட்டியெழுப்பினார்". உறக்கம் அல்ல - கனவு கலைந்து விழித்தபோது மெல்லிய ஒளியில் இருள் சூழ்ந்து நிசப்தம் நிலவிய ரயில் நிலையத்தில் வண்டி நின்றது. "மாரிக் குப்பமா?". . இல்லை அது கடைசி நிறுத்தம் நாம் இறங்க வேண்டியது இங்குதான் என்றார் நண்பர். பெங்களூரிலிருந்து 80 கி.மீ தள்ளி வந்து விட்டோம். மணி இரவு ஒன்பதை நெருங்கி விட்டது. ரயில் வண்டி சென்றுவிட்டது. ரயில் நிலையம் "ஊர்கம்" என்று பெயர் தாங்கியிருந்தது. சற்று தூரத்தில் ஊர் அமைதியாக இருந்தது. ரயில் நிலையத்திலிருந்து ஊருக்குள் செல்லும் சாலையின் முகப்பில் வந்து அறிமுகமான நண்பருக்குத் தொலைபேசி செய்துவிட்டுத் திரும்பினால் "டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர் சாலை" என்ற பெயர்ப்பலகை ஊருக்கு வழி காட்டி நின்றது. தூக்கம் கண்களை விட்டு அகல, கனவுகள் மட்டும் கலையாமல் இருந்தது. தொலைபேசியில் நண்பர் அழைத்த நண்பர் வந்துசேர ஆட்டோவில் அவர் வீட்டிற்குப் பயணம். வழியில் குட்டி மலையைப் போலத் தெரிந்தது அந்த இரவிலும் ஒரு குன்று. சுரங்கத்தில் தோண்டப்பட்ட மண்மேடு என்றார் நண்பர். சுரங்கம் அவ்வளவு ஆழமா! என வியப்பு மேலிட்டது. சுரங்கங்கள் மூடப்பட்டு வெகு நாளாகின்றன. ஆனாலும் உள்ளே இறங்கிப் பயணிக்க வேண்டுமென ஆவல் உந்துகிறது. காலையில் முயற்சித்துப் பார்க்கலாம் என நண்பர் சொல்ல ஆவலான அசதியில் அன்று உறங்கிப் போனேன்.*

*மறுநாள் காலையில் தொலைவிற்கும் ஆளுக்குமாகக் கணக்கிட்டு பேருந்துக் கட்டணம் போல பெற்றுக்கொண்டு ஊருக்குள் ஓடிக் கொண்டிருக்கும் ஆட்டோக்களில் ஒன்றில் ஏறி சுரங்கப் பகுதி நோக்கி உள்ளூர் நண்பரோடு சென்றோம். சுரங்கங்கள் நிறுவப் பட்டிருக்கும் பகுதியில் நடந்து சென்று பார்க்க விரும்பி ஓரிடத்தில் இறங்கிக்கொண்டோம். அடர்ந்த உயர்ந்த மரங்கள் சூழ சுற்றுச்சுவர் எழுப்பப்பட்டு ஒவ்வொரு சுரங்க நுழைவுவாயிலும் வெறிச்சோடிக் கிடந்தது. தொழிலாளர்களின் நடமாட்டமின்றியும் Shaft (சுரங்கத்திற்குள் செங்குத்தாகக் கீழிறங்குவதற்காக அமைக்கப்பட்டிருக்கும் நுழைவாயில்) எதுவும் இயங்காததால் அவற்றின் இயக்கத்தை குறிப்புணர்த்தும் - உயரத்தில் அமைக்கப்பட்டிருக்கும் காற்றாலைகள் போலான சக்கர அமைப்புகள் - சுழலாமலும் பூமிக்கடியில்*



படிப்பகம்

www.padippakam.com

அந்த பிரம்மாண்டம் பேரமைதியைப் பறைசாற்றி புதைந்துபோன புதையலாய் பூட்டப்பட்டிருந்தது. K.G.M. (Kolar Gold Mines) - கோலார் தங்கச்சுரங்கங்கள் ஏன் பூட்டப்பட வேண்டும்? இத்தனை ஆண்டுகள் மனித உழைப்பு ஏன் விரயமாக்கப்பட வேண்டும்? தங்கச்சுரங்கத்தை நம்பி வாழ்க்கை நடத்திய ஆயிரக்கணக்கான தொழிலாளர்களின் எதிர்காலம் என்ன? தங்க வயலை நம்பி கோலாரில் குடியேறியிருக்கும் பல்லாயிரக்கணக்கான குடும்பங்களின் எதிர்பார்ப்புகள் எவை?

சுரங்க அலுவலகம் ஒன்றிலிருந்து வெளியே வந்த தொழிலாள நண்பரிடம் அறிமுகப்படுத்திக்கொண்ட பொழுது நீண்ட நாள் பழகியவரைப்போல் நம்மிடம் இயல்பாகப் பேசினார் அவர். அலுவலகத்திற்குள் அழைத்துச் சென்று அங்கிருந்த வரைபடங்கள் சுரங்கத்தை விளக்கும் மினியேச்சர் மாடல்கள் ஆகியவற்றைச் சுட்டிக்காட்டி விளக்கியவர், சுரங்கம் பற்றியும், தற்பொழுது மூடப்பட்டிருப்பது குறித்தும் தெரிவித்த தகவல்கள் போதுமானதாக இல்லையென்றாலும் அறிந்து கொள்வதற்கான குறிப்பாக இருந்தது. அவர் அழைத்துச் சென்று காட்டிய, ஒரு சுரங்கத்தின் செங்குத்தான ஆழம் 2600 அடி வரை இருக்குமென்றும், தற்பொழுது தண்ணீர் புகுந்து விட்டதால் 500 அடி வரை மட்டுமே கீழே செல்ல முடிகிறது என்றும் குறிப்பிட்டார். இப்படி சில சுரங்கங்கள் பூமிக்கடியிலிருந்து ஊறிப்பெருகிய தண்ணீர் வெள்ளமாகப் புகுந்துவிட்டதாலும், இன்னும் சிலவற்றில் அளவுக்கதிகமான வெப்பம் வீசுவதாலும் அப்பகுதிகளுக்குள் செல்ல இயலாமல் போய்விட்டது எனவும் தெரிவித்தார்.

**கோலார் தங்கச்சுரங்கங்கள் ஏன் பூட்டப்பட வேண்டும்? இத்தனை ஆண்டுகள் மனித உழைப்பு ஏன் விரயமாக்கப்பட வேண்டும்? தங்கச்சுரங்கத்தை நம்பி வாழ்க்கை நடத்திய ஆயிரக்கணக்கான தொழிலாளர்களின் எதிர்காலம் என்ன?**

பிரிட்டிஷ் காலனியாதிக்கத்தின் போது வெள்ளையர்களால் ஆரம்பிக்கப்பட்ட (தோண்டப்பட்ட) இச்சுரங்கங்களில் 1960கள் வரை ஏறத்தாழ 18000 தொழிலாளர்கள் வேலை பார்த்ததாகவும், சுரங்கம் கடந்த ஆண்டு மூடப்பட்ட பொழுது மொத்தம் 4000 தொழிலாளர்களே வேலையில் இருந்தனர் எனவும், மூடப்படும் காலம் நெருங்கிய பொழுது ஏறத்தாழ 500 தொழிலாளர்கள் சுய விருப்பு ஓய்வில்(V.R.S) சென்றுவிட, அரசுக்கெதிராக, மூடப்பட்ட சுரங்கத்தைத் திறக்கக்கோரியும், தகுந்த நிவாரணம் வழங்கக்கோரியும் பணியில்லாமல் இருக்கும் ஏனைய தொழிலாளர்கள் போராடி வருவதாகவும், நீதிமன்றத்தில் நடந்துவரும் வழக்கு தங்களுக்கு சாதகமான தீர்ப்பை வழங்குமென்று எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். ஏறத்தாழ 20 வருடங்கள் சுரங்கப் பணியில் இருக்கும் அத்தொழிலாளி அபாயகரமான பல விபத்துக்களைக் கடந்து வந்ததாகவும், அவர் கண் எதிரே மூன்று தொழிலாளர்கள் மண் சரிந்து உயிரோடு சுரங்கத்திற்குள் இறந்து போனதையும் குறிப்பிட்டபொழுது பேரமைதி தவழும் அந்த பிரம்மாண்டம் விழுங்கியிருக்கும் மனித உயிர்கள், மானுட உழைப்பு, வியர்வை, இரத்தம் அனைத்தும் மண்ணுக்குள் புதைந்திருக்கும் தங்கத்தை விடவும் விலைமதிக்க முடியாதவை என்பதை நமக்கு உணர்த்துகின்றன.

8மணி நேர வேலை, உழைப்புக்கேற்ற ஊதிய நிர்ணயம், தொழிலாளர் நலச்சட்டம் எதுவும் செல்லுபடியாகாத காலனியாதிக்க காலத்திலும், அதற்கும் முந்திய மன்னராட்சி - சமஸ்தானங்களின் காலத்திலும் கர்னாடகத்தின் தென்பகுதிகளான மைசூர், பெங்களூர் மற்றும் கோலாரில் தமிழகத்திலிருந்து பெருவாரியாகக் குடியேறிய தமிழர்களில் கோலார் தங்கவயலுக்குக் கூலிகளாக அழைத்துவரப்பட்ட ஆயிரக்கணக்கான எழுதப்படிக்கத் தெரியாத மக்களின் அவலம் குறித்து அத்தொழிலாளத் தோழரின் பேச்சினூடாக நாம் அறிய முடிகிறது. அதிகாலையில் குழந்தைகள் உறங்கிக்கொண்டிருக்கும் பொழுது வேலைக்குச் சென்று - இரவு குழந்தைகள் உறங்கிய பின்னர் வீடு திரும்பும் தகப்பன்களை விபரம் அறியும் காலம் வரை பல குழந்தைகள் முகம் பார்த்ததில்லை என்று தெரிவித்த அவரின் உள்ளுறைந்த சோகம் நம்மையும் தொற்றிக்கொள்வதில் வியப்பில்லை. எத்தனை இழப்புகளையும், துயரங்களையும் அனுபவித்திருந்தாலும் ஒரு பண்ணைக் கொடுங்கோலனிடம் வாங்கிய கடனுக்கும் - வட்டிக்கும் அரை வயிற்றுக் கஞ்சிக்காவது உத்திரவாதம் தந்த ஒரு ஏக்கர் நிலத்தையும் கைநாட்டிட்டுக் காவு கொடுக்க நேர்ந்த ஒரு ஏழை விவசாயியின் துயரத்தோடு கோலார் தங்கவயலை அந்நிய நாட்டு நிறுவனங்களுக்குத் தாரை வார்க்கத் துடிக்கும் பன்னாட்டு எடுபிடி இந்திய அரசுக்கு எதிராகக் கையறு நிலையில், வீதியில் நிற்கும் அந்தத் தொழிலாளர்களின் சோகமும் துயரமும் எழுத்தில் வடிக்க முடியாதது.

பேரம் பேசாத கூலிகளாய், கொத்தடிமைகளாய் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இந்திய சமூகத்தின் கடைக்கோடி உழைக்கும் வர்க்கமாய் வாழும் தாழ்த்தப்பட்ட மக்களே, ஆங்கில ஏகாதிபத்திய ஆட்சியில் கோலார் தங்கச்சுரங்கத்தைத் தோண்டும் பணிக்கு அழைத்து வரப்பட்டவர்கள். இன்றும்கூட அவர்களின் வாரிசுகளே தொடர்ந்து கூலிகளாகவும், பெரும்பாலான தொழிலாளர்களாகவும் காலனி வீடுகளை விடவும் ஒடுக்கமான கோலாரின் குடியிருப்புகளில் வாழ்ந்து வருகின்றனர் என்பது பலருக்கும் உறைக்க வேண்டிய உண்மை. அண்ணல் அம்பேத்கரின் உருவச்சிலையோ, அவரது உருவம் வரையப்பட்ட கற்பலகைகளோ அடையாளமாக நிறுவப்படாத குடியிருப்புகள் இங்கு இல்லை. ஆங்காங்கே தொழிலாளர்களின் குழந்தைகள் ஓடி விளையாட சிறிய விளையாட்டு மைதானங்கள்- அங்கெல்லாம்கூட அண்ணலின் ஆளுயர சிலை, கூடவே இரட்டைமலை சீனிவாசனின் சிலையும். பூனா ஒப்பந்தம், வகுப்புவாரி உரிமை, குடியரசுக் கட்சி, தொழிலாளர் நலப்போராட்டங்கள் - சட்டங்கள் என அம்பேத்கரின் அரசியல் நடவடிக்கைகள் இங்கு எதிரொலித்ததற்கான அடையாளங்களாகவே அவரின் சுவடுகள். கோலார் நகராட்சி அலுவலகத்திற்குள் அவரின் ஆளுயர வெண்கல உருவச்சிலை.

(K.P.M -Kolar People's Movement) - "கோலார் மக்கள் இயக்கம்", "சுரங்கத்தை மூடாதே" என்று தொழிலாளர்களின் உள்ளக் குமுறலையும், கேள்விக்குறியான எதிர்காலத்தையும் முன்னறிவித்தபடி தொழிலாளர்களின் குடியிருப்புச்சுவர்கள், Shaft கள் அமைந்திருக்கும் சுற்றுச்சுவர்கள், கல்லறைத்தோட்டச் சுவர்கள் என எங்கும் சுவரெழுத்துக்கள் - போராட்டத்தின் வலிமையைப் பறை சாற்றியபடி.

நண்பகல் 2.10 மணிக்கு ஊர்கம் ரயில் நிலையம் வழியாக மாரிக்குப்பத்திலிருந்து பெங்களூர் வரும் வண்டியில் ஏறிய பொழுது, சிறு மலைக்குன்றுகளைப் போல ஆங்காங்கே குவிந்திருக்கும் சுரங்கத்திலிருந்து தோண்டப்பட்ட மண்மேடுகள் - காலம் காலமாக சுரண்டப்பட்டும், ஒடுக்கப்பட்டும் மண்மூடிப்போன நம் மக்களின் வாழ்க்கையைக் குறிப்புணர்த்தி, சுமக்கவியலாத பாரமாய் உடலை அழுத்தி, உயிரை வாட்ட..... ரயில்பெட்டியில் இடமிருந்த பொழுதும் உட்கார மனமில்லாமல் பேரமைதி தவழும் அந்த பிரம்மாண்டம் புதைந்திருக்கும் தங்கவயல் கண்களை விட்டகலும் வரை வண்டியின் கதவருகில் ஒரு மவுன சாட்சியாய் பராக்கு பார்க்கும் பயணியாய் நான்.

"மூடிய மண்மேடுகளுக்குள் புதையுண்டு போன நம் மக்கள் மீண்டு(ம்) உயிர்த்து வர பேரமைதி தவழ பூமிக்கடியில் உறங்கும் அந்த பிரம்மாண்டம் எப்பொழுது வெடிக்கும்?! " ■



படிப்பகம்

www.padippakam.com

*தய். கந்தசாமி*

நான் சருகு
நீ நெருப்பு
சாம்பலானது நந்தவனம்.

நான் படகு
நீ திசை
தொலைந்து போனது பயணம்.

நான் அல்லி
நீ தண்ணீர்
மூச்சுத் திணறியது பொய்கை.

நான் வண்ணம்
நீ தூரிகை
அழிந்து போனது ஓவியம்

நான் சொல்
நீ பொருள்
அர்த்தமற்றுப் போனது காவியம்.


நான் மகரந்தம்
நீ காற்று
மலடாய்ப் போனது வசந்தம்.

நான் வானம்
நீ நிலவு
அஸ்த்தமித்தது வெளிச்சம்.

நான் பயிர்
நீ நிலம்
தரிசாய் கிடந்தது நம்பிக்கை.

நான் மனுஷன்
நீ மனுஷி
அலியாய்ப் போனது உறவு.

நான் சேரி
நீ ஊர்
தூரமாய்ப் போனது மனிதம்.




படிப்பகம்

www.padippakam.com



# இந்துத்துவா உலகமயமாக்கம் ஆதிக்க ஒருங்கிணைவு

**ஸ்டாலின் ராஜாங்கம்**

ஒரு வழியாக தேர்தல்கள் என்ற கேலிக்கூத்துக்கள் நடந்து முடிந்தன. புதிய அரசுகள் அதே பழைய நாற்காலிகளில் ஆளத் தொடங்கி விட்டன. பழைய கணிப்புகள் ஏன் பொய்யாயின? ஊடகங்களில் புதிய கணிப்புகள் தொடங்கி விட்டன. "முன்பு மாதிரி இல்லை, ஜெயலலிதா பக்குவப்பட்டு விட்டதால் ஆட்சி நன்றாகவே இருக்கும்" புதிய அக்கறைகள் முளைக்கத் துவங்கியுள்ளன. அதற்கேற்றாற் போலவே கோப்புகளும், அதிகாரிகளும் "மக்கள் நலனுக்காக" அதிரடியாய் மாற்றப்படுகின்றனர். கருணாநிதி தமிழராக காட்சியளிக்கிறார் "நந்தன்"களுக்கு ஜெயலலிதா வெற்றி பெற்றதற்கு ஆதிக்க சாதியும் ஒரு காரணமல்ல என்று வழங்கப்படும், "புதிய ஜனநாயகத் தீர்ப்புகள்" எப்படியோ மக்கள் பாடு மட்டும் தீரவேயில்லை என்பது மட்டுமே நிலையாய் நிற்கிறது. அரசியல் சம்பந்தமான எதிர் மற்றும் நேர் ஊடகங்களால் மக்கள் வாழ்வு அலைக்கழிக்கப்படுகிறது.

சரி! உண்மையில் தி.மு.க. வோ, அ.தி.மு.க.வோ எவ்விதமான மாற்றையும் முன்வைக்க முடியாது. கருணாநிதியால் ஒரு முறை சொல்லப்பட்டது போல "தமிழகத்து தலைமைச் செயலகத்தின் புல்லை வெட்டு வதற்கான அனுமதியைக் கூட மைய அரசிடம் எதிர்பார்க்க வேண்டிய நிலை தான் இருக்கிறது. (தற்போது மாநில சுயாட்சிக்காக என்ன முயற்சி செய்கிறார் என்பது வேறு விஷயம்) இந்த நிலையில் இந்த மாநில அரசுகளும் எதையும் செய்து விட முடியாது. ஆனால் நம்மிடையே "எதிரி"களாக நிற்கும் இந்தக் கட்சிகளெல்லாம் இரண்டு விஷயத்தில் மட்டும் விசுவாசமான ஒற்றுமை வகித்து வருகிறது. இந்த இரு ஒற்றுமைகள் மீது எவரும் சந்தேகப்பட முடியாது. ஆமாம்! அதில் ஒன்று பார்ப்பனிய இந்தியக் கட்டமைப்பை ஏற்றுக் கொள்வது இரண்டு உலகமயமாக்கம் குறித்து தங்களது ஆதரவைத் தருவது. இந்த இரண்டில் நாம் தற்போது உலகமயமாக்கம் குறித்து கவனம் செலுத்திப் பேசுவோம். இந்த "வெத்துவேட்டு" அரசியல் கட்சிகளின் "தேர்தல் அறிக்கை" களில் ஒன்றில் கூட இந்த கொடிய உலக மயமாக்கல் குறித்து பேசப்படவேயில்லை. மாறாக நாட்டை கணினி மயப்படுத்துவதாக உறுதி பூண்டன. உண்மையில் உலகமயமாக்கல் என்பதில் இந்துத்துவாவின் சாதி ஆதிக்கமும் அடங்கியுள்ளது என்பதுதான் நிஜம். தொடர்ந்து ஆதிக்க சாதிகளால் சுரண்டப்பட்ட தலித்துகளின் முன்னேற்றத்தின் ஒரு படியாக அம்பேத்காரால் தொலைநோக்குடன் அரசியல் சட்டத்தில் "இடஒதுக்கீடு" இணைக்கப்பட்டது. இணைக்கப்பட்ட இந்த அரசு ஆணையை அமல்படுத்தக்கோரி ஏராளமான ஒடுக்கப்பட்ட மக்களின் சிறுசிறு அமைப்புகள், பார்ப்பனரல்லாத தலைவர்கள், பெரியார் போன்ற சிந்தனையாளர்கள், இடதுசாரிகள், சமூகநீதி ஆர்வலர்கள் முதலியவர்களின் பங்களிப்பையும் நாம் அறிவோம். இதனை ஒட்டி ஆட்சி மாற்றங்களும், அடிதடிகளும், அவ்வப்போது மரணங்களும்கூட நிகழ்ந்தன. இந்நிலைக்குப் பிறகும் அமுல்படுத்தப்பட்ட இடஒதுக்கீடுகளில் இன்னும் நிரப்பப்படாமல் இருக்கும் இடங்கள் ஏராளம். எனினும் இந்த குறைந்தபட்ச சலுகைக்கெதிராக "பார்ப்பன–பனியா" வர்க்கங்களின் வெறிபிடித்த தாக்குதல்களில் நேரிலும், ஊடகங்கள் வழியும் பிறபடுத்தப்பட்டவர்களைத் தூண்டிவிடுவதும் என்று தொடர்ந்த போக்குகளையும் கண்டோம்.

இத்தகைய நிலையில் அந்நிய முதலீட்டால் "தனியார் மயமாக்கல்" பொதுத்துறை நிறுவனங்களை தனியுடைமை ஆக்கும்போது குறைந்தபட்ச இந்த இடஒதுக்கீடு கூட இல்லாமல் போகிறது. ஏற்கனவே தொடர்ந்து அதிகாரத்தை வைத்திருக்கும் பார்ப்பன உயர்சாதியினர் இதன்மூலமாக வரும் புதிய வாய்ப்புகளையும் தாங்களே பயன்படுத்திக் கொள்வர். இது தான் இதில் ஒளிந்திருக்கும் இந்துத்துவா ரகசியங்கள்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்திய காலத்தில் மிலேச்சர்களான கிருத்துவர்களின் உடலுழைப்பைக்கோரும் ராணுவத்தில் சேரத் தயக்கம் காட்டிய "சாதி இந்துக்கள்" மற்ற அதிகார மய்யங்களில் நுழைவதில் மட்டும் எவ்விதத் தயக்கமும் காட்டவில்லை. ஆனால் இதில் முக்கிய இடமொன்று மௌனமாகவே இருக்கிறது. அது ஆங்கில அரசு தலித்துகளை உடலுழைப்பு ரீதியான ராணுவத்தில் மட்டும் அனுமதித்தது என்பது தான். ஆங்கிலேயர்களின் இந்த ஓரளவு வாய்ப்பளிப்பை உணர்ந்த தலித் மற்றும் பார்ப்பனர் அல்லாத இயக்கங்கள் "சாதியக் கட்டுமானத்தை கொஞ்சமாவது மய்யமழித்து அதிகாரப் பரவலை" அளித்த ஆங்கில அரசோடு இணக்கமாகவோ சமயங்களில் எதிராகவோ இயங்கியதைக் காணலாம். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் அதிகாரம் 'சுதந்திரம்' என்ற பெயரால் பார்ப்பனியத்திற்கு மாற்றியளிக்கப்பட்ட பிறகு எல்லா அதிகார வாய்ப்புகளும் இந்த பார்ப்பன அரசு வழியே வரவேண்டியிருந்ததால் உலகத் தொடர்பால் ஏற்பட்ட புதிய வாய்ப்புகளையெல்லாமே உயர்சாதியினரே கைப்பற்றிக்கொண்டனர். அப்படித்தான் இன்றும் "கணினி, இணையம்" போன்றவைகளின் கருத்தியல் உருவாக்கம் அவர்களின் கையில்.

* * *

இன்று இந்திய வாழ்க்கை என்பதே உலகமயமாதலால் பெரும் சவாலாக பொறியாக சிக்குண்டு கிடக்கிறது. ஏற்கனவே இந்தியச் சூழலில் சாதிய ரீதியில் ஒடுக்கப்படும் தலித்துகள், பெண்கள் மற்றும் ஆதிவாசிகளின் நிலை சொல்லித் தெரியவேண்டியதில்லை. இந்நிலையில் ஒரு சாதாரண இளைஞன் படிக்க முடியாத மாற்றங்கள் மிக அதிக வேகத்தில் நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் நாம் இதை இறுதியாக உணருகிறோம் அல்லது உணரத் தவறுகிறோம். ஒரு மாற்றத்திற்கான புரட்சியை உருவாக்க சரியான தருணம் இது. அம்பேத்கார் கூறியதைப் போல "சாணிக்குவியலின் மீது கட்டப்பட்ட அரண்மனையாக ஜனநாயக மாளிகை மாறிவிட்டது" நம்மைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். உணவு உற்பத்தி நான்கு மடங்கு உயர்ந்திருப்பதாக சொல்லப்படும் இத்தருணத்தில் பசியால் ஏழைகள்



படிப்பகம்

www.padippakam.com

தற்கொலை செய்து கொள்வதும், பணக்காரன் இன்னும் பணக்காரன் ஆவதும் நடந்து கொண்டிருக்கிறது. உணவு பாதுகாக்கும் இடத்தில் ஏற்பட்ட அழுகல் காரணமாக கடலில் வீசப்பட்ட உணவின் அளவு மொத்த இந்திய மக்கள் இரண்டு நாட்கள் உண்ணக்கூடிய உணவாம்!

**‘நம்மைச் சூழ்ந்துள்ள இந்த கொடிய ஆபத்துகள் குறித்து ஏராளமாய் பேசியும், விவாதித்தும் ஆகிவிட்டது. ஆக, இந்தியச்சூழலில் இந்துத்துவமும், ஏகாதிபத்தியமும் ஒன்றே’**

அரசமைப்பும் சட்டமும் சாதாரண மனிதர்களான நமக்கு துரோகமிழைத்து விட்டன. “சமூக அரங்கில் ஏதோ ஒரு வகை எதிர்ப்புரட்சி ஏற்பட்டு வருவதாக” கே.ஆர். நாராயணன். குறிப்பிட்டாரே அதைப்போல கட்டாயமாக இன்னும் நான்கைந்து ஒரு பக்கம் இத்துணைக்கண்டத்தின் மூலை முடுக்குகளெல்லாம் போராட்டங்கள் நிகழ்ந்து கொண்டேயிருக்கும். (ஏற்கனவே இது உலகமெங்கும் தேசிய இனம், மொழி வர்க்கம், சாதி எதிர்ப்பு என்ற போராட்டங்களாக ஆரம்பமாகி விட்டது) அரசு எந்திரங்களும் கண்காணிப்புப் பணியில் கூடுதலான கவனம் செலுத்துகிறது. மூன்றாம் உலக நாடுகளை அழித்துக் கொண்டிருக்கும் உலக வங்கி பன்னாட்டு நிதி நிறுவனம், உலக வர்த்தக நிறுவனம் முதலிய நிறுவனங்களின் கொடிய வன்முறைகளை அறிந்து கொள்வதோடு எதிர்த்து சண்டையிடவும் வேண்டியுள்ளது. மனித மாண்புகள் அழிக்கப்பட்டு பணம் ஒன்றே குறிக்கோளாக மாற்றப்பட்டுள்ளது. இதைத் தவிர்க்க முடியாத உண்மையாக ஏற்கவும் செய்கிறது. பூர்வீகக் குடிகள் வசிக்கும் உரிமை இல்லாதவர்களாக்கப்பட்டு வருகிறார்கள். இந்த அரசாங்கங்களின் பல்வேறு துரோகங்களை சந்தித்த நாம் இனியும் இவைகளை நம்புவதில் பயனில்லை.

கல்வியில் புகுந்துள்ள தொழில் நுட்பம் நம்மை அலைக்கழிக்கிறது. “என்ன நீ பணம் கொடுக்காம எப்படி கல்லூரியில் இடம் தருவாங்க?” என்று பேசும் அளவுக்கு பணம் கொடுப்பது குறித்து சிறு குற்றவுணர்வும் இல்லாத அளவிற்கு ஆக்கப்பட்டுவிட்ட நிலைமையை கவனிப்போம். உலகமயமாக்கத்தின் இன்னொரு முக்கியத் தாக்குதல் தாய்மொழி மீதானது தான். அது ஆங்கிலத்தை உலகமயமாக்குகிறது. ஏற்கனவே இங்கே நிலவும் மெக்கலேயின் வடிவத்திலும் வேத சார்பான இந்திய உள்ளடக்கமும் கொண்ட நமது கல்விமுறை படித்தவன், படிக்காதவன் என்ற இருவரிடையே எவ்விதமான கருத்தியல் மாற்றத்தையும் கூட ஏற்படுத்திவிட முடியவில்லை. மேலும் வேத மனப்பாட பார்ப்பனர்களின் கல்வி இந்த மனப்பாடக் கல்விமுறையை அவர்களுக்கே சாதகமாக்கித் தருகிறது.

வெளிநாடுகளில் வேலை கிடைக்கும் என்ற கணினிக்கல்விக்கான காரணத்தை ஆராய்ந்து பார்த்தால் அது நகராட்சிப் பள்ளியில் கூட சேர்க்க இயலும் வருமானம் கூட இல்லாத எந்த தாழ்த்தப்பட்டவனுக்கு உழைக்கும் பிற்படுத்தப்பட்டோருக்கு சாதகமாக அமைய முடியுமா? மாறாக அது உயர்சாதியினருக்கே துணை செய்யும். இந்நிலையில் பாடப்புத்தகங்களும், இலக்கியங்களும், வரலாறுகளும் மறுபடியும் இந்துப் பாசிசவாதிகளால் திருத்தப்பட்டு மாற்றப்பட்டு முற்றிலும் காவிமயமாக்கப் படுகிறது (ஏற்கனவே பாடங்கள் இந்துமயமாகத்தான் இருக்கிறது) உலக அளவில் மனிதவள மேம்பாட்டு அறிக்கையின்படி கல்வியில் இந்தியா 116 வது இடத்தைப் பிடித்துள்ளது. இந்த நிலையில் இங்கே கொண்டுவரப்படும் புதிய கல்வி வாய்ப்புகளும், இணையம், கணினி போன்றவைகள் எந்த வகையிலும் இந்த மக்களுக்கு உதவப் போவதில்லை என்பதை நாம் உணரவேண்டும். இந்த இன்டர்நெட்டுகளில் உலகின் பல பகுதிகளில் நிகழும் போராட்டங்களைத் தவறியும் கூட காட்டுவதில்லை. இதுவரை இணையத்தில் 80 சதவிகிதம் பார்வையாளர்கள் பாலியல் காட்சிகளையே பார்த்திருக்கின்றனர். என்பது அதிர்ச்சி தரத்தக்கதாய் இருந்தாலும் ஏகாதிபத்தியங்களும் இதைத்தான் விரும்புகின்றன.

அடிப்படைத் தேவைகளில் இன்று உடைமைகளுக்கே அதிக முக்கியத்துவம் தரப்படுகிறது. திராவிட மாறனால் இறக்குமதி வரம்பு நீக்கப்பட்ட 1400 க்கும் மேற்பட்ட பொருள்களைக் கவனித்தால் இது விளங்கும். ஆக இன்று உலகமயமாக்கத்தால் பாதிக்கப்படாத இடமோ, சூழலோ காணமுடியாது. இந்த ஆதிக்கவாதிகள் எந்த ஒருவராலும் தடுத்து நிறுத்த முடியாத நிலைமையை உருவாக்க விரும்புகிறார்கள். இது மனிதர்களை வியாபாரப்பண்டங்களாக மதிக்கக் கூடிய சந்தைக் கலாச்சாரத்திற்குக் கொண்டு சென்றுள்ளது. இன்று “தேசியக்கடமை, தேசியப்பொறுப்பு” என்பதும் தனியார்களின் நிர்ணயிப்புகளாய் நிற்கிறது. இந்த உலகமயமாக்கத்திற்கெதிராக எவர் குரலெழுப்பினாலும் அவர் “தேச விரோதி” யாக பார்க்கப்படும் நிலை உருவாகியுள்ளது. உண்மையில் சந்தை என்பது வியாபாரம் செய்ய மட்டுமே வேறு எதையும் செய்ய அனுமதிப்பதில்லை. அதிக உற்பத்தி என்று சொல்லும் அரசுகள் அளவுக்கதிகமாக இறக்குமதி செய்கிறது. இறக்குமதிக்காக டாலர்களைச் செலவிடும் அரசு விவசாயிகளிடம் தானியங்களை வாங்குவதற்கு கையில் பணமில்லை என்கிறது. இந்த நாட்டில் நிலத்தை நம்பி உழைத்து வாழுபவர்கள் தலித்துகளும் பெண்களும் தான். இந்துத்துவம் மற்றும் உலகமயமாக்கல் முதலியவைகள் நடுத்தர வர்க்கங்களை நம்பியே கருத்தியலையும் சந்தையையும் நிறுவுகிறது. இன்னும் கொஞ்ச நாட்களில் அமெரிக்கா மற்றும் தாய்லாந்து நாடுகளிலிருந்து அரிசி இறக்குமதியாகப் போகிறதாம். இவைகள் முழுக்க முழுக்க நடுத்தர மக்களைக் குறி வைத்தே தமது சந்தையை நிறுவுகின்றன. இந்த நாட்டில் மிகப்பெரிய “தியாகி”களாக விவசாயிகள் தான் தெரிகிறார்கள். உழைக்கும் மக்கள் ஏதும் இல்லாது போனபிறகு பூர்ஷ்வா வர்க்கங்கள் மட்டும் சுக வாழ்வு வாழ்ந்துவிட முடியுமா? அந்நிய தொழிற்சாலைகளுக்கான இடம் அதையொட்டிப் போடப்படும் சாலைகள் அமைக்க நிலம் ஆகியவை இந்த உழைக்கும் மக்களிடமிருந்து அரசால் வலுக்கட்டாயமாகப் பறிக்கப்படுகிறது. நினைத்துப்பார்த்தால் நூறு கோடி மக்கள் தொகைக்கும் சோறு போடுபவன் விவசாயியே. ஆனால் அந்த விவசாயின் வாழ்நிலையோ படு கேவலமாக இருக்கிறது. பசுமைப்புரட்சி, வெண்மை(மை)ப்புரட்சியெல்லாம் பண்ணையார்களுக்கே வசதி செய்து கொடுத்தது. விவசாயியின் நிலை நிலப்பிரபுத்துவம், முதலாளித்துவம் என இரு பக்கமும் மத்தளத்தைப் போல இடிதான். மேலும் அவன் உற்பத்தி செய்யும் பொருளுக்கு விலையைக்கூட தீர்மானிக்க முடியாத நிலையில் இருக்கிறான். இந்த நிலையில் மேலும் நிலங்களை மலடாக்கும் விதைகள், உரங்கள், பூச்சிக்கொல்லிகள் ஆகியவற்றையும் ஏகாதிபத்தியமே தீர்மானிக்கிறது. சூழல் சீர்கேடு என்பதும் உழைப்பவனையே பலவீனம் உள்ளவனாக்கி தீராத நோயாளியாக்குகிறது.

உலகமயமாக்க தொழிற்சாலை கழிவுகள், சேரிப் பகுதிகளில் சாக்கடையாக சேருகிறது. நமது தண்ணீரும் கூட நமக்கே விற்கப்படும் சூழல் உருவாகி உள்ளது. மேலும் 8 மணி நேரத்தில் செய்யக்கூடிய வேலையை நவீன இயந்திரங்கள் மூலமாக உழைக்கும்



படிப்பகம்

www.padippakam.com

தொழிலாளியைக் கொண்டு 3 1/2 மணி நேரத்தில் பெற்றுவிடும் இந்த தனியார் நிறுவனங்கள் மிச்சப்படும் நேர உழைப்பைச் சுரண்டுகிறது. இந்நிலையில் உலக அளவில் தொழிலாளர் உரிமை மீதான சட்டங்களை தமது வரம்புக்குள் கொண்டுவர முயற்சிக்கிறது. ஏகாதிபத்தியங்கள். "உழைக்கும் மக்களனைவரும் ஏழைகளாக இருக்கும் இந்நாட்டில் பணக்காரன் மக்கள் விரோதிதான்" ஆகவே இதை அனைவரும் ஒன்றிணைந்து எதிர்க்க வேண்டிய தேவையிருக்கிறது. இந்துத்துவா இந்தியச் சூழலில் நிலவும் பன்முகத் தன்மையை அழித்து, ஒற்றைத் தன்மையை நிறுவுவது எப்படித் தவறோ? அப்படித்தான் உலகத்தின் பல்வேறு "கலாச்சார, பண்பாட்டு, மொழி, இன, பழக்கவழக்க மரபுகளை" அழிக்க நினைக்கும் உலகமயமாக்கலும் நமது எதிரியே. உலகமயமாக்கம் "நிதியை, உழைப்பை" உலகமயமாக்குகிறதே தவிர, கூலியை உலகமயமாக்கவில்லை என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

மேலும் இந்தியச்சூழலில் இயந்திரமயமாக்கம் என்பது கொடிய இழிவாய்க் கருதப்படும் வேலைப் பிரிவினைகளான "மலம் அள்ளுதல்" போன்ற தொழில்களில் வந்து விடவில்லை. முதலாளித்துவம் இந்துத்துவத்தோடு இங்கு கைகோர்த்துக்கொண்டு, தனக்கு சாதகமானதை மட்டும் நிகழ்த்திக் கொள்கிறது. இந்த "இயந்திரமயமாக்கல், ஆட்குறைப்பு, தனியார் மயமாக்கல்" குறித்து இன்னொரு கேள்வியும் நமக்கு எழுகிறது.

ஏற்கனவே நமக்கு வேலைவாய்ப்புகளில், கல்வியில் இடஒதுக்கீட்டை முறையாகப் பயன்படுத்தாத இந்திய அரசுகள், "ஆட்குறைப்பு" செய்வது என்பது சமூக நீதியை கேள்விக்குள்ளாக்குகிறது. மேலும் "தனியார் மயம் – இயந்திரமயம் – ஆட்குறைப்பு" ஒன்றுக்கொன்று பிரிக்க இயலா இணைப்புச் சங்கிலியாக இருப்பதை உணரவேண்டும். அரசு கட்டுப்பாட்டிலுள்ள பொதுத்துறை நிறுவனங்கள் ஒழுங்காகச் செயற்படுவதில்லை என்று தனியார்வசம் ஒப்படைக்கும் இந்த அரசுகளின் நிர்வாகம் கேள்விக்குள்ளாகிறது. மேலும் இதன் வழியாக பேசப்படும் "பங்கு விற்பனை, ஊக வாணிபம், வர்த்தகம் முதலியன கணினி வழியே நிகழும்போது ஒடுக்கப்பட்டவர்களுக்கான இடமே இல்லை" என்கிறார்கள்.

நமது உடலுக்கு எதிராக மருந்துகளும், அணுவெடிப்புகளும், புதிய உணவு வகைகள் (பாஸ்ட் புட்) ஆகியவை மட்டுமே அளிக்கப்படுகிறது. பொது விநியோக முறையில் மாற்றம் வருகிறது. அரிசி, கோதுமை கூட இறக்குமதியாகப் போவதாக கருணாநிதியின் மனசாட்சி முன்மொழிகிறது. இந்த வகைகளில் ஊடகங்களின் புதிய சந்தைக்கான பிரச்சாரங்களை நாம் அறிதல் அவசியமே. எப்படியோ தங்களுக்கான அடையாளத்தை தலித்துகள் – பூர்வகுடியினர் – தேசிய இனங்கள் – பெண்கள் முதலியோர் இழந்து வருவதோடு மட்டுமல்லாமல் அனைத்து மக்களுக்கும் எதிரியாக உலகமயமாக்கம் தன்னை பறை சாற்றிக்கொள்கிறது.

* * *

தனியுடைமை என்பது ஒரு வர்க்கத்திற்கு அதிகாரத்தையும், சுரண்டலின் வழி உழைக்கும் வர்க்கத்திற்கு துன்பத்தையும் தருகிறது. இந்தியச் சூழலில் தனியுடைமை (அ) உலகமயமாக்கம் பார்ப்பனியத்திற்கு அதிகாரத்தையும் – தலித்துகளுக்கு துயரத்தையும் தருகிறது.

**'பசுமைப்புரட்சி, வெண்மை(மை)ப்புரட்சியெல்லாம் பண்ணையார்களுக்கே வசதி செய்து கொடுத்தது. விவசாயியின் நிலை நிலப்பிரபுத்துவம், முதலாளித்துவம் என இரு பக்கமும் மத்தளத்தைப் போல இடிதான்.'**

இப்போது நாம் இந்தியச் சூழலில் பார்ப்பனியம், உலகமயமாக்கம் என இரண்டையும் எதிர்கொள்ள வேண்டிய நிலையில் இருக்கின்றோம். இங்கே மாவோவின் கூற்றுதான் நினைவுக்கு வருகிறது. "சமுதாய மாற்றமும், பண்பாட்டு மாற்றமும், பொருளாதார மாற்றமும் ஒன்றன்பின் ஒன்றாக இல்லாமல் ஏக காலத்தில் நிகழக்கூடியதாக இருக்க வேண்டும்" என்பார் மாவோ. இது நமக்கு நன்றாக பொருந்தி வருகிறது. இந்தியச் சூழலில் சாதீயத்தை புறக்கணித்த வர்க்கப் போராட்டங்களும், வர்க்கப் போராட்டங்களைப் பாராமல் சாதியை ஒழிக்க அந்த வர்க்க எதிரிகளிடமே கைகோர்த்து நின்ற போராட்டங்களும் தன்னளவில் முழுமை பெறவில்லை. ஒரு வகையில் வெறும் பிரச்சாரமோ, சட்டவாதமோ, மறுபுறம் வெறும் ஆயுதம் மட்டுமோ நிறைவான போராட்டமாகிவிடாது என்பதை அனுபவங்கள் காட்டுகின்றன. எனவே பார்ப்பனியத்தை எதிர்கொள்ள பண்பாட்டு ரீதியாகவும், அறிவு ரீதியாகவும் கூட போராடியாக வேண்டும். உலகமயமாக்கத்தின் ஆபத்தை உணர்ந்து, ஒருங்கிணைந்து நாம் ஏந்த வேண்டிய ஆயுதம் எது என்பதை தீர்மானிக்க வேண்டிய நிலையில் இருக்கின்றோம். நாம் ஒன்றையொன்று புறக்கணித்தால் ஆபத்துகள் தான் கூடும்.

நம்மைச் சூழ்ந்துள்ள இந்த கொடிய ஆபத்துகள் குறித்து ஏராளமாய் பேசியும், விவாதித்தும் ஆகிவிட்டது. ஆக, இந்தியச் சூழலில் இந்துத்துவமும், ஏகாதிபத்தியமும் ஒன்றே. இதற்கு எதிரான மிகச் சரியான போராட்டங்களை நாம் முன்னெடுக்க வேண்டும். "இப்போதைய இத்தகைய கட்டமைப்புக்கு எதிரான போராட்டதுடன் நாம் ஒவ்வொரு ஆதிக்க எதிர்ப்புப் போராட்டத்தையும் ஒன்றிணைக்க வேண்டும்". அரசியல் போராட்டமும், பண்பாட்டு போராட்டமும் ஏதோ தீண்டத்தகாத துருவங்களாய் நிற்பதில் பயனேதுமில்லை. ஆதிக்கக் கூறுகள் சங்கிலி இணைப்புகளாய் நிற்கும் போது, கூறுகளாய்ப் பிரிந்து நின்று போராடுவது சாத்தியமாகாது என்பதை உணரவேண்டும்.

சமீபத்தில், கனடாவின் 'கெபெக்' என்ற மாநிலத்தில் 34 நாடுகளின் கூட்டமைப்பு "அமெரிக்க உச்சி மாநாடு" என்ற மாநாடாகக் கூடி, தங்களது உலக சந்தை வாய்ப்புகளை நிறுவ கட்டற்ற வர்த்தகம் (FTAA) என்று ஒருங்கிணைந்திருக்கின்றனர். ஏற்கனவே ஐரோப்பிய நாடுகள் "யூரோ என்ற பெயரிலான ஒரே நாணயம், ஒரே சந்தை" என்ற பெயர்களில் ஒருங்கிணைந்ததை நாம் கவனிப்போம்.

ஆகவே, பண்பாட்டு மாற்றத்தைக் கோரும் இந்துத்துவா எதிர்ப்பு போராட்டங்களும், வர்க்கச் சமநிலையைக் கோரும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களும் ஒன்றிணைந்து எழவேண்டிய காலக்கட்டத்தையும், அவசியத்தையும் உணரவேண்டும். இரண்டு போராட்டங்களின் ஒன்றிணைவே இந்தியச் சூழலில், முழுமையான போராட்டமாக அமையும். இப்போராட்டங்கள் கடந்த சூழல் மற்றும் அனுபவங்கள், இன்றைய நிலை, ஆகியவற்றை கணக்கில் கொண்டு, மிகச் சரியான விமர்சன தளத்தில் முன்னெடுக்கப்பட வேண்டும். இன்னும் போராடவே துவங்காத சிறுசிறு துண்டுகளாய்ப் பிரிவது இப்போது சாத்தியமில்லை. நாம் போராடத் துவங்குவோம். போராட்டங்கள் நம்மை ஒருங்கிணைக்கும். ■



படிப்பகம்

www.padippakam.com

நூல் மதிப்புரை
'நெரிந்து'

# இழந்து போன மொழிக்கு மாற்றாய் எதிர்மொழி

சுகுணா திவாகர்



**முன் குறிப்பு:— என்.டி. ராஜ்குமாரின் 'ஒடக்கு' கவிதை நூலும், மதிவண்ணனின் 'நெரிந்து' தொகுப்பும் சமகாலத்தில் வெளிவந்த போதும் 'ஒடக்கு' கவனிக்கப்பட்ட அளவிற்கு 'நெரிந்து' கவனிக்கப்படவில்லை. ஆரண்யம் இதழில் நம்பிராஜன் பிள்ளை(விக்கிரமாதித்யன்) ''ஒடக்கு—ஒரு செவ்வியல் இலக்கிய முயற்சி''—என்று ஏற்கனவே வலுவாய்க் காலூன்றியுள்ள தமிழ்—வெள்ளாள மரபு மய்ய நீரோட்டத்தில் கரைக்கப் பார்க்கிறார். மறுபுறமோ விக்ரமாதித்யன் மீது விமர்சனம் முன் வைக்கும் 'நெரிந்து' போதிய கவனக் குவிப்பு பெறவில்லை.**

யோனிமயிர் துடைக்கவும் லாயக்கற்றவை தான் கவிதைகள். இருந்தும் பேசித் தொலைக்க வேண்டியிருக்கிறது. புராதனக் கிழிசல் மிக்க வலையில் குறுமீன்களே மாட்டுகின்ற போதும் மீண்டும் மீண்டும் கடல் நோக்கிப் போகும் எத்தனங்களைப் போல, இரும்புச் சங்கிலியின் கண்ணிகளைக் கடித்துக் கொண்டிருப்பது தான் நாம் உயிரோடிருக்கிறோம் என்பதை உறுதிப் படுத்துகின்றது. உன்னத உள்ளொளி ஊதுபத்திப் புகை வாசத்தினூடாகக் கவிதையை தரிசிக்கும் ஸ்ரீலஸ்ரீ கவிஞர் பெருமான்களின் மூஞ்சியில் ஒண்ணுக்கு அடிக்கின்றன. மதியின் கவிதைகளில் பாடுபொருட்களாய்ப் பதிவாகியிருக்கும் பாட்டன் தூக்கிய பீவாளி, விரையறுத்துச் சாம்பல் தடவிய பன்றிக்குட்டி, மனுவின் அழுகல் குறி, ஜட்டிக் கிழிசல்கள், குண்டி துடைத்துப் போட்ட குழாயடி வரிசைக்கல், பீடங்களின் சுவர்கள் இடிந்து விழ வெடித்தபடி வெளிக்கிளம்பும் குசு. இன்னபிற புழுத்து வீச்சமெடுக்கும் படையல் அமிர்தங்கள்.

உறைந்து போன தமிழ் இலக்கியப் பரப்பு மீண்டும், மீண்டும் செத்த குழந்தைகளையே பிரசவிக்க, 'இறந்த காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் வைக்கோல் கன்றுகள்' என்று பரிகாசம் பண்ணும் மதியின் கவிதைகள், அவற்றை வழிபட்டுக் கொண்டிருப்பவர்களைப் பரிதாபத்துடன் பார்த்து நகர்கிறது.

திணை, துறை, யாப்பு, மரபு, புனிதம் என ஒடுக்கப்பட்டோர் பிரவேசிக்க முடியாதபடி தனக்குத்தானே கட்டிக் கொண்ட மதில்சுவரைத் துளைக்கின்றன மதியின் ஆசுவாசம் கரைந்து வெளிப்படும் குசுக்கள். மொழி என்பது மனுவின் அழுகல் குறியை ஊம்பும் போது வாயில் வழியும் விந்துதான். ஊம்ப மறுக்கும் தலித்துக்கு மொழியில்லை. காவித்துணி மூடிய உறுமியை நினைத்துப் பார்க்கவும் எழுத்தில்லை. ஆனால், உயர்சாதிக்காரனின் நாய்களிடமிருந்து தப்பி யோடியதை, ஊர்பட்ட விறகு பிளந்து ஒரேயொரு முட்டைக்கோசைத் தாத்தா சம்பளமாய்ப் பெற்றதை, மிண்டிச் சாம்பான் சாணிப்பால் குடித்ததைப் பதிவு செய்துதான் ஆகவேண்டும். மொழி இழந்த, மொழி மறுக்கப்பட்ட மதி, உடலையே மொழியாக்கி காலாகாலத்திற்குமாய் வசவுகளைத் திட்டித் தீர்க்கிறார்.

மதியின் கவிதைகள் உலகைப் புரட்டிப்போடுகிற நெம்புகோல் கவிதைகளுமில்லை. வெற்றுப் புலம்பல்களுமில்லை. 'ஒன்றும் ஆகப் போவதில்லை' என்று தெரிந்தவுடன் 'ஆனது பார்க்கலாம்' என்று மோதிப்பார்க்கிற கவிதைகள். முற்றிலும் அதிகாரமற்ற உறவுகள் சாத்தியமில்லை என்றாலும் கூட அதிகாரத்தை எதிர்த்த கலகங்கள் தவிர்க்க இயலாதவை. இடைவிடாது அதிகாரங்களுக்கெதிராய்க் குரல் எழுப்பிப் பதிவு செய்பவையே மதியின் கவிதைகள். தொடர்ந்த இந்த இயங்கியலே முன் கூறியபடி, நம் இருப்புக்கான உத்திரவாதமாகிறது. இப்புரிதலோடு வாசிக்கிறபோதுதான் 'தெருக்கூட்டுபவனைப் பற்றிய கவிதை, உண்மையில் கவிஞனைப் பற்றியது என்பதும் 'கடைவீதி வேறு இன்னும் நீளமாயிருக்கிறது' என்னும் வரி, ஓயாத எதிர்குரலைக் குறியீடாக்குவதையும் புரிந்து கொள்ள முடியும்.

கவிதைகளில் நான் X நீ என்று கட்டமைக்கப்படும் எதிர்வுகள் முக்கியமானவை. இவ்வெதிர்வுகளே கவிஞனின் சார்பைக் காட்டிக் கொடுப்பவை. மதியின் கவிதைகளில் இயங்கும் இவ்வெதிர்வுகளில் 'நீ' எப்போதும் 'நானு'க்குச் சினேகமாயில்லை. 'நான்' 'நீ'யை எப்பபோதும் குரோதத்தோடு பார்க்கிற பார்வையே இது.

வீடு பற்றி இரு கவிதைகள் தொகுப்பிலுள்ளன. பொதுவாக 'வீடு' என்று பேசும் கவிதைகள் குறிப்பாக 'என் வீடு' என்று பேசும் கவிதையிலிருந்து வேறுபட்டு நிற்கிறது. பொதுவான 'வீடு' என்பதை நிறுவனங்கள், சமூகத்தைச் சந்தித்தல், வீடுபேறு என்றெல்லாம் அர்த்தப்படுத்திக் கொண்டால் இவையெல்லாம் மிகப்பெரிய வன்முறையோடும், வன்மத்தோடும் தொலைவில் கிடுகியோடு காத்திருக்கின்றன. ஆனால் மதியின் 'என் வீடோ' இறுக்கமும், புழுக்கமும் நிறைந்ததாயிருந்தாலும், சரிந்துவிழும் பலவீனத்தோடு ஒழுகிக் கொண்டிருந்தாலும் மிகவும் பாதுகாப்பானது. கதவுகள் பிய்த்தெறியப்பட்டிருந்தாலும் வேறு யாரும் பிரவேசிக்க முடியாதது. அவ்வீட்டை மற்றவர் கண்களிலிருந்து ஒளித்து வைத்தி

'நெரிந்து'
கவிதைகள்.
மதிவண்ணன்
பக்கம் : 47,
விலை ரூ.20/-
வெளியீடு
'வேறுவேறு'
111 ஆ, காந்திநகர்
(பழைய எண் 89ஆ)
ஆத்தூர் – 626 102



படிப்பகம்

www.padippakam.com

ருக்கும் அளவுக்கு கதகதப்பானதும், அந்தரங்கமானதும் அவ்வீடு.


இந்துமதப் பெருந்தெய்வங்களுக்கெதிராகச் 'சிறுதெய்வ வழிபாட்டைத் தூக்கிப்பிடித்தல்' என்பது இன்று பரவலாகப் பேசப்படும் தந்திரமாக இருக்கிறது. ஆனால் மதியின் கவிதையில் வரும் தொல்குடித் தெய்வமோ, மதியைவிடப் பலவீனமாக இருக்கிறது. 'வெட்டவெட்டத் தங்கள் தலைகள் தளிர்க்க வேணுமென்றும்', 'உயர்சாதிப் பெண்கள் கிழிக்க முடியாதபடி தங்கள் பெண்களுக்குத் தங்கத்தால் யோனி வேண்டுமென்றும் வேண்டி நிற்கையில் தன்னால் முடிந்தது இதுதான்' என்று பீ வழிக்கும் கொடுவாளைக் கையளித்துவிட்டு நகர்கிறது. உண்மையில் உயர்சாதி மானுடர்களை விடவும், ஒடுக்கப்பட்டோரின் தெய்வங்கள் பலவீனமாயிருக்கின்றன.

வைதீகச் சனாதனிகள் மன்னிக்கவே முடியாதபடி கலாச்சார மீறல்களும், அதிர்வுகளும் படைப்புகளெங்கும் பதிவு செய்யப்பட்டிருக் கின்றன. ஒடுக்கப்பட்டவன் அத்துகளை மீற வேண்டியது என்பது, அரசியல் தளத்தில் மட்டுமல்லாது, கலாச்சாரத் தளங்களிலும்தான். 'மூனு நாலு அபார்ஷன்களுடனாவது எதிர்காலத் துணைவியை வரச் சொல்வதும்', 'பரஸ்பரம் காதலிகள் மாறித் தழுவி முத்தமிடுவதும்' மீற வேண்டிய அவசியமுள்ளவனின் படைப்புகளிலேயே அவசியமாகிறது. அதிகாரங்களைப் பொத்திப் பாதுகாக்கிற பூதங்கள் யோனிகளுக்கும், குறிகளுக்கும் பூட்டுகள் தயாரித்துக் கொண்டல்லவா இருக்கும்?

'நாய்' என்பது பாலியல் குறியீடாகவும், தத்துவ விசாரணைப் பயன்படு பொருளாகவும் பயன் பட்டு வந்த தமிழ்ச் சூழலில் 'காலங்கடந்துண்ணும் எதிர்மனைப் பார்ப்பான், எச்சிற்களையைத் தெருவில் எறிய, நாய்கள் தெருக்கள் தோறும் குரைத்ததாய்' எழுதும் ஞானக் கூத்தன்களின் பார்ப்பனத் திமிருக்குப் பதில் சொல்வது போல் 'நாய்' ஒடுக்கப்பட்டோரின் குறியீடாக மாறியிருக்கிறது. நாயைப் பார்ப்பதென்பது, பின்புறத்தையும், எச்சில் ஒழுகும் வாயைப் பார்ப்பதாகவே இருப்பதென்பதும் உயர்சாதிக் காரர்களுக்கும் பொருந்தும். 'தலித்'தை உதாசீனப்படுத்திவிட்டுப் போனாலும், உயர்சாதியினருக்கு உள்ளூர அச்சம் இருந்து கொண்டுதானிருக்கிறது. கெட்ட வார்த்தைகளை, உடல் நாற்றத்தை, சத்தமான ஓலங்களை, குடிகார வசவுகளை எல்லாம் அருவருப்போடு பார்க்கிற அச்சம். நெடுந்தூரம் வந்தபின் திகிலோடு நாயைத் திரும்பிப் பார்ப்பதைப் போல.

இறுதியாக,

முன்னுரையில் பெருமாள் முருகன் குறிப்பிடுவதைப் போல எதிர் அழகியலில் மூச்சு முட்டுபவர்கள் ஆசுவாசப் படுவதற்காகத்தான் அந்த 'பூ உதிருவது' பற்றிய கசிந்துருகும் கவிதையென்றால்... வேண்டாம். காலங்காலமாய் முகந்தெரியாமல் நசுங்கிக் கிடந்த நமக்கு பூ உதிர்வது பற்றி என்ன அக்கரை மயிர் வேண்டிக் கிடக்கிறது? அதிர்வுகள் தாங்காது 'அவர்கள்' ஹார்ட் அட்டாக் வந்து சாகட்டும். ■



# தாமிரபரணி
## சூலை 23, 1999

காலம் காலமாக தலித் மக்களின் மேல் நடத்தப்பட்டு வரும் வன்தாக்குதலின் உச்சமாக காவல்துறை, கூலி உயர்வும், அடிப்படை வசதிகளும் கோரி அறவழியில் போராட்டம் நடத்திய திருநெல்வேலி மாஞ்சோலை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் மீது நடத்திய தாக்குதலில் பதினேழு மக்கள் சாகடிக்கப்பட்டனர். (சூலை 23'–1999) பின் இச்சம்பவத்தின் மீது விசாரணைக் கமிஷன் அமைத்து அதன் மூலம், 'மக்களின் முறையற்ற நடத்தையினால் தான் இத்தகைய உயிரிழப்புகள். அரசும், காவல்துறையும் மிகச் சிறப்பாகவே செயல்பட்டுள்ளன' என்ற அறிக்கையை வெளியிட்டு தலித் மக்கள் மீது அரசு நடத்திய தாக்குதலையும், படுகொலைகளையும் நியாயப்படுத்திக் கொண்டது.

இத்தகைய படுகொலைச் சம்பவத்தை முன்னிறுத்தி, 'தாமிரபரணி' என்ற நாடகம் சமீபத்தில் பாளையங்கோட்டை மற்றும் மதுரையில் நடைபெற்ற தலித் கலைவிழாவில் நிகழ்த்தப் பட்டது. திருநெல்வேலியைச் சார்ந்த 'விளிம்பு – பண்பாட்டுப் புரிதலுக்கான தளமும்', 'புதுவை ஆப்டிஸ்ட் குழுவும்' இணைந்து இந்நாடகத்தை உருவாக்கியிருந்தனர். தாமிரபரணி நதிக்கரையில் காவல்துறையினரால் நடத்தப்பட்ட 17 மக்களின் படுகொலைகளில் மறைக்கடிக்கப்பட்ட உண்மைகளையும், அச்சம்பவத்தின் கொடூரத்தையும் இந்நாடக நிகழ்வு முன்னிறுத்தியது. படுகொலைச் சம்பவ புகைப்படங்களும், செய்தித் தாள்களில் வெளிவந்த செய்திகளும், மோகன் கமிசனின் அறிக்கையும் வீடியோ படமாகப் பதிவு செய்யப்பட்டு மேடையின் பின்னணியில் திரையில் ஓட அதை ஒட்டி அவற்றை முன்னிறுத்தியும், விவரணப்படுத்தியும் நாடக நிகழ்வு கட்டமைக்கப் பட்டிருந்தது. நாடக நிகழ்வானது, சாகடிக்கப்பட்ட 17 உயிர்களும் தங்கள் சாவின் கொடூரத்தை விவரிப்பதாக இருந்தது.

உழைக்கும் மக்களின் வாழ்வியல் கூறுகளில் காணப்படும் விளையாட்டுக்கள், ஒப்பாரிப்பாடல்கள், தாலாட்டுப்பாடல்கள், இசை(உறுமி, கட்டைக் குழல்) ஆகியவற்றைக் கொண்டு நாடகம் வடிவமைக்கப் பட்டிருந்தது. வடிவமைப்புச் செய்தவர் மு. சுப்பையா(விளிம்பு), நாடகத்தை இயக்கியவர் முனைவர். மு.ஜீவா(ஆப்டிஸ்ட்), இவர்களிருவரும் பாண்டிச்சேரி பல்கலைக்கழக நாடகத்துறையிலிருந்து உருவான படைப்பாக்கக் கலைஞர்கள்.

இந்நாடகம் இன்னும் பல இடங்களில் நிகழ்த்தப் பட வேண்டும். இது போன்ற படைப்பாக்க முயற்சிகள் தொடர வேண்டும். பண்பாட்டளவில் சலனத்தை படைப்பாக்கத்தின் மூலம் உருவாக்க முடியும். கலை சார்ந்த வெளிப்பாடுகளே பண்பாட்டைத் தீவிரமான விமர்சனங்களுக்கு உட்படுத்த முடியும்.

*—மு. கல்யாணிகுமார்*


படிப்பகம்

www.padippakam.com

# இன்னொன்றைப் பற்றி


ஒன்றைப்பற்றி நான் சொன்னால், அது
இன்னொன்றைப்பற்றியதாய் இருக்கிறது
உண்மைதான்.

ஒன்றைத் தவிர்த்து இன்னொன்றைச் சொல்வது
இயலாது.

பினோஷே பற்றி எழுதுகிறபோது
சுகார்த்தோ பற்றியும் மார்க்கோஸ் பற்றியும்
ஹிட்லர் பற்றியும் எழுதப்படுகிறது.

சிலேயில் காணாமல் போனவன்
இன்னமும் செம்மணியில் புதையுண்டிருக்கிறான்
மிரிசுவில் புதைகுழியும் சூரியகந்தவினதும்
ஒரே கிடங்காகத்தான் தோண்டப்பட்டன.

இன்னும்
யாழ் நூலகத்தை எரித்த நெருப்பில்தான்
பாபர் மசூதியை இடித்த கடப்பாரைகள் வடிக்கப்பட்டன.
அதே நெருப்பு ஆப்கானிஸ்தானில்
புத்தர் சிலைகளை வெடித்துத் தகர்க்கிறது.




ஷார்ப்வில் படுகொலைச் செய்தி
மிலாய் கிராமத்தின் படுகொலையையும்
ஜாலியன் வாலாபாக் படுகொலையையும்
எனக்குச் சொன்னது.



மாவீரன் பகத்சிங் தொங்கிய கயிற்றில்தானே
கயத்தாற்றில் கட்டபொம்மன் தொங்கினான்.
கற்சிலை மடுவில் இருப்பது, தனியே
பண்டார வன்னியனின் நினைவுச் சின்னமா?

இரண்டாம் உலகப்போருக்கு முந்திய
யூதர்கட்கான முகாம்கள் எப்போது மூடப்பட்டன?
மலேசியாவில் கம்யூனிஸ்டுகட்கான முகாம்களும்
தென் வியட்நாமின் மாதிரிக் கிராமங்களும்
தமிழகத்தின் அகதி முகாங்களும் எங்கிருந்து தொடங்கின?



உலகம் ஒரு முட்கம்பி வேலியால் இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது.
தென்னாப்பிரிக்காவில் ஒரு தென்னாப்பிரிக்கனை
உள்ளே வராதே என்று சொன்ன பலகை
ஒவ்வொரு தமிழ்க் கோவிலுள்ளும் ஒரு தமிழனை
நுழையாமல் தடுத்தது.

அமெரிக்காவின் 'கூ//க்ளுக்ஸ்//க்ளான்' (1) கையில் ஏந்திய
தீவட்டிகள் கொண்டு
கீழ் வெண்மணியில் மனிதர்
குடிசைகளுடன் எரிக்கப்பட்டனர்.

மட்டக்களப்புக்குப் போகும் வழியில்
தமிழனிடம் கேட்கப்படுகிற அடையாள அட்டையை
இஸ்ரேலியச் சிப்பாயிடம் பாலஸ்தீனியன் நீட்டுகிறான்.
அயர்லாந்தில் ஆங்கிலேய ஆதிக்கத்தால் அழிக்கப்பட்ட மொழி
துருக்கியின் ஆதிக்கத்தில் உள்ள
குர்தியனின் மொழி அல்லவா.


படிப்பகம்

www.padippakam.com

ஐ.ஆர்.ஏ [2] தடை செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்ட அன்று
குர்தியனதும் தமிழனதும் விடுதலை இயக்கங்கள்
தடை செய்யப்பட்டு விட்டன.

# சி. சிவசேகரம்

ஹரி ட்ரூமன் ஹிரோஷிமாவில் எறிவித்ததும்
வின்ஸ்ற்றன் சேர்ச்சில் ட்டெஸ்டேனில் எறிவித்ததும்
இன்றைய பக்தாத் மீது அல்லவா விழுகின்றன.
வட அயர்லாந்தில் அமைதி காக்கப் போனவர்களே
வட இலங்கையிலும் அமைதி காத்தார்கள்.
" ஒற்றுமையில் அதிகம் இல்லை
வேற்றுமையே முதன்மையானது" என்பவன் அறிவானா?
தென்னிலங்கையின் மானம்பெரிக்கும்
தமிழகத்தின் பத்மினிக்கும் இருந்த வேறுபாடு
மானம்பெரி இறந்ததும் பத்மினி மணமானவள் என்பதுமே என?
கொடிகளின் நிறங்களும் தேசங்களின் பேர்களும்
தேசிய கீதங்களின் மெட்டுக்களும் வேறு,
சீருடைகளின் நிறங்களும் வடிவமைப்பும் வேறு
இந்த வேற்றுமைகள் கொண்டு மறைக்க இயலாத
ஒற்றுமை இருப்பதாலேதான்,
இஸ்ரேல் பற்றி எழுதினால்
சவுதி அரேபிய தணிக்கை அதிகாரியும்
குர்திஸ்தான் பற்றி எழுதினால் இலங்கை அதிகாரியும்
காஷ்மீர் பற்றிச் சொன்னால் பிலிப்பினிய அதிகாரியும்
உள்ளூர்ச் செய்திகள் பற்றிய
தணிக்கை விதிகள் மீறப்படுவதாகச் சினக்கிறார்.
அது சரியானதே
ஒன்றைப் பற்றி எழுதும் எவனாலும்
வேறொன்றைப் பற்றி எழுதுவதைத் தவிர்க்க முடிகிறதா?







* * *

சீனத்துப் பெண்ணின் பாதங்களை இறுகப்பிணித்த
துணி அவிழ்க்கப்பட்டபோது
உடன்கட்டை ஏறிய இந்தியப் பெண் உயிர்த்தெழுந்து
நடந்தாள்.

ஒரு பாலஸ்தீனப் பெண் போராளி
முழு அரபுப் பெண்ணினத்தையும் விடுதலை செய்கிறாள்.
ரஷ்யப் புரட்சி முழு ஆசியாவையும்
ஆப்பிரிக்காவையும் கொலனிய ஆட்சியினின்று விடுதலை செய்தது
கொலம்பியாவின் கெரில்லாப் போராளியும்
மெக்ஸிகோவின் ஸப்பாட்டிஸ்டும்
பிலிப்பினிய மக்கள் படைவீரனும் ஒருவனே.
மறவாதே, காஷ்மீர விடுதலைப் போராளி
ஈழத்தமிழனுக்காகத்தான் போராடுகிறான்.
எனவே
எந்த ஒன்றைப் பற்றிப் பேசும்போதும்
இன்னொன்று பற்றியும், ஏன்
எல்லாவற்றைப் பற்றியும் பேச முடிகிறது.

(1). கூ க்ளுக்ஸ் க்ளான்:- அமெரிக்காவின் தென் மாநிலங்களில் மும்முரமாகச் செயற்பட்டு வந்த வெள்ளை இனவெறி அமைப்பு. கறுப்பர்களைக் கொல்லுதலுக்கும் கறுப்பரின் வீடுகட்கும் தேவாலயங்கட்கும் தீவைத்தலுக்கும் பேர்பெற்றது. இது இன்னமும் முன்னிலும் குறைந்த அளவில் இயங்கி வருகிறது.

(2). ஐ.ஆர்.ஏ.: அயர்லாந்து விடுதலைப் படை. பிரிட்டனிலிருந்து அயர்லாந்து விடுதலைக்காகப் போராடிய அமைப்பின் தொடர்ச்சியாக இன்னமும் வட அயர்லாந்தில் புரட்டஸ்தாந்து அடக்குமுறைக்கு எதிராகவும் முழு அயர்லாந்தினதும் இணைப்புக்காகவும் போராடிவரும் ஆயதமேந்திய போராட்ட அமைப்பு.


படிப்பகம்

www.padippakam.com

*தினமணிகதிர் 20.05.2001 இதழில் தமிழ்ச் சொத்தா? தனிச்சொத்தா? என்ற தலைப்பில் வெளியான புதுமைப்பித்தன் கட்டுரை சம்பந்தமாக 03.06.2001 கதிர் இதழில் வெளியான எதிரொலி கடிதங்களை வாசித்தபோது. . . .*

# காப்புரிமையும் மூலதனமும்



**கா. இளம்பரிதி**

"பு.பி யைச் சுந்தரராமசாமி வீட்டுப் பெட்டியில் வைத்துப்பூட்ட முயற்சிப்ப தற்கான சிறு ஆதாரத்தைக் கூட இளைய பாரதியும் பிறரும் முன் வைக்காத நிலையில்" என்று வாதிடும் கண்ணன், டான்சி வழக்கில் தண்டனை பெற்ற பிறகும் கூட, ஜெயலலிதாவுக்கும் ஊழலுக்குமான (மதவாதத்திற்கும் கூட) உறவிற்குப் போதுமான ஆதாரங்களைக் கேட்கும் வீரமணி முதல் சங்கரய்யா வகையறாக்கள் வரையிலான சட்டத்தின் இருண்ட பொந்துகளில் கை நுளைத்துத் துழாவுபவர்களை ஏனோ ஞாபகப் படுத்துகிறார். ஆனால் மனு காலத்தி லிருந்து இருண்ட இந்த சட்டவாதங்களின் கரியைத் தான் எல்லோர் முகங்களிலும் பூசி வருகிறோம் என்பதை சோ, சேஷன் வகையறாக்கள் ஒளிவு மறைவின்றி பரம்பரை பரம்பரையாக ஒப்புக்கொண்டு வருகிறார்கள். சுமார் 3000 பக்கங்கள் கொண்ட பு.பி. யின் முழுத் தொகுப்புகளின் செம்பதிப்பு மூலமும், பு.பி. யின் பீடத்தில் "தமிழ் இனி" யைத் தீர்மானித்ததின் மூலமும் கிடைக்கப் பெற்ற சர்வதேச தமிழ் இலக்கிய "அத்தாரிட்டி" அடையாளமும், எழுத்து வியாபாரத்தின் முழு லாபமும் காலச்சுவடு அறக்கட்டளைக்கே கிடைத்த பிறகும், பு.பி. யின் பெயரில் பதிப்பகம் நடத்தும் துணிவு இளையபாரதிக்கு வந்திருக்கக் கூடாதுதான். தேனெடுத்தவன் புறங்கையை நக்காமல் இருப்பானா?

பு.பியால் அடைந்த லாபக் கணக்கு – அறக்கட்டளை என்ற பெயரிலான முதலாளித்துவ அடையாளம் – வேறெந்த சிற்றிதழுக்கும் வாய்க்காத மேட்டுக்குடியினருடனான (இலக்கிய) உறவு, இலக்கிய அதிகார வர்க்கத்தின் பூனைப்படைப் பாதுகாப்பு அனைத்தும் ஏற்றிய தலைக்கனம் "ராயல்டி" பூச்சாண்டி காட்டி ஒரு பன்னாட்டு நிறுவனத்தின் திமிரோடு "காப்புரிமை" (Pattern Right) பற்றி தமிழ் இலக்கிய உலகிற்கு காலச்சுவடு எச்சரிக்கத் தூண்டுகிறது. வேம்பு, மஞ்சளுக்கு "அமெரிக்க வெள்ளையர்கள் " காப்புரிமை கொண்டாடும் காலத்தில், லாபம் தரும் தமிழ் இலக்கியங்களுக்கு "தமிழக வெள்ளையர்கள்" காப்புரிமை கொண்டாடுவதில் வியப்பொன்றுமில்லை. அமெரிக்க ஏகாதிபத்தியம் – பன்னாட்டுக் கம்பெனிகள் – வெள்ளைப் பேரினவாதிகள் இந்திய/தமிழ் நிலத்தையே "காப்புரிமை" செய்ய நேர்ந்தால், இந்துத்துவ பயங்கரவாதம் – ஸ்ரீராம் கம்பெனிகள் – ஆரிய இனவாதிகள் தமிழுக்கே "காப்புரிமை" கொண்டாடுவதும் நடக்கும். உரிமை உணர்வோடு தொடர்புடையது. காப்புரிமை லாப வெறியோடு தொடர்புடையது.

வேடிக்கை என்னவென்றால், அடையில் சொட்டிய தேனில் ஒரு பொட்டும் கிடைக்கப் பெறாதவர்கள் கூட, காலச்சுவடு கட்டியெழுப்பியிருக்கும் பு.பி. யின் புனித பீடத்தில் "அம்மா"வின் தீவிர விசுவாசிகளைப் போல வேப்பிலை கட்டிக்கொண்டும், சந்தனம் பூசிக் கொண்டும் அவரவர் பாணியில் சாமி தரிசனம் செய்திருக்கிறார்கள் – பு.பி. சர்ச்சையின் ஏனைய கடிதங்களிலிருந்து . .

*உண்மையில் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் தான் பு.பி.யின் படைப்புகளை நாட்டுடைமையாக்க வேண்டும் என்ற கோரிக்கையை முதன் முதலில் வைத்தது. பு.பி. குடும்பம் விரும்பினால் த.மு.எ.ச களத்தில் இறங்கும்.*

– ச.செந்தில்நாதன்,
தலைவர், த.மு.எ.ச, சென்னை.

**தலித்துகள் காலகாலமாக இறங்கி சுத்தம் செய்து வரும் ''சமூக'' சாக்கடைகளைத் தவிர த.மு.எ.ச. இறங்க அஞ்சாத களமும் உண்டோ?** *(அதுவும் சம்பந்தப்பட்டவர் மனம் நோகாமல்!)*

*கல்வியமைச்சர் தம்பிதுரையும், புதிய அரசும் இதை முதற்காரியமாக எடுத்துக் கொண்டு நாட்டுடைமையாக்கினால் தமிழ் இலக்கிய உலகம் கை கூப்பி மகிழும்.*

– ராசி.அழகப்பன், சென்னை.

**தமிழ் வழிக்கல்வி, புதிய கல்வித் திட்டம், அனைத்துக் கிராமங்களுக்கும் ஆரம்பக் கல்வியைக் கொண்டு சேர்த்தல் போன்ற கடமைகளை விட தமிழ் இலக்கிய உலகிற்கு செய்ய வேண்டிய முதல் காரியத்தை கல்வியமைச்சருக்கு ஞாபகப்படுத்தும் அழகப்பனுக்கு நன்றி பல.**

*புதுமைப்பித்தன் எழுத்துகளை [illegible],* சர்வதேசப் பொருள். *தமிழ் இலக்கியத்தைச் சர்வதேசத் தரத்திற்கு உயர்த்திய படைப்பாளி நூல்களை அரசுடைமையாக்கி. . .*

– முருக செல்வராசன்,
மாநில அமைப்பாளர், தமிழ்நாடு பாரதி இலக்கியப் பேரவை, நாமக்கல்.

*புதுமைப்பித்தன் போன்றவர்கள் வரிசையில் உள்ள* **கட்சி சாராத** *படைப்பிலக்கியவாதிகளின் படைப்புகளை நாட்டுடைமையாக்குவதில் தற்போதுள்ள அரசு கவனம் செலுத்துமானால் அது தமிழ் இலக்கிய உலகிற்குச் செய்த மாபெரும்* **தொண்டாகக்** *கருதப்படும்.*

– கீதா சீனிவாசன், பட்டுக்கோட்டை.

*நடக்கும் சண்டையில் யார் வெற்றி பெற்றாலும்* **தோற்கப் போவது** *புதுமைப்பித்தனே! இதில் வழி விடுகிறவரே வழி காட்டப்போகிறவர்!*

– அரிமதி தென்னகன், புதுவை.

*நடந்ததை மறந்து ஒன்றுபட்டு புதுமைப்பித்தன்* **பெயருக்குப் புகழ்** *சேர்க்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.*

– சங்கொலி பாலகிருஷ்ணன், மும்பை.

*பெரியார், சத்யஜித்ரே, மாசேதுங், வைக்கம் முகம்மது பஷீர் என* **பு.பி.க்குச் சற்றும் குறையாத** *ஆளுமைகளைத் தமிழில் பு.பி.*


படிப்பகம்

www.padippakam.com

*பதிப்பகம் கொண்டு வந்திருப்பது அவருக்கு இழிவா?*

—இளையபாரதி,

புதுமைபித்தன் பதிப்பகம், சென்னை.

மேற்கண்ட கடிதங்களில் இருக்கும் தடித்த வார்த்தைகளே, அக்கடிதங்களின் மீதான நமது விமர்சனங்களுக்குப் போதுமானது.

இறுதியாக,

"பு.பி. தொடர்பான பிரச்சனையில் தினகரி சொக்கலிங்கம் பின்னால் நின்று நாங்கள் இயக்குவதாகக் குற்றம் சாற்றுபவர்கள் ஒன்றைத் தெளிவு படுத்த வேண்டும். நேரடியாக மோதினால் என்ன செய்து விடுவீர்கள்?" என சவால் விடும் கண்ணனுக்கு . . . .

சம்புகன், ஏகலைவன், வாலி, நந்தன், அம்பேத்கர் என தன்னை எதிர்த்த எவனையும் முதுகுக்குப் பின்னிருந்து – சதி செய்து கொன்றழித்தது பாப்பனியம். புராண – இதிகாச – காலனியாதிக்கக் காலத்திலிருந்து நவீன காலம் வரை சிதைவுராத உங்கள் பரிணாம வளர்ச்சியின் அசுர பலம் நாங்கள் அறியாததல்ல. மேலும் திராவிட தமிழ் மக்களின் "அம்மா"வாகப் பரிணமித்திருக்கும் "பாப் பாத்தி" ஜெயலலிதாவின் பாதந்தாங்கிகளான வீரமணி – சங்கரய்யாக்களின் துரோகத் தனமும் நாங்கள் புரியாததல்ல. பார்ப்பன இந்துராஷ்ட் டிரம் அல்லது ராம ராஜ்ஜியம் அமைக்கப் பன்னெடுங்காலமாக நிகழ்ந்து வரும் சதித் திட்டங்களின் தொடர்ச்சியாக 1920களில் உருவாக்கப்பட்ட ஆர்.எஸ்.எஸ். இயக்கம் இன்று முகமூடிகளைக் கழற்றிவிட்டு நேரடியாகவே களத்தில் இருக்கிறது. இச்சூழலில் துரோகி களின் துணையோடு "நேரடியாக மோதினால்" என்று பயம் காட்டத் தேவையில்லை. நாங்களும் "நேருக்கு நேர்" சந்திக்கவே விருப்பப் படுகிறோம். எங்கள் வியர்வையும், இரத்தமும் பருகி உயிர் வாழும் உங்களுக்கே இவ்வள வென்றால், இன்னமும் வற்றாத வியர்வை யோடும், எஞ்சிய உதிரத்தோடும் உயிரோடு மட்டுமல்ல உணர்வோடும் களத்திலேயே காத்திருக்கும் எங்களுக்கு எவ்வளவு இருக்கும். ராமனின் சூழ்ச்சி வாலிக்குத் தெரியாமல் போனது. ஆனால் வாலியின் பலம் ராமனுக்கு நன்றாகவே தெரியும். "நேரடியாக மோத" முடிவெடுத்த பிறகு, "என்ன செய்வீர்கள்?" என எதிரியிடமே அறிந்து கொள்ள நினைப்பது அறிவீனமா? நவீன பார்ப்பனியத் தந்திரமா?

---

மதிப்புரை

# சனதருமபோதினி

## பெருமாள் முருகன்



கதைகள், கவிதைகள், கட்டுரைகள், பேட்டிகள் ஆகியவை அடங்கிய தொகுப்பு நூல் 'சனதருமபோதினி' ஈழத்தில் தலித்துகளுக்காகப் பாடுபட்ட 'யோவல்போல்' என்பவரின் நூற்றாண்டு நினைவாக, அவர் 1927–ல் நடத்திய வாரஇதழின் பெயரிலேயே இத்தொகுப்பு வெளியிடப்பட்டிருக்கிறது. இதில் உள்ளவை 'சின்னக் கதையாடல்கள்' என்று குறிப்பிடப்படுகின்றன. இத்தொகுப்பிலுள்ள கதைகள் அனைத்தும் 'பண்ணப்பட்டவையாக' இருக்கின்றன. நட.சிவகுமாரின் 'கேரளபுரம்' என்னும் சிறுகதை மட்டும் மாறுபட்ட கோணத்தில் சொல்லப்பட்டுள்ளது. என்.டி. ராஜ்குமார், யவனிகா ஸ்ரீராம், சுகுணா திவாகர் ஆகியோரின் கவிதைகள் பொதுப்போக்கை மீறும் மொழிநடையைக் கொண்டுள்ளன.

குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியவை இதிலுள்ள கட்டுரைகள். மு.சுப்பையாவன் 'தாமிரபரணி நதிப் படுகொலைகள்', 1999, ஜூலை 23–இல் திருநெல்வேலியில் நடைபெற்ற படுகொலைகள் பற்றியது. அரச எந்திரம் தலித் மக்களுக்கு எதிராக வன்மையாகச் செயல்படுவதையும் மத்தியதர வர்க்கத்தினரின் கருத்தியல் சாதி ஆதிக்க மனோபாவத்துடன் கட்டமைக்கப்பட்டுள்ளதையும் பல்வேறு ஆதாரங்களின் அடிப்படையில் விவரிக்கிறது இக்கட்டுரை. இப்பிரச்சனையோடு தொடர்புடைய அனைத்துத் தரப்பினரின் செயல்பாட்டையும் விமரிசனக் கண்ணோட்டத்தோடு அணுகியுள்ளார் மு.சுப்பையா. வரலாற்றில் மறக்கப்படும் சம்பவமாக இப்படுகொலை மாறிவிடாமல், நினைக்கப்பட வேண்டியதற்கான காரணங்களை முன் வைத்து முடிகிறது. 'எழுத்துக்களின் வன்முறை' என்னும் அறிவழகனின் கட்டுரை, 'காணிக்காரர்கள்' எனப்படும் பழங்குடி மக்களைப் பற்றியானது. எழுத்துச் சமூகம், வாய்மொழிச் சமூகத்தின் மீது செலுத்தும் வன்முறையை அடிப்படை நோக்காகக் கொண்டு, களஆய்வுத் தரவுகள் விரிக்கப்படுகின்றன. எழுதத் தெரிந்தவர்கள் அறிவாளிகளாகவும் எழுதத் தெரியாதவர்கள் தற்குறிகளாகவும் கட்டமைக்கப்பட்ட கருத்தியல், பழங்குடி மக்கள் மீது நேரடியாக வன்முறையைச் செலுத்துவதற்குக் காரணமாகிறது. அவர்களின் வாழ்க்கை முறையைச் சீர்குலைக்கும் நடவடிக்கைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. 'கண்டதேவி சொல்லும் சேதி' என்னும் கட்டுரையை குமரன்தாச எழுதியுள்ளார். கண்டதேவியில் ஏற்பட்ட தேரோட்டப் பிரச்சினை யைப் பற்றிய இக்கட்டுரை, சாதியத்தைக் கட்டிக்காக்கும் அரசு, நீதிமன்றம், கருத்தியல் ஆகியவற்றைச் சாடுகிறது. இம்மூன்று கட்டுரைகளும் அரசு என்னும் நிறுவனத்தின் சாதியச் சார்பை, பயங்கரவாதத்தை, தந்திரத்தை, கருத்தியலை வெளிக்கொணர்வதை மையமாகக் கொண்டுள்ளன. இவை ஒவ்வொன்றின் விமர்சனப் பார்வையும் வித்தியாசமானவை. கோட்பாடுகளை மட்டும் உதிர்த்துச் செல்லாமல் அவற்றைத் தரவுகளோடு பொருத்தும் ஆய்வுமுறை இவற்றைத் தனித்தியங்கச் செய்கின்றன. தலித் பிரச்சனையை இத்தகைய கட்டுரைகளே மையத்திற்கு எடுத்துச் செல்லும் என்று தோன்றுகிறது.

'தமிழக முஸ்லீம்கள்:எதிர்காலத்தின் அரசியல்' – ஷாஜஹானின் கட்டுரை, 'குண்டுகள் வேண்டாம்; தற்காப்பிற்கு வேறு வழிகளை யோசியுங்கள்; அமைப்பாகத் திரளுங்கள்; ஒன்றிணைந்து நில்லுங்கள். இதர சனநாயக சக்திகளோடு கரங்கோர்த்துச் செயல்படுங்கள்; மத வெறியை எதிர்கொள்ள ஒரே வழி இதுவே' என்றும் முடிவை முன் வைக்கிறது. சிறுபான்மை மதவாதத்திற்கு அடிப்படைக் காரணம் பெரும் பான்மை மதவாதமே என்பது இக்கட்டுரை வழியாகத் தெளிவாகிறது.

'எதிர்கலாச்சாரக் கதைகளும் சம்பவங்களும்' என்னும் என்.டி. ராஜ்குமாரின் கட்டுரை, மிகுந்த உவப்போடு படிக்க வைக்கிறது. மீறல்களில் இருக்கும் மகிழ்ச்சியை இதன் வழி உணர முடிகிறது.

'ஏன் நமக்கு நீட்ஷே' என்னும் தலைப்பில் வெளியாகியுள்ள அ.மார்க்ஸின் பேட்டியும் குறிப்பிடத்தகுந்தது. தத்துவத்தின் பணி பதில்களை முன்வைப்பதல்ல; கேள்விகளை எழுப்புவதுதான் என்பதிலிருந்து பல கருத்துக்களை அவர் கூறியுள்ளார். தமிழ்ச்சூழலில் பல்வேறு விவாதங்களை உண்டாக்க வேண்டிய பேட்டி இது.

மேற்சொன்ன கட்டுரைகளும் பேட்டியுமே இத்தொகுப்பிற்குச் 'சின்னக் கதையாடல்கள்' என்னும் அர்த்தத்தைத் தருகின்றன. ■

'சனதருமபோதினி', சுகன், ஷோபாசக்தி(வெளியீடு:அடையாளம்), H 15, 193, இரண்டாவது மாடி, கருப்பூர் ரோடு, புத்தானத்தம் 621 310, பக்கங்கள் : 216, விலை ரூ. 100/–



படிப்பகம்

www.padippakam.com



# கடிதங்கள்

புதியதடம் படித்தேன். நன்றாக வந்துள்ளது. ஆனால் இன்னும் இறுக்கம் தேவையென நினைக்கிறேன். கவிதைகளில் இன்னும் தீவிரம் காட்டுவது நன்று. தத்துவார்த்தக் கட்டுரைகளுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுங்கள். 'கவர்னர் பெத்தா' பற்றிய விஜி ஜெயச்சந்திரனின் விமர்சனம் நன்று. இருப்பினும் ஆரம்பத்தில் கொஞ்சம் நைசாகப் பேசி விட்டார்களோ என எண்ணுகிறேன். தோப்பில் முகமது மீரானின் படைப்பு முதிர்ச்சியானது. இறுக்கமான படைப்பு மொழியைக் கையாண்டுள்ளது. வட்டார வழக்கும் உண்டு. ஆனால் கவர்னர் பெத்தாவைப் பொறுத்தமட்டில் ராமநாராயணனின் படங்களிலும் மிகக் கீழான படைப்பாகவே நான் கருதுகிறேன். அதற்கு 'ரோசாப்பூ கைத்துண்டு' கதையே மிகச்சிறந்த உதாரணம். சும்மா வட்டார மொழியில் பேசினால் உடனே அது நல்ல படைப்பு என்கிற எண்ணமும் நமக்கு வரக்கூடாது.

**— என். டி. ராஜ்குமார், நாகர்கோவில்.**

பாரதி — ஆவணமும் புனைவும் என்ற ஸ்டாலின் ராஜாங்கம் கட்டுரை ஊடாகப் பிம்பங்களின் முன்மொழிவை முன் சாக்காக வைத்துக் கொண்டு பாரதியை மதிப்பிடுகிறார். உண்மையில் ஒரு விமர்சகன் என்பவன் விமர்சிக்க எடுத்துக் கொள்ளும் நபரை, அந்த அந்தக் காலச் சமூகப் பின்னணியில் அன்றைய சமூக எதார்த்தத்தில் வைத்து விமர்சிக்க வேண்டுமே தவிர எல்லாவிதமான வாய்ப்புகளும், புதிய புதிய அறிவுத்துறை மரபுகளின் எழுச்சியின் செல்வாக்குகளும் ஒருங்கே வாய்க்கப்பட்ட இன்றைய யதார்த்தத்தில் நின்று கொண்டு விமர்சிக்கக் கூடாது. அந்த வகையில் ஸ்டாலின் ராஜாங்கத்தின் மதிப்பீடுகள் விமர்சன பூர்வமான அணுகுமுறை அல்ல.

**— பாட்டாளி, திருச்சி.**

இதழின் கருத்துச் செறிவு மிகக் கூடுதலாய் உள்ளது. வாழ்த்துக்கள். கா.இளம்பரிதியின் 'டேய்...ஞானக்கூத்தா'. . . மிகச்சரி.

**— பொள்ளாச்சி நசன்.**

பொதுவாக 'புதியதடத்தில்' வெளிவரும் வாசகர் கடிதங்கள் இருவிதமான போக்குகளைக் கொண்டிருக்கின்றன. பு.த ஒரு மார்க்சியச் சார்புள்ள இதழ் என்று கருதி (அ) நம்பி, அதே சார்பு தொடர வேண்டுமென்று விரும்புகின்றன. அல்லது, பு.தடத்தின் மார்க்சிய சாரம் போதாது இன்னும் அதிகமாக ஊற்ற வேண்டுமென்று நினைக்கின்றன. ஆனால் உண்மையில் பு.த என்ன மாதிரியான இதழென புலப்படவில்லை. 'புதிய', 'தடம்' மாதிரியான சொல்லாடல்கள் மிகுதியும் மார்க்சியர்களால் (குறிப்பாக எம்.எல்) அதிகமும் பயன்படுத்தப்பட்டு வருபவை. மேலும் சில கட்டுரைகளின் சொல் நடையும் கூட புதிய ஜனநாயகம், புதிய கலாச்சாரம் வகை மாதிரியானவையாகவே இருக்கின்றன. ஆனால் 'கதையாடல்கள்' என்பது மாதிரியான பின்நவீனச் சொல்லாடல்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. தலித் விடுதலைக்குக் கூடுதல் அழுத்தம் தருவதாகவும் தோன்றுகிறது. இந்த அடையாளச்சிக்கல் ஒருபுறம் நீடிக்கிறது. நிற்க. 'பாரதி' பற்றிய ஸ்டாலினின் விமர்சனம் அருமை. புதுமைப்பித்தன், மௌனி மாதிரியான இலக்கிய ஆதர்சங்கள் கட்டவிழ்ந்து கிடக்க, பாரதி மட்டும் இன்னும் பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, அரசு விழாக்கள், இடதுசாரிகளின் கலாச்சார விழாக்கள் என எல்லா வற்றிலும் பேசு பொருளாய், பெருங்கதையாடலாய் நிற்கிறான். நிறப்பிரிகை கூட பாரதி மீது கைவைக்கத் தயங்குவது ஏன் எனத் தெரியவில்லை. முற்போக்கு வேடம் காட்டும் பாரதி மாதிரியான பார்ப்பன ராஸ்கல்களைத் தொடர்ந்து கட்டவிழ்க்க வேண்டும். (அவர்கள் தனி மனித வாழ்முறையின் மீதான ஆதர்சத்தையும் தாண்டி): 'பாரதி' திரைப்படத்தின் வழி பார்த்தாலும் 'ஆர்யா' என்னும் தலித், கிறித்துவ மதத்திற்கு மாறியவுடனேயே தான், பாரதி தலித்துக்கு (கனகலிங்கம்) பூணூல் அணிவிக்கிறான். பார்ப்பனியம் தன்னைத் தக்க வைத்துக்கொள்ள தலித்துக்குப் பூணூலும் அணிவிக்கும்; B.J.P யின் தலைவராகவும் ஆக்கும். மேலும் வ.வே.சு. பார்ப்பானைப் பாரதி சந்தித்து வாளைச் சுழற்றும் காட்சி அப்பட்டமான ஷாகாவை நினைவு படுத்துவதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். தி.க, பெரியார் தி.க என்று பெரியாரியக்கங்களில் இருந்தவன், செயலாற்றியவன் என்ற முறையில் குமரன்தாசவின் 'பேண்டவனை விட்டு விட்டுப் பீயை நோவானேன்?' உண்மையான மனப்பதிவாய் இருந்தது என்பேன். இன்று பெரியாரிஸ்ட்களும், மார்க்சிஸ்டுகளும் பூணூல் போடாத பார்ப்பான்களாகிக் கிடக்க, தலித் அரசியலும் அதே திசையில் நகர்வது வருத்தமளிப்பதாயுள்ளது. ஆனால் கட்டுரையின் இறுதியில் மாவோ சொன்னதாய் உள்ள மூன்று வழிகளில், முதல் வழியின்படி 'தலித்துகள் கம்யூனிஸ்ட்களின் தலைமையை ஏற்றுச் செல்ல வேண்டும் என்கிறாரா? ('விவசாயிகள்' என்பதற்குப் பதில் 'தலித்துகள்' என மாற்றிப் படித்தால் அத்தகைய பொருள்தானே வருகிறது?) இது சாத்தியம் தானா? இன்னமும் தலித்துகள் கம்யூனிஸ்ட்களை நம்புவார்கள்? தலித் விருதுகள் க.சுப்பையா கட்டுரையில் 'தலித் துரோகிகளைத் தூக்கிலிடுவோருக்கு விருது அளிக்க வேண்டும்' என்றெல்லாம் எழுதுவது எதில் கொண்டுபோய் விடும்? ஏற்கனவே ஈழம் தொடங்கி பல்வேறு போராட்ட இயக்கங்களிலும் மாற்றுக்கருத்துக்கள் உள்ளவர்கள் 'துரோகி' என அடையாளப் படுத்தப்பட்டு, கொல்லப்படுவதான பாசிச நடவடிக்கைகள் தொடர்கின்றனவே? வெறுமனே உணர்வுத் தளத்திற்கு முக்கியத்துவம் தந்து, தனிமனிதத் தீர்மானங்களுக்கும், மய்யப் படுத்தப்பட்ட பாசிசத்திற்கும் இடம் தந்துவிடக்கூடாது எனத் தோன்றுகிறது. 'டேய் ஞானக்கூத்தா' இளம்பரிதியின் குறிப்பு உண்மையான காத்திரத்துடன் குறிப்பிட்டுச் சொல்லும்படி இருந்தது.

**— சுகுணா திவாகர்.**

ராமாயணம் கவிதை நன்றாக இருந்தது. நான் முதல் சொன்னது போல் தான் சொல்ல வேண்டும். கவிதையின் பேசுபொருள் எவ்வளவு முக்கியமோ அதேபோல் கவிதையின் படிமம் முக்கியம். படிம முக்கியத்துவத்தையும் கடந்து வேறொன்றாக உருப்பெறினும் நல்லதே. ஆனால் தற்போதைய நிலையில் இவ்வாறான பேசுபொருள் உள்ள கவிதைகள் எளிய வடிவில் இருப்பது நல்லதே. சுப்பையாவின் விருது கொடுக்கும் பட்டியலைத் துண்டுப்பிரசுரம் அடித்து வெளியிட்டால் என்ன என்று தோன்றுகிறது. குமரன்தாசு அவர்களின் கட்டுரை கம்யூனிஸ்டுகளின் (கம்யூனிஸ்டுகள் என்று பயன்படுத்தியது நமது கம்யூனிஸ்டுகள் எல்லோரும் வரட்டு கம்யூனிஸ்டுகள் தானே) குண்டிக்குள் வெடியைக் கொழுத்திப் போட்டிருக்கிறது. எல்லோரும் இப்போ குந்த முடியாமல் ஓடித் திரிவார்கள். மிக இலகுவாக பிரச்சனையை விளங்கப்படுத்தியுள்ளது கட்டுரை. இங்கும் கம்யூனிசக் காய்ச்சலில் கனபேர் திரியினம். இது கம்யூனிசத்தின் குறையல்ல. அவர்களின் எதிரி என்னவோ அதற்கு எதிர் என்ற நிலை. அது என்ன கறுமமாகவும் இருக்கலாம். இப்படித்தான் பார்பான் எதிரியல்ல பார்ப்பனியம் தான் எதிரி என்று சாதாரண அறிவுகூட இல்லாது யாரோ சொன்னதை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதைவிட இங்கு நதியின்


padippakam

www.padippakam.com

மரணம் வீடியோ விவரணப்படம் திரையிட்டபோது கருணாநிதி ஒடுக்கப்பட்டவர் தானே. அவர்தானே மக்களை ஒடுக்குகிறார் அப்ப உங்கள் தலித் கோசம் என்னாகிறது. இங்கே ஒடுக்குகிறவன் தான் இன்னொருவனை ஒடுக்குகிறான். அப்ப ஏன் பார்ப்பான் பார்ப்பான் என்று கூச்சல் போடுகிறீர்கள் என்ற தொனியில் கேட்டார்கள். இவர்களுக்கு ஆதிக்க சிந்தனை என்பதும் தெரியாது ஆதிக்க சக்தி என்றால் என்னவென்றும் தெரியாது. முதலில் இவர்கள் கம்யூனிசப் போர்வையைக் கழற்ற வேண்டும். இப்போ நாம் கருணாநிதி செய்கிற ஊழல்களுக்கெல்லாம் பெரியாரைக் குறை சொல்ல முடியுமா? ஆனால் இவர்கள் கருணாநிதியை வைத்தும், நந்தன் பத்திரிக்கைளை வைத்தும் தான் பெரியாரை அளவிடுவார்கள். அவர்களுக்கு அது தான் தேவை. பாரதி பற்றி வந்த 2 படங்கள் பற்றி எதிர்மறையாக விமர்சனம் வரவில்லை என்று ஸ்டாலின் ராஜாங்கம் எழுதியிருந்தார். ஆனால் தலித் முரசில் வே.மதிமாறன் நல்ல விமர்சனம் ஒன்றை எழுதியிருந்தார். பாரதி பற்றிய இவர்களின் குறளி வித்தைகள் எதற்காக என்பது எல்லோருக்கும் தெரியும்தானே. பொய்யும் புரளியும் காட்டி கலைப்படம் எடுக்கிறேன் எனக் கதை விடும் நல்ல திருடன் (திருடன் =மணிரத்தினம்) ஞானராஜசேகரனிடம் இருந்து பெரியாரைக் காப்பாற்ற வேண்டும். அடுத்ததாக சின்ன ஆசை இருக்கும் அவருக்கு.

— கற்சுறா, பிரான்சு.

மேற்கத்திய Committed writers இடம் உள்ள சமூக மாற்றம், பொருளாதார மாற்றம் குறித்த அக்கறை அவர்களின் கவிதைகளில் சதைக்குள் ஊடுறுவும் எலும்புகளாய் மறைந்து கவிதைளை ஸ்திரப்படுத்தும். ராமாயணம் கவிதை சம்பவங்களை வெளிப்படையாய் பேசினாலும் அதில் கோபம் தொனிக்கிறது அழகாக. கவிதையாக்கலில் இன்னும் கொஞ்சம் மெருகு கூட்டியிருக்கலாம். தலித்துகளின் வாழ்வில் உள்ள மேன்மை பொருந்திய விஷயங்கள் இன்னும் வெளிச்சத்திற்குக் கொண்டு வரப்படவில்லை. அவர்களின் வாழ்வுமுறை, அவர்களின் அன்றாட பழக்க வழக்கங்கள், அவர்களின் திறமைகள் இப்படிப்பட்ட வாழ்வுக்கூறுகள் வெளிச்சத்தில் பதிவாவதில்லை. ஏதோ இங்கொன்றும் அங்கொன்றுமாகத் தான் பதிவாகிக் கொண்டிருக்கின்றன. எவ்வளவு பெரிய உயிர் காக்கும் செயலைச் செய்தாலும், அந்த நேரத்தில் செலுத்தும் மரியாதை போலீசாருக்குக் கொடுக்கும் லஞ்சம் போல பின் மறக்கப்பட்டு சாதியக் கட்டுமான வெளியில் மட்டம் தட்டப்படும் அவலம் அபிமானியின் கதையில் மிகவும் சிறப்பாக வந்துள்ளது. நல்ல கதை. சிதறும் சிறிப்பு—அன்பாதவன் கவிதை இரண்டு நிலைகளில் இயங்குகிறது. முதல்நிலை—தலித்துகள் கூழுக்காகக் கையேந்துதல்—அடுத்து—கவிஞர் இக்காட்சியைப் பார்த்து கல் தலித்துகளைப் பார்த்துச் சிரிப்பதாக கற்பனிக்கிறார். இந்த இரண்டும் காட்சிப் படிமங்களாக மட்டும் நம்முன் வெற்று வார்த்தைகளால் அடுக்கப்படுகிறது. அடுத்து உடனே ஏந்தும் கரங்கள் ஒரு நாளில் எழும்/சிரிக்கும் கல் விரைவில் சிதறி விழும்—என்று தன் விருப்பத்தை வெளியிடுகிறார். இதில் கவித்துமும் கவிதையும் எங்கே இருக்கிறது. குமரன்தாச—வின் கட்டுரைக்கு Special பாராட்டுக்கள். பார்ப்பான்—பார்ப்பனீயம் போன்ற கருத்துக்கள் பற்றிய புதிய எல்லைகளை நமக்கு வெளிச்சமிட்டுக் காட்டுகின்றன.

— பிரதீபா ஜெயச்சந்திரன்,புதுவை.

புதியதடம் இதழை வாசித்து வருகிறேன். மாற்றுச் சிந்தனைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் இதழின் தன்மை மகிழ்ச்சி தருகிறது. தொடர்ந்து நடத்துவதற்கு முயலுங்கள். என் போன்றவர்களால் கனவாக மட்டுமே காணக்கூடிய செயலை நீங்கள் செய்கிறீர்கள். வாழ்த்துக்கள்

— பெருமாள் முருகன். அய்யக்கவுண்டன்பாளையம்.

தலித் விருதுகள் பற்றிய கட்டுரை தீவிரத் தன்மையுடன் இருந்தது. விருதுகளின் கேவலம் புரிந்துகொள்ள முடிந்தது. பாரதி பற்றிய படம் மற்றும் ஆவணப்படம் குறித்த கட்டுரை பல கேள்விகளை எழுப்பியுள்ளது. பாரதி பற்றிய புனித பிம்பத்தை உடைப்பதாக இருக்கிறது. இது பாரதியைக் குறைத்து மதிப்பிடுவதாகச் சொல்லவும் முடியாது. விமர்சனம் வேறு. மதிப்பீடு வேறு தானே.

— பெ. அய்யனார்.மதுரை.

இந்தத் தேர்தலில் மக்கள் அரசியல்வாதிகளை செருப்பு எடுத்து அடிக்கவில்லை. மாறாக, ஊழல்வாதிகளை, இனத்துரோகிகளை வரவேற்று கோட்டையிலே அமரவைத்து வேடிக்கை பார்த்துள்ளார்கள். பாதிமக்கள் வாக்களிக்கவில்லை என்பதே பெரும் மனநிம்மதி. புத்தக விமர்சனங்கள் வரவேற்கத்தக்கவைதான். இவ்வளவு நீளமாக இருக்க வேண்டுமா, ஒரு பக்கத்திற்கு மேற்படாமல் இருக்க வேண்டும். கவனிக்க. தலித் விருதுகள் ஓர் அருமையாக உள்ளது. தோழர்.க.சுப்பையா கூறும் விருதுகளை அவசியம் வழங்கலாம். அருமையான யோசனைகள். திரைவிமர்சனங்களையும் வளவளவென்று எழுதவேண்டாம். இடஒதுக்கீட்டின் இன்றைய நிலையை மிகச் சரியாக எழுதியுள்ளீர்கள். இந்த ஒதுக்கீட்டினை, உரியவர்கள் எந்தப் பயனும் அடையாவிட்டாலும் அரசியல்வாதிகள் இதன் பேரால் நடத்தும் கூத்துக்கள் ரொம்ப அநீதியானது. அபிமானியின் கமிஷன்கள் அருமை. இந்த விசாரணைக்குழுக்களால் பாதிக்கப்பட்டவர்கள் இதுவரையிலும் எந்தப் பயனையும் அடைந்ததாக வரலாறு இல்லை. உண்மைகளைக் கண்டறிய அமைக்கும் கமிஷன்கள் எவ்வளவு பொய்களை அறிக்கையாகத் தருகிறது! கொடியன்குளம், தாமிரபரணி எவ்வளவு கொடுமைகள். இதனை அப்படியே மறைத்த கமிஷன்களை சுட்டுத் தள்ளினால் தான் மனசு ஆறும். பல நிலைகளில் வஞ்சிக்கப்பட்டுக் கிடக்கும் நம் மக்களுக்கு எழுச்சி உணர்வூட்டும் நல்ல பணி மேற்கொள்ளும் புதியதடம் மேலும் பல நல்லவைகளை தொடர்ந்து தருக.

— ச.நாத்திக நந்தனார், சென்னை.

தலித்தியக் கருத்தாடல்களுக்கான களமாக இதழ் தொடர்ந்து வெளிவந்துகொண்டிருப்பது மகிழ்வும் நிறைவும் அளிக்கக்கூடியது. மய்ய ஊடக வலைப்பின்னல்களினூடாக, தன்னிலைகள் அலைவுற்றுக் கொண்டிருக்கும் சூழலில் மாற்று இதழ்களாக வெளிவரும் நிறப்பிரிகை, புதிய கோடாங்கி, தலித் முரசு. . . போன்ற இதழ்களின் வரிசையில் தலித் கருத்தியல் இதழாக புதியதடம் தொடர்ந்து வெளிவருவது நம்பிக்கையளிக்கிறது. குறிப்பாக தமிழக/இந்திய இடதுசாரி களைக் கேள்விக்குட்படுத்தி எழுதப்பட்ட குமரன்தாசவின் கட்டுரை கவனங்கொள்ளத் தக்கது. மாற்றுகள் குறித்து அக்கறை கொள்வதாகச் சொல்பவர்கள்கூட இன்னும் பாரதி, புதுமைப்பித்தன். . . போன்ற பிம்பங்களின் ஒளியில் கண்ணும் மனமும் கூச மயங்கிக்கிடப்பது அவலமான நிலைதான். இத்தகைய சூழலில் ஸ்டாலின் ராஜாங்கத்தின் கட்டுரை பாரதியின் பிம்பத்தினைக் குலைத்துப்போடும் பணியைச் சிறப்பாகச் செய்கிறது. தலித் விருதுகள் குறித்த சுப்பையாவின் கட்டுரையில் முன்வைக்கப் பட்டுள்ள பரிந்துரைகள் ஆழ்ந்து பரிசீலிக்கப்பட வேண்டியவை. கறுப்பு இலக்கியம் குறித்த ப்ரதீபா ஜெயச்சந்திரனின் கட்டுரை இன்னும் சற்று விரிவான அறிமுகத்தை—சில புனைவுகளை வைத்து—கொடுத்திருந்தால் கூடுதல் சிறப்புற்றிருக்கும். இந்துத்துவத்தினடிப்படையிலான இந்தியதேசியம், பார்ப்பன—வேளாள—வணிகநலன்களின் அடிப்படையிலான தமிழ்த்தேசியம் போன்றவை மீட்டுருவாக்கம் செய்யப்பட்டுவரும் நிலையில் மார்க்சிய—லெனினிய—மாவோயிய. . . கோட்பாடுகளின் அடிப்படையிலான மாற்று இதழாக புதியதடம் பதிக்க வாழ்த்துக்கள்.

— வி.சுரேஷ்.மேட்டூர் அணை.



படிப்பகம்

www.padippakam.com

# THIS IS MY MOON

## திஸ் இஸ் மை மூன் (சிங்கள சினிமா)

# மனித சிதைவுகள்...

### மாரிமகேந்திரா

உள்நாட்டுப் போரின் வன் அழுத்தமும், பொருளாரதார வறுமை காரணிகளால் போினவாத இராணுவ அரசு மற்றும் பௌத்த மத அதிகார வன்முறைகளினால் வாழ்வின் அழகிய கனவுகளை எல்லாம் இழந்து மனச்சிதைவுற்ற இன்றைய ஈழத்து மனிதர்களின் அவலச் சூழலை சித்தரிக்கும் சினிமா THIS IS MY MOON

கேரள மாநில தலைநகரமான திருவனந்தபுரத்தில் ஏப்ரல் மாத இறுதியில் நடந்த வேது சர்வதேச திரைப்பட விழவில் போட்டி பிரிவில் கலந்துகொண்ட இச்சிங்கள சினிமா, பல்வேறு உலக நாடுகளிலிருந்து கலந்து கொண்ட படங்களிலிருந்து என்னை வெகுவாகப் பாதித்த படம் இது.

'மனித நேயம்' என்ற அடிப்படையில் இயங்கும் இத்திரைப்பட விழாவில் இச்சிங்கள சினிமா விருது பெறும் என்றே நம்பியிருந்தேன். இறுதியில் மொராக்கோ நாட்டுப் படம் 'அலி சூவா' என்ற வீதி வாழ் சிறுவர்களின் உலகம் பற்றிய திரைப்படத்திற்கு விருது வழங்கப்பட்டது என்னை ஏதோ செய்தது.

சிங்கள போினவாத அரசும் அதன் நீட்சியாய் பௌத்தமத நிறுவனமும் அது கொண்டிருக்கும் போலியான ஒழுக்கக் கோட்பாடுகளும், மனித ஆன்மீக வாழவை சிதைத்து, வாழ்வின் அத்தனை அம்சங்களையும் சுரண்டிய பின்னும் தொடரும் அவல வாழ்வின் மிகுதி கதையை தீர்க்கமாகப் பேசும் சினிமா THIS IS MY MOON.

போர்ச்சூழலில் உயிரை காப்பதற்காக சிங்கள இராணுவ சிப்பாயிடம் பலவந்தமற்று தன் உடலை இழக்கும் ஒரு தமிழ்ப்பெண், செல்லும் திசை தெரியாமல் அந்த சிங்கள சிப்பாயின் குக்கிராமத்திற்கே அவன் பின்னாலேயே செல்கிறாள். அந்த சிதிலமான கிராமத்தின் நிலையோ வேறு மாதிரியானது.

இராணுவ இளைஞனுக்கு ஒரு காதலி, தமிழ்ப் பெண்ணின்வருகையினால் வீரனின் காதலியின் மனப்பரப்பில் ஏற்படும் தடுமாற்றம். தன் வாழ்வு பறிபோய் விடுமோ என்கிற எண்ணத்தினால் தொடரும் வாழ்வின் நிகழ்வுகள். இராணுவத்தில் தொடர்ந்து இருக்க முடியாமல் கிராமத்திற்குத் தப்பி வந்தவனைத் தேடி வரும் இராணுவ அதிகாரிகளிடம் காட்டிக் கொடுக்கிறாள்.

சிங்கள சிப்பாயின் வறுமையான குடும்ப சூழல் இறுகிய மனநிலையில் ஸ்தம்பித்துப் போயிருக்கும் உறவுகளின் கதாபாத்திரங்கள். விரக்தியின் வடிசல்களாய் அன்பற்ற வாழ்வின் நிலை.

கிராம புத்த விகாரையில் இருக்கும் சிங்கள பௌத்த பிக்குவின் பௌத்த மத நிறுவனம் சார்ந்த வாழ்வின் கட்டுப்பாடுகள். அறியாமை நிறைந்த அப்பாவி சிங்களவர்களின் வாழ்வில் சிங்கள போினவாத அரசுகளும், அரசியலில் அதிகாரம் செலுத்தும் பௌத்தமத நிறுவனத்தின் உள்வீடுகளில் மறைந்திருக்கும் வன்முறை. அது விதிக்கும் கட்டுப்பாடுகளும், ஒழுங்கு விதிகளும் வாழ்வில் எவ்விதமான ஆன்மீக தேடலையும் தருவதில்லை என்பதை விரக்தியுற்ற வாழ்வின் ஸ்தம்பித்துப் போயிருக்கும் உறவுகளின் கதாபாத்திரங்கள் சொல்கின்றது.

இராணுவ வீரனின் சகோதரியை சுற்றிச் சுற்றி வரும் இரு இளைஞர்களின் வாழ்வு. ஒழுக்க விதிகளுக்குள் காதலை காமத்தை வைக்க முடியாது போவதை வாழ்வின் போக்கு உணர்த்துகின்றது. வறுமையும் பொருளாதார பாதுகாப்பும் தனக்கான காதலை, நேசத்தை, அன்பை, உணர்வை சமூக வாழ்வின் மேல், போலியாக வாழ வேண்டிய சமூக நிர்பந்தங்களை அவல சூழலை பெண் பாத்திரங்கள் வழியாக சொல்லப்படுகின்றது.

வேலை வாய்ப்பு ஏதுமற்ற கிராம வாழ்வில் சூதாட்ட கிளப் நடத்தும் ராணுவ சிப்பாயின் மூத்த சகோதரன். அதிலும் வருமானமற்று கிராமத்தின் ஒரு வயதானவனை ஏமாற்றி அவனுடைய பணத்தைக் கையாள்வதும்.... அடக்க முடியாத காமத்தின் அவஸ்த்தையை தமிழ்ப்பெண்ணின் மேல் பழி தீர்த்துக் கொள்வதும், இராணுவப் படையில் உயிரிழந்தவனின் விதவைப் பெண்ணிடம் தன்னை திருமணம் செய்து கொள்ளும்படி கேட்டு, அவளோ அதை நிராகரித்துவிட இவனோ வாழ்வில் விரக்தியுற்று பௌத்த பிக்குவாக மாறிவிடுவதன் வழியாக, பௌத்த மதத்தின் மேலும், ஆன்மீக தேடல் ஏதுமற்று பிக்குகளின் வாழ்வு வழிமுறைகள் மேலும் இயக்குனர் அசோக அந்தகம கேள்வி எழுப்பியிருப்பது, இன்றைய இலங்கை திரைமறைவு அரசியலில் அதிகாரம் செலுத்தும் பௌத்த மத நிறுவனங்களுக்கு கோபத்தைக் கிளரி விடக்கூடும்.

வறுமை நிறைந்த சிங்கள மக்களின் வாழ்வில் இராணுவ 'ஆள் நிறைக்கும்' வேலை வாய்ப்பினால் வருமானம் வருவதோடு, கணவன் உயிரிழந்தாலும் ஊதிய பணமும் உயிரிழப்புக்கான பணமும் வரும் என்கிற சுரண்டல் நிறைந்த வாழ்வின் கணங்களையும், விதவை பெண்களின் தனிமை வாழ்வின் காமம் என்று நீளும் இன்றைய சிதைந்துபோன சிங்களவர்களின் வாழ்வை பேசினாலும் தமிழ்ப்பெண் பாத்திரம் வழியாக ஈழத் தமிழர்களின் உள் சுமைகளை, போர் ஏற்படுத்தியிருக்கும் மன விகாரங்களை எவ்விதமான கட்டுபாடுகளுமற்று கலை மனச் செழுமையுடன் முன் வைக்கின்றது இச்சினிமா.

அனைத்து பார்வையாளர்களையும் உலுக்கிய இச்சிங்கள சினிமாவில் பிரமாண்டமான ஹாலிவுட் மயக்கும் தொழில்நுட்ப மாயைகளோ, கம்ப்யூட்டர் கிராபிக்ஸ் ஏதுமற்று ஒரு புகைப்படத்திற்கான தொழில் நுணுக்கத்தை மட்டுமே நம்பி சினிமாவிற்கான சாத்தியத்தை எட்டியிருக்கின்றது.

சராசரி சினிமாவில் கையாளப்படும் MID SHOT, LONG SHOT, CLOSE UP இவைகளை மட்டுமே கொண்ட இச்சினிமாவில் CAMERA நகர்வுகள் ZOOM, PANING, டில்ட் அப், டில்ட் டவுன் என்று எதுவுமற்று திரைப்பட வடிவத்தைத் தாண்டி ஒரு புதிய சினிமாவாக உருவெடுத்திருப்பது பார்வையாளர்களை வியப்பில் ஆழ்த்தியது.

நல்ல சினிமாவிற்கான அத்தனை உன்னதங்களும் கொண்ட இப்படத்தில் இன்றைய ஈழத்துப் போர்ச் சூழலின் சிக்குண்ட மனித வாழ்வின் துயரத்தை எவ்விதமான இன பாகுபாடுமற்று சார்பற்றும் மிகவும் அக்கறையுடனும், ஆழமாகவும் பேசியிருப்பது சிங்கள சினிமா கலைஞர்களின் அக்கறையை உணர்த்துகிறது. நல்ல சினிமாவைத் தேடும் பார்வையாளர்களுக்கு THIS IS MY MOON அதிர்வைத் தரும். ■



படிப்பகம்

www.padippakam.com

# எழுத்தறிவும் தலித்துகளும்

வீ. ஏழுமலை

ஓர் இனம் முன்னேற வேண்டுமாயின் அதற்கு வளமான முழு கல்வியறிவு என்பது அவசியம். உலக நாட்டு மக்கள் கணினியிலும் விண்கோள்களிலும் விளையாடிக் கோண்டிருக்கும்போது இந்தியாவில் மட்டும் இந்த மண்ணின் மைந்தர்கள் என்றும் ஆதிக்குடிமக்கள் என்றும் போற்றக்கூடிய தலித் மக்கள் மட்டும் இன்னும் கல்வி என்னும் வெளிச்சத்தைக் காண முடியாமல் இருட்டில் வள்ளுவரின் வாக்குப்படி குருடர்களாகத்தான் வாழ்ந்து வருகின்றார்கள்.

இதுவரை இந்தியாவை ஆட்சி செய்த அனைத்து அரசியல் கட்சிகளும் திட்டமிட்டு இந்த கல்வி மோசடியைச் செய்து வருகின்றது. ஆதிக்க வர்க்கங்களின் அரசியல் கட்சிகள் மட்டும் இதில் பங்கு கொள்ளவில்லை, பெரியாரின் விரலைப்பிடித்துக் கொண்டு வளர்ந்து வந்து ஆட்சியைப் பிடித்த திராவிடக்கட்சிகளும் தன்பணியை பங்கிட்டுக் கொண்டது. இந்த ஒரு விசயத்தில் மட்டும் அனைத்துக்கட்சிகளும் ஒரே கொள்கைக் குடையின் கீழ்தான் கைகுலுக்கிக் கொண்டது...

இந்தியா சுதந்திரம் கண்டு அய்ம்பத்தியிரண்டு ஆண்டுகள் கடந்த பின்னும் இருபது நூற்றாண்டுகள் முடிந்த பின்பும் பதின்மூன்று பாராளுமன்ற தேர்தல்களைப் பார்த்த பின்பும் இந்த இழிநிலை என்றால் அதனை எப்படி ஏற்றுக் கொள்வது?. இந்தியாவில் கல்வியறிவு பெற்ற தலித்துக்களின் சதவிகிதத்தை சற்று பாருங்கள். உங்களுக்கே உண்மை புரியும்...

| பாலினம் | தலித் | பழங்குடியினர் | தலித் மற்றும் பழங்குடியினர் அல்லாதவர் |
|---|---|---|---|
| ஆண் | 40.24 | 32.50 | 57.59 |
| பெண் | 19.03 | 14.50 | 36.98 |
| பொது | 30.7 | 23.63 | 47.67 |

இந்தியா தான் இப்படி என்றால் சமூக நீதியையும் பகுத்தறிவையும் முன்னெடுத்துச் செல்லும் ஒரே மாநிலம் என்று நாம் நெஞ்சை நிமிர்த்திச் சொல்லும் தமிழ்நாட்டின் புள்ளி விவரத்தை சற்று புழுதி தட்டிப் பாருங்கள். உண்மை புலப்படும்.

| பாலினம் | தலித் | பழங்குடியினர் | தலித் மற்றும் பழங்குடியினர் அல்லாதவர் |
|---|---|---|---|
| ஆண் | 39.47 | 23.35 | 74.88 |
| பெண் | 29.50 | 16.34 | 52.24 |

இந்த நிலையில்தான் இன்றைய தமிழ்நாடு இருந்து கொண்டிருக்கின்றது. தமிழ்நாட்டை யார் ஆட்சி செய்ய வேண்டும். கோட்டையில் யார் கொடி பறக்க வேண்டும் தீர்மானிக்கின்ற சக்தி படைத்த 4 கோடியே 77 லட்சம் வாக்காளர்களில் பாதிப் பேருக்கு மேல் எழுத்தறிவில்லை. அந்த பாதிப்பேர் யார் என்றால் இன்னும் கட்டைவிரலையும் கண்மையையும் பயன்படுத்தி பாதுகாத்து வரும் தலித் மற்றும் பழங்குடியினர் தான்.

இன்றைய குழந்தைகள் தான் நாளைய தலைவர்கள். ஆனால் தலித் மக்களின் குழந்தைகள் எந்த நிலையில் உள்ளது என்று ஆராய்ந்து பார்த்தால் அதிர்ச்சி அடைய வைக்கின்றது. ஆரம்பக் கல்வியில் சேரும் தலித் மாணவர்களின் சதவிகிதம் 16.2. ஆனால் பள்ளிப்படிப்பை இடையில் நிறுத்தும் தலித் மாணவர்களின் விகிதாசார வரிசையில் சற்று பாருங்கள்...

ஆரம்பக்கல்வி • 67.77
நடுநிலைக்கல்வி • 77.66
மேல்நிலைக்கல்வி • 77.65

இந்த மூன்று படிநிலைகளையும் தாண்டி வரும் தலித் மாணவர்கள் உயர்கல்வியில் ஓரம் கட்டப்படுகின்றனர். இந்தியாவின் மாநிலங்களில் உயர் கல்வி பயிலும் தலித் மாணவர்களின் சதவிகிதத்தை ஒற்றை வரிசையில் மட்டுமே தான் கணக்கிட முடிகின்றது.



படிப்பகம்

www.padippakam.com

| வ.எண் | மாநிலம் | சதவிகிதம் |
|---|---|---|
| 1. | தமிழ்நாடு | 9.04 |
| 2. | ஆந்திரா | 7.68 |
| 3. | கர்நாடகம் | 7.63 |
| 4. | மகாராட்டிரம் | 21.24 |
| 5. | உத்திரப்பிரதேசம் | 13.92 |
| 6. | குஜராத் | 6.80 |
| 7. | வங்காளம் | 5.06 |

இந்த தர வரிசையில் உயர்கல்வியில் தலித் மாணவர்கள் உள்ளார்கள். இங்கே தரப்பட்ட புள்ளி விபரங்கள் அனைத்தும் அரசுத் துறை சார்ந்தவை மட்டுமே. தனியார் துறையை நாம் தொட்டுக்கொள்ளவேயில்லை. அங்கு தலித்துக்களைச் சேர்ப்பதும் பார்ப்பதும் மிகவும் அரிதாகவே உள்ளது.

அனைத்து தடைகளையும் தாண்டிச் செல்லும் தலித் மாணவர்களை அங்கு உள்ள ஆசிரியர்கள் சாதி வெறிக் கொண்டு வெளியே விரட்டி அடிக்கிறார்கள்.. அனைவருக்கும் கல்வி, இலவசக் கல்வி, கட்டாயக் கல்வி என்பதையெல்லாம் வெறும் வார்த்தைக்காகவும், வாக்குகளுக்காகவும் வைத்துக்கொண்டு ஆதிக்க வர்க்கத்திற்கு மட்டுமே கல்வி என்கின்ற பழைய கல்விக் கொள்கையை வரும் எல்லா அரசும் கடைபிடித்து வருகின்றது.

சாதியின் பெயரால் கல்வி மறுக்கப்படும் நிலை இன்னும் இங்கே இருந்து கொண்டுதானிருக்கிறது. சூத்திரன் கல்வி கற்றால் அவன் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்ற வேண்டும் என்பது மனுவின் காலம். தலித் கல்வி கற்றால் அவ(ள்)ன் கண்ணைக் குருடாக்கு என்பது மக்களாட்சிக்காலம். இவர்கள் காதிலிருந்து கண்ணுக்கு முன்னேறியுள்ளார்களே ஒழிய மாறிவிடவில்லை சாதி மறைந்துவிடவில்லை.



"இதற்கு மேலும் சுமக்கமுடியாது. . .
சமையல் கட்டிலேயே கிட. . .
பெண்பிள்ளையாய் நடந்துகொள். . ."

நெற்றி சுருங்கி
பாதங்கள் ஒலி எழுப்ப
பறந்து வந்தது அறிவுரையும் ஆத்திரமும்

முகத்தில் இரண்டு சாணி உருண்டைகளை
விட்டெறியலாம் போலிருந்தது

ஆனால் சப்பாத்தி மாவு பிசைந்து
கொண்டிருந்தேன்
குனிந்திருந்ததில் மாவுடன் கலந்தது
கண்ணின் உப்பு நீரும்

பரிதாபப்படுவது போல்
போகிறபோக்கில் சில முட்களை
நெஞ்சோரம் கவனமாய்ச்
செருகிவிட்டு நடந்து போனது
ஒரு சந்தர்ப்பவாதி

தூரத்தில் இருந்தபடி
"இன்னும் வேண்டும். . ."
மனதுக்குள் ரசித்தது மற்றொன்று

ஒரு குழந்தை மட்டும்
கூடச் சேர்ந்து மாவு பிசைந்தது

என் கண்ணீரை
அன்று எல்லோரும் உண்டனர்

ப.கல்பனா.
"தாமரை" பொங்கல்மலர் / 97

www.padippakam.com

# மோகன் கமிஷனும் ராமன் கமிஷனும்

— குமரன்தாசு —

அவசரநிலை (Emergency) கால ஆண்டுகளில் வாழாத அல்லது அறியாப்பருவத்தினராக இருந்த தலைமுறையைச் சேர்ந்தவர்களுக்கெல்லாம் அந்த இருண்டகாலம் எப்படிப்பட்டவவை என ஒரு சிறிய சாம்பிளாக மு.கருணாநிதி கைது அமைந்து அனைவரையும் ஓர் உலுக்கு உலுக்கியது.

இந்த உலுக்கல் கூட்டணி தர்மத்தையும் மீறி கி.வீரமணி தவிர்த்து எல்லாத் தலைவர்களையும் "நடு இரவில் சென்றிருக்க வேண்டாம், வயதுக்காவது மதிப்பு கொடுத்திருக்க வேண்டும்" என முணுமுணுக்க வைத்தது.

ஒரு வேளை தமிழகம் தழுவிய பெரிய அரசியல் கட்சியின் தலைவர், முன்னாள் முதல்வர், இந்திய அளவில் உள்ள பெரிய சொத்துபடைத்த குடும்பங்களில் ஒருவர் மத்தியில் ஆளும் பி.ஜே.பி.யுடன் கூட்டணி வைத்துள்ள கட்சியின் தலைவர் மேலும் தனது சொந்த மருமகனே மத்திய அமைச்சராக இருக்கும் நிலை இப்படி எத்தனையோ வலிமையான பின்புலங்களைக் கொண்ட கருணாநிதிக்கே இந்த நிலை என்றால் நமக்கெல்லாம் ஜெயலலிதாவும் அவரது காவல்துறையும் என்ன மரியாதை செய்வார்கள்? என்று யோசித்ததனால் தான் இப்படி கூட்டணியையும் மீறி மூப்பனாரும், நல்லகண்ணுவும் முணுமுணுத்தனர் போலும்.

ஆனால் இந்தக் கைதே பின்பு அரசியலாக்கப்பட்டவுடன் தங்களது முணுமுணுப்பை நிறுத்திக் கொண்டு சுயநினைவு பெற்றவர்களாக தங்களது சந்தர்ப்பவாத அரசியலைப் பேச ஆரம்பித்துவிட்டார்கள்.

தமிழக மக்களைப் பொருத்தவரை "ஒரு முன்னாள் முதல்வரையே காவல்துறை இந்தப் பாடுபடுத்தும் என்றால் சாமானியரை எப்படி நடத்தும்?" என்று ஒருவகையான அச்சத்தையும் வெறுப்பையும் காவல்துறை மீது அடைந்துள்ளனர். இதுவரை காலமும் காவல்துறை வெகுமக்களைத் தாக்கியும், துன்புறுத்தியும், ஒடுக்கியும் வந்தாலும் கூட அதற்காகவே அவர்கள் வளர்க்கப்படுகிறார்கள் என்றாலும்கூட "காவல்துறை சட்ட ஒழுங்கை, பொது அமைதியைக் காப்பதற்கானது" என்ற கற்பிதத்தில் பலியாகிப்போயுள்ள பொது உளவியலை இந்தக் கைது நடவடிக்கை சற்று அசைத்துப்பார்த்துள்ளது.

* * *

காவல்துறை புரிந்த தாமிரபரணி படுகொலை கருணாநிதி கைதைவிட கொடூரமானது. ஆனால் கருணாநிதி கைது ஏற்படுத்திய அதிர்ச்சி பொதுப்புத்தியைப் பாதித்த அளவிற்கு தாமிரபரணிப் படுகொலை பாதிக்கவில்லை. இதற்கு சாதி உளவியல் முக்கியக்காரணம் என்றாலும்கூட மீடியாக்களின் பங்கு குறிப்பிடத்தக்கது.

சன் டி.வி. மட்டும் இல்லாதிருந்தால் இந்தக் கைது நடவடிக்கையில் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல் இந்த அளவிற்கு வெகுமக்கள் உளவியலைப் பாதித்திருக்குமா என்பது கேள்விக்குறியே? இந்த விவகாரத்தில் கருணாநிதியும், ஜெ.வும் வெகுமக்கள் மத்தியில் தோன்றிப் பேசவேயில்லை என்பது கவனிக்கத் தக்கது. கருத்துக்கூறல் முழுவதுமே சன் டி.வி. க்கும் ஜெயா டி.வி. க்கும் இடையிலேயே நடைபெற்றது.

துவக்கத்தில் சன் டி.வி. ஏற்படுத்திய 'அதிர்வை' ஜெயா டி.வி. மேற்கொண்ட தொடர் காட்சிப்படுத்துதல்கள், எழுப்பிய சந்தேகங்கள், கேள்விகள் மூலமாக குலைத்து 'உண்மை' எது என்ற குழப்பத்தை ஏற்படுத்தியது. இதனைத் தொடர்ந்து மக்கள் இரு வேறு அணிகளாகப் பிரிந்து கட்சி அரசியல் பேசத் தொடங்கினர்.

சன் டி.வி.யும் ஜெயா டி.வி.யும் தங்களுக்குச் சாதகமான உண்மைகளை எடிட்டிங், மிக்ஸிங், கிராபிக்ஸ் மூலமாகக் கட்டமைத்து நமது வீடுகளுக்குள் புகுந்து நமது அனுமதியின்றியே நமக்கு முன்பாக தங்களது தரப்பு நியாயங்களை?! வலிமையாக நமது காதுகளுக்குள் நுழைத்து நம் தன்னிலைகளை சிதைத்து அலைக்

"... இப்படி எத்தனையோ வலிமையான பின்புலங்களைக் கொண்ட கருணாநிதிக்கே இந்த நிலை என்றால் ..."





படிப்பகம்

www.padippakam.com

கழித்தனர். இவையெல்லாம் மீடியாவின் வலிமையை நமக்கு உணர்த்துவதுடன் மக்கள் இயக்கங்கள் இது போன்ற மீடியா பலமற்றவர்களாக இருந்து வருவதால்தான் கடந்த காலத்திலும் நிகழ்காலத்திலும் சந்தித்துவருகின்ற ஒடுக்குமுறைகளுக்கு எதிராக தமிழகம் தழுவிய வலிமையான ஓர் அதிர்வை தோற்றுவிக்க முடியாமல் அது ஒரு பிரிவினருக்கான, பகுதிக்கான பிரச்சனை என கண்டுகொள்ளாமல் பொதுப்புத்தி ஒதுங்கிப் போவதற்கு வாய்ப்பாக உள்ளது என்பதையும் இக்கைது உணர்த்துகிறது.

* * *

விடுதலைச்சிறுத்தைகள் அமைப்பின் மாநிலப்பொருளாளர் முடக்காத்தான் பாண்டி கொலை விசாரணையை சி.பி.சி.ஐ.டி. வசம் ஒப்படைக்கக்கூடாது, சி.பி.ஐ. தான் விசாரிக்க வேண்டும் எனக் கருணாநிதி அறிக்கை வெளியிட்டது நாம் அறிந்ததே. அதில் குறிப்பி த் தகுந்த விசயம் என்னவென்றால் சி.பி.சி.ஐ.டி. பிரிவு என்பது தமிழக் முதல்வர் கட்டுப்பாட்டில் உள்ளது. அவர்கள் விசாரித்தால் உண்மை வெளிவராது. சி.பி. ஐ. விசாரித்தால் உண்மை வெளிவரும் என்பதே.

கருணாநிதி முதல்வராக இருந்தவர். அவரும் சி.பி.சி.ஐ.டி. யை இயக்கியவர். அவரது சொந்த அனுபவத்திலிருந்தே முதல்வரின் கைப்பாவைதான் சி.பி.சி.ஐ.டி. பிரிவு என வாக்குமூலம் கொடுத்துள்ளார். அதைப்போலவே அவரது கைது நடவடிக்கைக்காக ஜெ. அரசு நியமித்துள்ள ராமன் கமிஷனையும் கருணாநிதி, ''மோசடியானது எனவே நாங்கள் புறக்கணிக்கிறோம்'' என்று கூறியுள்ளதும் கவனிக்கத் தக்கது. அதாவது விசாரணைக்கமிஷன், புலனாய்வுத்துறை எல்லாமே ஆளுவோருக்கு சாதகமாகத்தான் செயல்படும் அவற்றிடமிருந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் கிடைக்காது என்பது தெளிவாகிறது.

தாமிரபரணி படுகொலை தொடர்பாக கருணாநிதியால் நியமிக்கப்பட்ட மோகன் கமிஷனுக்கும் இந்த வரையரை பொருந்தும் என்பதையும் அக்கமிஷனால் தலித் மக்களுக்கு நியாயம் கிடைக்கவில்லை என்பதையும் கருணாநிதிக்கு இந்த நேரத்தில் நினைவூட்டுவோம். மேலும் பொதுவான நியாயம், உண்மை என்று எதுவும் இல்லை என்பதையும் எல்லாம் ஒரு பக்கச் சார்புடையதே என்பதையும் நாம் ஞாபகப்படுத்திக் கொள்வோம்.



''

இந்த அரசியலில் மக்களுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது? வெறும் பார்வையாளர்களாக இருப்பதைத் தவிர.

''

* * *

இந்தியத் துணைக்கண்ட அரசியலைப் பொறுத்தவரை தங்களது அதிகாரப் போட்டியாளர்களை எதிர்கொள்வதற்காக தங்களைவிடப் பெரிய அதிகார மையங்களிடம் தங்களை ஒப்படைத்துக்கொள்வது என்ற கப்ப அரசியலுக்கு நீண்ட வரலாறு உண்டு. காலனியாதிக்க காலத்தில் இங்கிருந்த குறுநில மன்னர்கள், சமஸ்தானவாதிகள் தங்களுக்கிடையிலான பங்காளிச் சண்டையில் பிரிட்டிஷாரிடமும்,பிற பேரரசுகளிடமும் தஞ்சம் புகுந்து தங்களது அதிகாரப்போட்டியாளர்களை கொன்றொழித்ததையும் அவர்களைப் பற்றிய அடையாளங்களை அழித்ததையும் நாம் அறிவோம்,

தமிழகத்தின் அன்றைக்கு ஆண்ட பாண்டியர்கள் தங்களது பங்காளிச் சண்டையில் நாயக்கர்களிடமும் இலங்கை மன்னர்களிடமும் தஞ்சமடைந்து தங்களது போட்டியாளர்களை கொலை புரிந்தனர். இன்றும் இந்த அரசியல் பாரம்பரியம் தொடருகிறது. இங்குள்ள அனைத்து அரசியல் இயக்கங்களுமே தங்களது சக போட்டியாளர்களை அழிப்பதற்காக தங்களது பொது எதிரியிடம் சரணடைவது தொடர்கதையாக உள்ளது. இதற்குக் காரணம் என்ன? பதவிசுகம், அதிகாரவெறி, வாரிசு அரசியல், பாசிச குணம் இவையன்றி வேறென்ன?

தமிழகத்தில் தி.மு.க வும் அ.தி.மு.க வும் தங்களுக்கிடையிலான அதிகாரப் போட்டியில் தொடர்ந்து காங்கிரஸ் மற்றும் பி.ஜே.பி வளர்வதற்கும் ஆதிக்கம் செய்வதற்கும் வழியேற்படுத்திக் கொடுப்பதுடன் மய்ய அரசின் அதிகாரம் மேலும் மேலும் பெருகுவதற்கும் ஒத்துழைக்கின்றன. இன்று ஆட்சி அதிகாரத்திலிருக்கும் அ.தி.மு.க தனது போட்டியாளனான தி.மு.க வை பழி வாங்க முயலும்போது தி.மு.க மய்ய பி.ஜே.பி அரசிடம் சரணடைந்து 356ஐ பயன்படுத்தக் கோருகிறது.

தி.மு.க தமிழகத்தின் இறையாண்மையில் உறுதியான பற்றுக் கொண்டிருந்தால் அ.தி.மு.க வின் பழிவாங்கும் பாசிசப் போக்குகளுக் கெதிராக மக்களைத் திரட்டி கடுமையான போராட்டத்தைத் தொடுத்து அ.தி.மு.க அரசுக்கு நெருக்கடியைக் கொடுத்திருக்க வேண்டும். மாறாக 356ஐப் பயன்படுத்தக் கோருவது மன்னர் கால பாரம்பரிய அரசியல் பண்பே தொடர்வதைக் காட்டுகிறது. இந்த அரசியலில் மக்களுக்கு என்ன அதிகாரம்

www.padippakam.com



"... இன்றைய தமிழகத்தின் பிரதான இரு தலைவர்களும் சூட்டிக் கொண்ட ஒற்றை அடையாளத்திற்கு (தலித், பெண்) எந்த அளவுக்கு உண்மையாக இருந்திருக்கிறார்கள்?..."

இருக்கிறது? வெறும் பார்வையாளர்களாக இருப்பதைத் தவிர.

* * *

நமது சூழலில் ஒற்றை அடையாளத்துடன் எந்த மனிதனும்/ மனுசியும் இருக்க முடியாதென்பதை நாம் அறிவோம். பால், வர்க்கம், இனம், சாதி எனப் பல அடையாளம் கொண்டவர்களாகவே நாம் இருக்கிறோம். இவற்றில் ஏதோ ஒன்றை தனக்கான முக்கிய அடையாளமாக நாம் ஒவ்வொருவரும் முன்னிலைப்படுத்துகிறோம்.

தன்னிலையானது இவ்வாறு ஓர் அடையாளத்தை தனக்குச் சூட்டிக்கொள்ளும்போது சமூக பொதுப்புத்தி அதனை அவ்வாறே ஏற்றுக்கொள்ளலாம். அவ்வாறு கொள்ளாமல் வேறொரு அடையாளத்தைச் சூட்டலாம். இவ்வாறு ஒருவர் தனக்கானதாக முன்னிலைப்படுத்தும் அடையாளத்திற்கு மாறாக அவரது செயல்பாடு அவருக்குள் உள்ள பிற அடையாளங்களின் நலனுக்கான உணர்வு வெளிப்பாடாகவும் அமைந்துவிட முடியும்.

சமீப காலமாக அதாவது தலித் இயக்கங்கள் தேர்தல் பங்கெடுப்பில் தீவிரம் காட்டிய பிறகு திரு.கருணாநிதி தன்னை ஓர் தலித் என்றும் தலித்துகளுக்கு மிக நெருக்கமானவர் என்றும் அடையாளப்படுத்திக்கொண்டார். இது அவரது கடந்த கால 'திராவிடன்–தமிழன்' போன்ற பேரடையாளங்களுக்கு மாறான சிற்றடையாளம் ஆகும்.

இதே போல் கருணாநிதியின் அரசியல்(அதிகார)எதிரி ஜெ. துவக்க கால அரசியல் நடவடிக்கைகளிலிருந்தே, தான் ஒரு பெண் என்ற பாலின அடையாளத்தையே தனது ஒற்றை அடையாளமாக முன்னிலைப்படுத்தினார். இதன் தீவிர வெளிப்பாடாக திரு.எம்.ஜி.ஆர். சவ ஊர்வலத்தில் பொட்டின்றி, பூவின்றி விதவைக் கோலத்துடன் எம்.ஜி.ஆர் பிணத்தின் காலடியில் சோகத்துடன் அமர்ந்து தான் எம்.ஜி.ஆரின் அரசியல் வாரிசு(?) என பொதுமக்கள் மத்தியில் ஓர் பிம்பத்தைக் கட்டமைத்தார்.

அவர் அரசியல் வாரிசா(?) இல்லையா? என்று ஆய்வதல்ல நம் நோக்கம். அது அவரே சூட்டிக்கொண்ட அடையாளம். இன்றும் அவர் எம்.ஜி.ஆர் ஆவி தனக்குள் இருப்பதான நினைப்புடன் எம்.ஜி.ஆர் விட்டுச்சென்ற கடமைகளை நிறைவேற்றுவதற்காகவே எம்.ஜி.ஆர் ஆட்சி நடத்தும் அரசியல் வாரிசாக(?) தன்னை முன்னிலைப்படுத்தி வருகிறார். இவ்வாறான ஒரு அடையாளத்தை தனக்குத்தானே சூட்டிக்கொண்டதற்காக அவர் என்றும் கூச்சம் அடைந்ததில்லை.

இதற்கான காரணங்களை எம்.ஜி.ஆர் விட்டுச் சென்ற ஆட்சி, அதிகாரம், ஆஸ்தி, கட்சி போன்றவற்றைக் கைப்பற்றும் தந்திரம் என்று கொள்ளலாம். அல்லது நமது சமூகத்தில் மிக இயல்பாக நடைபெறக்கூடிய அரசியல் தலைவர்கள், பெரியமனிதர்கள்(!?) சாவுக்கு ரத்த உறவற்ற பலரும் பல ஊர்களில் மொட்டையடித்துக்கொண்டு தலைவருக்கு தங்களது தகப்பன் ஸ்தானத்தை அளிக்கிறார்களே அது போன்ற அடிமைப்புத்தி–விசுவாசம் என்றும் கொள்ளலாம்.

இங்கு நாம் இன்றைய தமிழகத்தின் பிரதான இரு தலைவர்களும் சூட்டிக்கொண்ட ஒற்றை அடையாளத்திற்கு (தலித்,பெண்) எந்த அளவுக்கு உண்மையாக இருந்திருக்கிறார்கள் என்பதை அல்லது அவர்களது அரசியல் செயல்பாடுகள் அனைத்தும் அவர்கள் சூட்டிக்கொண்ட ஒற்றை அடையாளத்திற்குள் அடங்கி விடுகிறதா? அல்லது அவர்களுக்குள் உள்ள பிற அடையாளங்களையும் வெளிப்படுத்துகிறதா? என்பதை மட்டும் பரிசீலிக்கலாம்.

கருணாநிதி தலித் எனத்தன்னை அடையாளப்படுத்திக் கொண்டாலும் அரசு வரையரைப்படி அவர் மிகப்பிற்படுத்தப் பட்டோர்(இசை வேளாளர்)சாதியில் பிறந்தவர். சமூக நடைமுறையில் தீண்டாமைக்கு உள்ளாகாத சாதியில் பிறந்தவர். அச்சாதியைச் சேர்ந்த மக்கள் கருணாநிதியுடன் தங்களை இணைத்துக் காணவும் செய்கின்றனர்.

இடையீடு:–பத்து பதினைந்து ஆண்டுகளுக்கு முன் எங்கள் ஊரில் நடைபெற்ற ஓர் அதிமுக, காங்கிரஸ் கூட்டணி தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் வெள்ளாள சாதியைச் சேர்ந்த உள்ளூர் காங்கிரஸ் கவிஞர் ஒருவர் "கருணாநிதியின் பெற்றோர் ஆந்திராவில் இருந்து தமிழகத்திற்கு பிழைக்க வந்தவர்கள். அங்கு அவர்கள் சவரத்தொழிலும் கொட்டடிக்கும் தொழிலும் புரிந்த இழிகுலத்தோர்" என்று சாதி வெறியுடன் பேசினார். இவ்வளவுக்கும் அன்று வெள்ளாள சாதியினர் வ.உ.சி. பேரவை எனத்துவங்கி இசை வேளாளரையும் தங்களுடன் நாம் ஒரே சாதி எனக்கூறி இணைத்துக்கொண்டு பலத்தைப் பெருக்கிக்கொள்ளும் வேலையையும் செய்து வந்த நேரம் அது. இப்பேச்சைக் கேட்ட மறுநாளே இசை வேளாளர் சாதியில் பிறந்த அதிமுக தீவிர தொண்டர் ஒருவர் குடித்துவிட்டு காங்கிரஸ் கவிஞரிடம் சென்று சண்டை பிடித்தது வேறு கதை.

ஆக கருணாநிதி தன்னை தலித் எனக்கூறிக்கொள்வதை சமூகம் முழுமையாக ஏற்றுக்கொள்ளவிட்டாலும் ஆதிக்க சாதியினர் ஓரளவேனும் இந்த அடையாளத்தை ஒப்புக்கொண்டுள்ளனர். ஆனால் கடந்த காலத்தில் கருணாநிதியினுடைய செயல்பாடுகள் பெரிய அளவில் தலித் மக்களுக்கு சாதகமானதாக அமையவில்லை என்பதுடன் எதிராகவும் இருந்தது. குறிப்பாக தாமிரபரணி படுகொலைச் சம்பவத்தில் அவரது நடவடிக்கை தலித் விரோதப்போக்காகவே இருந்தது.

அதற்குப் பிறகு தமிழக தேர்தல் வரலாற்றில் இதுவரை இல்லாத வகையில் கடந்த தமிழக சட்டமன்றத் தேர்தலில் பிற சாதியின் நேரடி அமைப்புகளுக்கு கொடுத்த சீட்டுகளை விட தலித் அமைப்புகளுக்கு அதிகம் சீட்டுகள் கொடுத்ததுடன் விடுதலைச் சிறுத்தைகள், புதியதமிழகம் ஓரணியில் இணைந்து செயல்பட வாய்ப்பும் ஏற்படுத்திக் கொடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் கட்சித்



படிப்பகம்

www.padippakam.com

தலைமை என்பது மிகப்பிற்பட்ட ஒருவரது கையில் இருந்தாலும் கட்சியின் பகுதித் தலைமைகள் என்பது இடைநிலைச் சாதியினரின் கைகளில் இருப்பதால் தலித் மக்களுக்கான கட்சியாக தி.மு.க இல்லை.

இதேபோல் ஜெ.வைப் பொறுத்தவரை அவர் தன்னை ஒரு பெண் எனக் கூறிக்கொண்டாலும் பெண் என்ற அடையாளத்தைவிட அவருக்கு 'பாப்பாத்தி' என்ற அடையாளமே பொருந்துவதாக உள்ளது. ஏனெனில் 'ஜெயா டிவி' யில் சில மாதங்களுக்கு முன் ஒளிபரப்பிய மக்கள் பேட்டி ஒன்றில் அவரே தன்னை 'நான் ஸ்ரீரங்கம் ஐயங்கார் குடும்பத்துப் பெண்' என முன்மொழிந்தார். அவர் முன்மொழிந்தது மட்டுமல்ல தமிழ்நாடு பிராமணர் சங்கம் (தாம்பிராஸ்) கடந்த தேர்தலில் ஜெயலலிதாவுக்கு ஆதரவு தெரிவித்தது. மேலும் ஜெயலலிதாவிடம் தொடர்ந்து காணப்படுகின்ற சோதிடம், யாகம், மாய மந்திர, ராசிபலன், நல்லநேரம், அதிர்ஷடஎண் பார்ப்பது போன்ற (பார்ப்பன நலன்களைக் கட்டிக்காக்கும்) அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டார். மூடத்தனங்களை தனது அரசியலுடன் பிணைத்துள்ளதையும், கும்பகோணம் மகாமகக் கொலைகளையும், தமிழ்நாட்டில் அசாதாரண சூழ்நிலை நிலவும் நேரத்தில் கேரளாவிலுள்ள குருவாயூர் கோயிலுக்கு யானையையும்,75சவரன் தங்க அங்கியையும் அளித்ததையும் இணைத்துக் காணவேண்டும்.

அதாவது அவர் பூலான்தேவியோ, மாயாவதியோ அல்லது சிதம்பரம் பத்மினியோ அல்ல. ஐயங்கார் ஆத்துப் பெண். ஆகவே அவர் தன் காலில் விழுகின்ற அமைச்சர்கள், எம்.எல்.ஏக்களைக் கண்டு புன்னகைப்பதை ஆணாதிக்கத்தைப் பழி தீர்க்க வந்த புரட்சிப் பெண்ணின் ஆனந்தச் சிரிப்பு என நினைத்துவிட வேண்டியதில்லை. மாறாக சூத்திரர்களும், சண்டாளர்களும் தன் காலில் விழுந்து வணங்கித் தொழுவதைக் கண்டு பூரிக்கும் பார்ப்பன சாதியின் ஆணவக்கொக்கரிப்பு.

சிதம்பரம் பத்மினி காவல்நிலையத்தில் பாலியல் பலாத்காரத்திற்கு உள்ளாக்கப்பட்டு அவ்வழக்கு நீதிமன்றத்தில் நடந்து கொண்டிருக்கும்போது ஆதிக்க சாதி போலீசைக் காப்பாற்றுவதற்காக ஜெயலலிதா சட்ட சபையில்"பத்மினி நல்ல பெண் இல்லை, அவள் ஏற்கனவே கற்பிழந்தவள்" என்று சொன்னார். ஆணாதிக்க ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்படும் பெண்ணாக தன்னை உணர்ந்த யாராலாவது இப்படிச் சொல்ல முடியுமா? ஆனால் ஜெ. சொன்னார்.

தனது மனைவிக்கு நகைகளைப் பூட்டி தன் பின்னே இழுத்துச் செல்லும் பண்ணையாரைப்போல் ஜெ. சசிக்கு அணிகலன்களைப் பூட்டி அழைத்துக் கொண்டு திரிந்ததை சிந்தித்துப் பார்த்தால் ஜெ.யின் உண்மையான அடையாளத்தை உணர்ந்து கொள்ளலாம்.



எப்படி கருணாநிதியிடம் தலித் அடையாளத்தைவிட தீண்டாமைக் கொடுமைக்கு உள்ளாகாத ஒரு சாதியின் அடையாளம் விஞ்சி நின்று தலித் மக்களுக்கு எதிராகவும் செயல்பட முடிந்ததோ அதுபோல ஜெ.விடம் பெண் என்ற பாலியல் அடையாளத்தை விஞ்சி பார்ப்பன சாதித் திமிரே அடையாளமாக நின்று தனக்குக் கீழே படிநிலையில் உள்ளவர்களை எல்லாம் ஒடுக்க முயலுகிறது.

இந்த இரு அடையாளம் கொண்டவர்களுக்கு இடையிலான மோதலையும் அதனையொட்டி ஜெ.வின் கருணாநிதி கைது நடவடிக்கையையும் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான மோதலாக பார்க்கவியலாது. மாறாக அதிகாரப்போட்டியாளரை பழிவாங்கும் நடவடிக்கை என்றும், மிகப்பிற்பட்ட சாதி அரசியல் சக்தியின் மீதான பார்ப்பன மேலாதிக்க அதிகாரத்தின் வன்மம் நிறைந்த தாக்குதல் என்றும் பார்க்கலாம். ◆

## குறிப்புகள் சில

◆ மதிப்புரைக்கென நூல்கள் அனுப்புவோர் இரண்டு பிரதிகள் அனுப்பவும்.

◆ விற்பனையாளர்கள் விற்ற பிரதிகளுக்கான தொகையை அனுப்பி உதவவும்.

◆ அஞ்சலில் இதழ் பெறுபவர்கள் இதழ் கிடைத்ததை உறுதி செய்து அஞ்சலட்டை எழுதவும்.

◆ உங்களிடமிருந்து படைப்புகள், விமர்சனங்கள் வரவேற்கப்படுகிறது.

◆ சந்தா / நன்கொடை அனுப்பி இதழ் தொடர்ந்து வெளிவர உதவுங்கள்.

◆ சிற்றிதழ் விற்பனையாளர்கள் தேவையான பிரதிகளுக்கு எழுதவும்.

பின்அட்டை புகைப்படம்
விசுவாமித்திரன்


படிப்பகம்

www.padippakam.com

# CITIZEN
## (இது கடிகார விளம்பரம் அல்ல)

அன்புள்ள ஷரவண சுப்பையா அவர்களுக்கு,

வணக்கம் திரு. . . . சாரி சாரி நமஸ்தே ஷரவண சுப்பையாஜி, எனக்குக்கூட உங்கபேருதான். என்ன ஒரு சின்ன வித்தியாசம் பாருங்க நீங்க வடமொழி ஷரவணன். நான் தமிழ் சரவணன். நான் உங்களோட படம் அதாங்க சிட்டிசன் பார்த்தேன். எங்க ஊர்ல கடிகாரத்தத் தான் சிட்டிசன்னு சொல்லுவாங்க. அதையே நீங்க படத்துக்குப் பேரா வச்சிட்டிங்க. உங்க படம் பார்த்ததுல இருந்து தூக்கமே வரலங்க. அந்த அளவுக்கு அற்புதமா எடுத்திருக்கீங்க. நான் படம் ஆரம்பிக்கும் போது அதிர்ச்சியாயிட்டேங்க. என்னடா இது படத்துல சிட்டிசன்னு பேரப் போட்டுட்டு ஏசுநாதர் எல்லாம் வர்றாரேன்னு. அப்புறம் தான் தெரிஞ்சுச்சு. வக்கீல் படிப்ப முடிச்சுட்டு வர்ற அஜித்துன்னு. நீங்க அதிகமா இங்கிலீசுப் படம் பாப்பீங்கன்னு நெனக்கிறேன். அதான் ஹாலிவுட்டுக்காரங்க மாதிரி படம் எடுக்கப் பார்த்துருக்கிறீங்க. ஆனா முடியல. ஜெட்லி படம் வேற பாத்துருப்பீங்க போல. அவர் தான் தரையில நின்னு சண்டை போட மாட்டாரு. அவரு கூட ஒரு நிமிசத்துக்கு ஒரு தடவையாவது கீழ இறங்குவாரு. ஆனா உங்க சிட்டிசன் கீழ எறங்காமலே சண்டை போடுறாரு.

அடுத்து உங்க சிட்டிசன் கடத்துறாரு பாருங்க வக்கீலு, கலெக்டரு, டி.ஜி.பி.ன்னு. அதுல வக்கீலக் கடத்துறதக்கூட ஓரளவுக்கு ஏத்துக்கலாம். ஆனா அந்த கலெக்டரையும், டி.ஜி.பி யையும் கடத்துறப்ப அங்க வர்ற மந்திரியால சிட்டிசனோட வேடத்தையும், குரலையும் வச்சுமா கண்டுபிடிக்க முடியல? இந்த விசயத்துல நீங்க எங்கள கேணப்பயலாக்குறீங்களா?, இல்ல நீங்க தான் கேணப்பயலான்னு முதல்ல சொல்லிருங்க.

அடுத்து நம்ம சிட்டிசனைக் கண்டுபிடிக்க வர்றாங்களே நக்மா, அவங்க இன்வஸ்டிகேட் பண்ற ஒவ்வொரு சீன்லயும் புல்லரிக்க வச்சிட்டிங்க. அதுலயும் சிட்டிசனைத் துரத்துரப்ப ஓடுறதக் காட்டுறீங்களோ இல்லயோ தொப்புளக் கரெக்டாக் காட்டறீங்க. இந்த மாதிரி சீரியசான சீனைக் கூட கிளாமராக்க உங்கள மாதிரி ஆட்களால தான் முடியும். அடுத்து நம்ம சிட்டிசனோட காதலி வசுந்தராதாஸ் சிட்டிசன் ஒரு தீவிரவாதின்னு தெரிஞ்சும் காதலிக்கிறாப்புல எடுத்திருக்கீங்க. இதப்பாத்துட்டு நம்ம பொண்ணுக வீரப்பனுக்கு லவ் லெட்டர் அனுப்பிறப் போறாங்க.

அடுத்ததா கதைக்கு வருவோம். ஒடுக்கப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மீனவர்கள் படுற கஷ்டத்தையும் அவுங்களுக்கு அரசாங்கம் கொடுக்கிற சலுகைகளை அரசியல்வாதியும், அதிகாரவர்க்கமும் வாங்கித் திண்ணுப்புட்டு அதைத் தட்டிக் கேட்க இவுங்க போறப்ப அவுங்களையும் கொன்னுட்டு அந்த அத்திப்பட்டின்ற கிராமத்தையே மேப்புல இருந்து எடுத்துர்றாங்கன்னு சொல்லியிருக்கீங்க. கூடவே அஜித் மூலமா நம்ம அரசாங்கம் நல்லவங்கதான், ஒன்னு ரெண்டு அரசியல்வாதியும், அதிகாரவர்க்கமும் தான் கெட்டவங்கங்குற மாதிரி சொல்லியிருக்கீங்க. இதுக்கு உங்களுக்கு நேசனல் அவார்டே கிடைக்கும்.

வெண்மணியில 43 தலித் மக்களை ஒரு ரூபாய் கூலி அதிகமாகக் கேட்டதுக்காக ஒரு பண்ணையார் எரிச்சுக் கொன்னுட்டான்னு கேள்விப்பட்டிருக்கேன். ஆனா அந்த ஒடுக்கப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மீனவர்கள் தங்களோட உரிமையைக் கேட்டதுக்காக 690 பேரையும் பத்து குண்டர்களை வச்சிக் கொல்றத தத்ரூபமா எடுத்துருக்கீங்க. இந்த சீன்ல பொம்பள மட்டுமல்லாம ஆம்பளகளையும் கண்ணு கலங்க வச்சிட்டிங்க. ஆனா ஒன்னு, பத்து பேரு சேர்ந்து 690 பேரைக் கொல்லுறதுதான் கொஞ்சம் ஓவரா இருக்கு. என்ன செய்றது மீனவர்கள் எல்லாரும் உங்க படத்துல வசனம் எழுதிருகாக்காரே பாலகுமாரன் அவர மாதிரி சாம்பார் சோறு தின்னுப்புட்டு உக்காந்து எந்திரிக்கிற வர்க்கம் பாருங்க அவங்களுக்கு பத்து பேரே அதிகந்தான்.

ஆனா அதுக்குத் தீர்வுன்னு ஒன்னு சொல்லியிருக்கீங்க பாருங்க அதுலதான் உங்கள எனக்கு ரொம்பப் புடிச்சிருக்கு. எந்த அரசாங்கத்தால பாதிக்கப் பட்டாங்களோ அந்த அரசாங்கத்துகிட்டயே நியாயம் கேக்குறீங்க பாருங்க நீங்க தான் உண்மையான புரச்சிக்காரன்.

அதுலயும் அந்த அரசியல்வாதிய மக்கள் தேர்தல்ல தோற்கடிச்சு அனாதை ஆக்கிட்டாங்க. அதனால அவன விட்றலாம்னு சொல்லிருக்கீங்க. ஆட்சில இருக்கும்போதே பல கோடி ரூபாய் ஊழல் பண்ணி கோர்ட்டுல நிரூபிக்கப்பட்டு தேர்தல்ல நிக்கக்கூடாதுன்னு சொன்னவங்கல்லாம் முதலமைச்சரா ஆன கதை உங்களுக்குத் தெரியாது போலிருக்கு. என்ன செய்யறது நீங்க தான் தமிழன் இல்லயே, இந்தியனாச்சே. அடுத்து அந்த அதிகாரிங்க மூனு பேருக்கும் குடியுரிமைகளையும், அவங்களோட உறவினர்களோட குடியுரிமைகளையும் பறிக்கனும்னு சொல்லுறீங்க பாருங்க நீங்க எங்கயோ போயிட்டிங்க.

அரசியல்வாதியும், அதிகாரியும் சட்டத்தையே தனக்குச் சாதகமா மாத்தி எழுதுற இந்தக் காலத்துல நீங்க சொன்ன தீர்ப்பு சரிதாங்க. உங்க சிட்டிசன் அறிவானந்தமாப் பொறந்து அந்தோணியா வளந்து அப்துல்லாவா பழிவாங்கறாருன்னு போராட்டத்துக்கு புது இலக்கணமே படைச்சிட்டீங்க போங்க.

அதிகாரவர்க்கத்துக்கு ஒரு எச்சரிக்கைன்னு சவால் விடுறது அப்புறம் அவனுககிட்டயே நியாயம் கேட்குறது எல்லாம் உங்கள மாதிரி அரைப்பைத்தியத்தால தான் முடியும். பேசாம நீங்கல்லாம் விக்கிரமன் மாதிரி, கே.எஸ்.ரவிக்குமார் மாதிரி காதல், காமெடி, கத்தரிக்காய்னு ஏதாவது ஒரு எழவ எடுத்துத் தொலைக்க வேண்டியதுதான. மக்களப் புரச்சிப்படுத்துறேன் புண்ணாக்காக்கறேன்னு எங்க உயிர ஏண்டா எடுக்கறீங்க?

இப்படிக்கு
**சரவணன்.**


படிப்பகம்

www.padippakam.com

## வந்தவை

**உயிர்நிழல்**
EXIL, 27, Rue Jean Moulin, 92400 Courbevoie, France.

**கலை**
26 பாரதிதெரு, கெல்லியம்மன் நகர்,
அம்பத்தூர், சென்னை—58

**தமிழீழம்**
The Editor, BM Box 6769, London WCI 3XX, UK.

**செம்பருத்தி**
Aruvi, 197,Taman Magah, 72100 Bahau, NSDK, Malaysia.

**சிந்தனையாளன்**
19 முருகப்பா தெரு(மாடி), சேப்பாக்கம்,சென்னை—5

**நாளை விடியும்**
4/7. முருகன் இல்லம். பாரதிபுரம் முதல்தெரு,
கைலாசபுரம் (அஞ்சல்). திருச்சி — 620 014.

**சமர்**
P. Rayakaran, 32, Rve Trouillet Derel, 92600,
Asnleres Sur Seine, France.

**மள்ளர்மலர்**
10/2 நால்வர் நகர்,பாரதியார் பல்கலைக்
கழகம் (அஞ்சல்) கோவை—641046

**ஏழைதாசன்**
26.அடப்பன்வயல் 8வது வீதி, புதுகை—622002.

**தென்செய்தி**
17/1 நரசிம்மபுரம், மயிலை, சென்னை—4

**உறவு**
6/5 கிழக்கொரட்டியார் தெரு, காரைக்குடி—630 001.

**அம்மா**
S.Manokaran (Esc.13), 210, Ave,due 8Mai 1945, 93150
Le Blanc mesnil, France.

**புதியகாற்று**
41.A. சண்முகம்பிள்ளை 2வது தெரு, அழகரடி,
மதுரை—16.

**சொல்புதிது**
L-486, பெரியார் நகர் முதல் பிரதான சாலை,
ஈரோடு—638 009

**ஆசை**
பங்காரு மேன்சன், 22 திருவள்ளுவர் சாலை,
திண்டுக்கல்—3

**யாத்ரா**
37,Dhankantta Road, Mabola, Wattala-11300. Sri Lanka.

**குயில்தோப்பு**
P.Box.No.17629, Malad (west) Mumbai-400 064.

**தொரட்டி**
3/210, பிரதானசாலை, கிருஷ்ணா நகர்,
திருப்பாலை அஞ்சல். மதுரை—14.

**சிலம்பம்**
பண்பாடு மக்கள் தொடர்பகம்,
லொயோலா கல்லூரி, சென்னை—34.

**நந்தவனம்**
8. வெள்ளாளத்தெரு, உறையூர், திருச்சி—620 003.

**மக்கள்களம்**
21. /1. திருக்கழுக்குன்றம் சாலை,
செங்கல்பட்டு—603 002.

**தேசபக்தன்**
T.Nazeerataf, Post Books-10 5125 Bovagan, Norway.

**எக்ஸில்**
B.P-204, 92604, Asnieres Cedex France.

**பயணம்**
L.56.K.V.Temple Street,Sultanpet, B'lore-560 053.

**தேடல்**
70 தெற்கு ரத்தினசபாபதி தெரு, திருநகரம்,
அருப்புக்கோட்டை—626 101.

**ஏர்**
105 பாரதி விடுதி, ம.கா.பல்கலை,மதுரை—21

**கனவு**
8/707.C. பாண்டியன் நகர், திருப்பூர்—641 602.

**சுந்தரசுகன்**
இரண்டாவது தெரு,நகராட்சி குடியிருப்பு,
தஞ்சாவூர்—613 007.

**கேப்பியார்**
9/164, பரணியறத்தலவிளை, களியக்காவிளை 629 153.

**காலக்குறி**
18இ அழகிரி நகர் 2வது தெரு,வடபழனி,
சென்னை—26.

**யாதுமாகி**
6 பருவதசிங்கராஜ தெரு, திருநெல்வேலி.

**வேர்கள்**
10 அ வாத்துக்காரத் தெரு, உறையூர், திருச்சி—3

**முங்காரி**
புலமைப்பண்ணை,சுகர்கேன்(அஞ்சல்) கோவை—7

**நந்தலாலா**
133—1/1 Dimbula Road, Hotton, Srilanka.

**மூன்றாவது மனிதன்**
37/14 Vauxhall lane, Colombo -02

**ப்ரவாகம்**
9, Matale Road,Ukuwela, Post Code 21300, Srilanka.

**பழங்காசு**
1/385 சீதக்காதி தெரு, காட்டூர்(தெற்கு),திருச்சி—19

**அன்றில்**
நகர்மன்றத்தெரு, பாகூர்—607 402. புதுவை.

## நூல்கள்

**இரவு என்பது உறங்க அல்ல**
கவிதைகள்—யவனிகாஸ்ரீராம் 6/5/10. TSUV.வீரணன் தெரு,சின்னாளப்பட்டி—624 301.

**வயலட் நிற பூமி**
கவிதைகள்—அப்பாஸ் 14—D,1/16, திருநகர் 3வது தெரு,பசுவந்தன ரோடு,கோவில்பட்டி—628 501.

**பொற்கணம்**
கவிதைகள்—ஆ.அமிர்தராஜ் விருட்சம் — 7,ராகவன் காலனி, மேற்கு மாம்பலம், சென்னை—33

**சங்கமித்ரா விடையளிக்கிறார்**
கேள்வி பதில்கள்— 19,முருகப்பா தெரு, முதல்மாடி, சேப்பாக்கம், சென்னை — 5.

**யுத்தத்தின் இரண்டாம்பாகம்**
சிறுகதைகள்—சக்கரவர்த்தி — EXIL வெளியீடு. லெனா.குமார்—யாதுமாகி, 6.பருவத சிங்கராஜ தெரு,நெல்லை—6

**சிறந்த திருமணம் செய்வது எப்படி**
கட்டுரைகள்—மஞ்சை வசந்தன், அறிவுச்சுடர் வெளியீடு,101—103,பர்மா குடியிருப்பு, திருச்சி—13

**சுயமரியாதைக்காரர்களின் சிந்தனைக்கு**
கட்டுரைகள்—வே.ஆனைமுத்து, அறிவுச்சுடர் வெளியீடு,101—103,பர்மா குடியிருப்பு, திருச்சி—13

www.padippakam.com

# நரவேட்டை

மேகவண்ணன்



முன்னோடும்
மரங்களோடும் மட்டும் வாழ்கிற
ஆதிமனிதர்கள்
நரமாமிசம் உண்பதாய் புனைகிற
ஆங்கிலப் படமொன்றை *
அண்மையில் பார்த்தேன்.

ருவாண்டாவிலும்
பென்ஸில்வேனியாவிலும்
வெறிதீராமல்
ஆப்பிரிக்காவின்
கறுப்பு மனிதர்களையும் அவர்களின்
பச்சைவனங்களையும்
படைநடத்தி அழித்து முடிக்கிற
உங்கள் வெள்ளை இனவெறி
புழுத்த மூளையிலிருந்து உதிர்கின்றன
இந்த நரமாமிசக் கற்பனைகள்.

உண்மையில்
மனிதர்களை
மனிதர்களே உண்கிற நரமாமிச வேட்கை
உங்களின் யூத, ஆரியத் தினவுகளில் அல்லவா
பிறக்கின்றன!

அது
எத்தியோப்பியாவின் எலும்பு மனிதர்கள்
வரையல்லவா
விடாமல் சுவைக்கின்றது?

முதலாம், இரண்டாம்,
மூன்றாம் உலக நாடுகளை நிர்மானித்த
உங்கள் G7 வட்ட மேசைகளிலும்
வெள்ளைமாளிகை விருந்து மண்டபங்களிலும்
பரிமாறப்படுவது
தமிழனின், ஈழத்தமிழனின்
உதிரம் நிறைந்த கோப்பைகளல்லவா,

அதில் மதுவை மெலிதாகக் கலந்து
முகம் சுளிக்காமல் நீங்கள் பருகுவதை
உங்கள் தொலைக்காட்சிகள் தானே
எங்களுக்குக் காட்டின

போஸ்னியர்களின்
கம்போடியர்களின்
பலஸ்தீனியர்களின்
சதைத்துண்டுகள் என்றால்
விரும்பி உண்பீர்களாமே. . .?

ஜெயலலிதாக்களின் 'வெற்றி' விருந்தில்
மூப்பனார்களின் 'பண்ணை'த்தோட்ட
விருந்தில்
சுப்பிரமணியன் சுவாமியின் 'மாமா' விருந்தில்
என்ன உண்டார்கள் எல்லோரும்?

பொலிவியாவின் புதைகுழியினின்று
சேகுவாராவின்
எலும்புக்கூடுதானே கிடைத்தது
சதைத்துணுக்குகளை எவன் தின்றது?

போல்பாட்டின்
முழு உடலையும்
எத்தனைபேர் தின்றீர்கள்?

நிணவாடை வீசும்
நாற்றமெடுத்த வாயோடு
யாரைச் சொல்வீர்கள்
நரமாமிசம் உண்பதாக?
புத்திலங்கையில் புத்தன் தின்னாததா?

உண்மையில்
எண்ணிக்கையில்
பழங்குடி மனிதர்கள் குறைகிறார்கள்
உங்களது உணவுத்தட்டுகளும்
உதிரக் கோப்பைகளும்
மறுபடி நிறைகின்றன.

* Mountains Of The Cannibals God – பழைய ஆங்கிலத் திரைப்படம்.



படிப்பகம்

www.padippakam.com

# என்.டி. ராஜ்குமார்



வீட்டில் என்மகள்
பரதநாட்டியம் பயில வேண்டுமென்று
அடம் பிடித்தழுகிறாள்

எனக்கு அருவருப்பாக இருக்கிறதென்றேன்
குழந்தையின் அழுகையில் ரெண்டும் கெட்டிருந்தது மனசு

எங்கிருந்து பொறுக்கியெடுத்தாளோ பாட்டி
ஒடக்கில் பக்கத்து வீட்டுக்காரியை போ
கூத்திச்சி மொவளே என்கிறாள்

வரலாற்றிற்குள்ளிருந்து நட்டுவன் பாடுகிறான்
(நட்டுவன் = அரசவைக்காரர்களுக்கு பெணகளைக்
கூட்டிவிடும் தாசி குலத்தோன்)

விவரம் புரியாத வயதில் வந்த மாணவி ஆடுகிறாள்
(மாணவி = தொழிலுக்குப் புதிதாகக் கொண்டுவரப்பட்டவள்)

ஆண்டவன் ஒரு அந்தணனைப் போல
வெட்கங்கெட்டு ரசித்துக் கொண்டிருக்கிறான்

அப்பியாசக்காரனுக்கு நட்டுவாங்கம்

தாசி குலத்திற்கு சதிராட்டம்

கோவிலுக்குள் நடந்த தேவடியாத் தனத்திற்கு
கூட்டு நின்றவன் கூத்தரசனா?

படிப்பகம்